KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 14 மார்ச் 2025 இதழ்:- 11

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Manulife Desjardins Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# நாடு அநுராவோடு! ஊர் எங்களோடு!
## உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்
## தமிழ்மக்களிடம் எடுபடுமா இந்தச் சுலோகம்?



நீண்ட காலமாக தாமதிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்களை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியிருக்கிறது. அரசியல் கட்சிகளும் குழுக்களும் மார்ச் 17ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நியமனப் பத்திரங்களை கையளிக்கலாம். அனேகமாக மே மாத முற்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (17ம்பக்கம் பார்க்க)



# அல்ஜசீராவில் சிக்கிய ரணில்!

ஜநாவின் 58ஆவது கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில் ரணில் விக்ரமசிங்கவை அல்ஜசீரா அம்பலப்படுத்தியிருக்கிறது. 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (9ம்பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்



# யாழ்ப்பாணமே உனது பசி எது? தாகம் எது?




அண்மையில் பலாலி வீதியில் பல்கலைக் கழகத்தில் இருந்து நடந்து போகக் கூடிய தூரத்தில் ஓர் உயர்தர உணவகம் திறக்கப்பட்டது. அதன் பெயர் டெலிஸ் அதற்குச் சில கிழமைகளுக்கு முன்பு அதே பலாலி வீதியில் மற்றொரு உயர்தர உணவகம்-காலித் பிரியாணி-திறக்கப்பட்டது. முன்சொன்ன உணவகத்தில் இருந்து நடந்து போகக்கூடிய தூரத்தில் இந்த உணவகம் உண்டு. இந்த இரண்டு உணவகங்களும் திறக்கப்படுவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணம் நகரத்தின் மையத்தில் முன்பு வெலிங்டன் தியேட்டர் அமைந்திருந்த (15ம்பக்கம் பார்க்க)

ஈழநாடு

எதிர்பாருங்கள்! பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை விபரங்கள் உள்ளே!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**



RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers

## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

## Piravien Siva

Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



22 Years Real Estate Experience

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3

Independently owned and operated

**Bus: 416-289-3333**

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Warden/Finch




**Scarborough** **$424,900**

2 Beds • 1 Baths • 6 Rooms

Walking distance to school

### Kennedy / Hwy 401



**Scarborough** **$429,900**

1 Beds • 1 Baths • 5 Rooms

Newly Renovated Unit

### Markham / Sheppard Ave




**Scarborough** **$479,000**

1 Beds • 1 Baths • 3 Rooms

Corner Condo Townhouse

### McCowan / Ellesmere




**Scarborough** **$599,000**

2 Beds • 2 Baths • 5 Rooms

Just A Short Walk To STC

### Mccowan & Hwy 401




**Scarborough** **$549,900**

2 Beds • 2 Baths • 5 Rooms

Corner suite, unobstructed views

### Kennedy / 401




**Scarborough** **$538,000**

2 Beds • 1 Baths • 5 Rooms

Open Concept Living-Dining

### Simcoe St / 401



**Oshawa** **$575,900**

3+1 Beds • 2 Baths • 5+1 Rooms

Newly Painted, 1100+ Sqft

### Grandview Dr. / Bloor




**Oshawa** **$649,800**

2+2 Beds • 2 Baths • 7+4 Rooms

Upgraded floor, Newly renovated

### 9TH LINE / HIGHWAY 7




**Markham** **$1,100,000**

4 Beds • 4 Baths • 9 Rooms

luxury freehold townhouse

### Dixie/ Glenanna




**Pickering** **$799,000**

3 Beds • 2 Baths • 6 Rooms

Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E




**Ajax** **$799,000**

3 Beds • 3 Baths • 8+3 Rooms

No maintenance fees Townhouse

### Markham & Ellesmere



**Scarborough** **$1,050,000**

3+1 Beds • 2 Baths • 6 Rooms

Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol



**Scarborough** **$1,099,900**

3 Beds • 3 Baths • 7+2 Rooms

Hardwood flooring throughout

### 401/Morningside




**Scarborough** **$1,249,000**

4+2 Beds • 4 Baths • 12 Rooms

Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr




**Stouffville** **$1,499,999**

4+1 Beds • 4 Baths • 10 Rooms

3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park



**Stouffville** **$999,000**

4 Beds • 3 Baths • 8 Rooms

Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# கடந்த காலங்களில் சிங்களஇளைஞர்கள் கொல்லப்பட்டமைக்கு ரணிலே காரணம்!

தென்னிலங்கையில் கலவரங்கள் இடம் பெற்ற காலப்பகுதியில் சி˙கள இளைஞர்கள் கொலை செய்யப்பட்டமைக்கும் அப்போதைய இளைஞர் விவகார அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தொடர்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இளைஞர் விவகார அமைச்சராக இருந்த போது பட்டலந்தை உள்ளிட்ட சித்திரவதைக் கூடங்களில் இளைஞர்களைக் கொலை செய்ததாக இந்திராந்த சில்வா என்பவர் தெரிவித்துள்ளார்.

இளைஞர்களைக் கொலை செய்யும் நடவடிக்கைகளில் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு ஈடுபட்டார் என்பதை இந்திராந்த சில்வா தனது கண்களால் பார்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொலைகள் நடப்பதற்கு முன்பு இந்த முன்னாள் இராணுவ அதிகாரி புகைப்படங்களை எடுத்ததாகவும் கூறப்படுகிறது. எனவே, இந்தக் குற்றங்கள்குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்வதாக இந்திராந்த சில்வா மேலும் கூறினார்.



இதேவேளை பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை 14 மார்ச் 2025 நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரணில் இலக்கு வைக்கப்பட்டாரா?

அறகலய போராட்டத்தை அமெரிக்கா விரும்பியது போல் முன்னெடுப்பதை தடுத்தமையால் தான் ரணில் விக்கிரமசிங்க இலக்கு வைக்கப்படுகிறார் என்று கோட்டாபய ஆதரவு அரசியல்வாதி உதய கம்மன்பில தெரிவித்திருக்கிறார். இலங்கையில் எது நடந்தாலும் அதனை சதிக் கோட்பாடுகளோடு தொடர்புபடுத்துவது ஓர் அரசியல் நோயாகவே இருக்கிறது. இதில் சிங்கள அரசியல் சூழல், தமிழ் அரசியல் சூழல் என்னும் பாகுபாடுகள் இல்லை.

வடக்கில் ஓர் அரசியல்வாதி வீதியில் தடுக்கி விழுந்தாலும் அதற்கு பின்னால் வெளியக உளவுச் சதி இருப்பதாகக் கூறுமளவு நிலைமை இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்க அல்ஜசீரா ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலைத் தொடர்ந்து ரணில் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டதான பார்வையொன்றை தென்னிலங்கையில் ரணிலின் ஆதரவாளர்கள் கூறமுற்பட்டனர் அதனை தற்போது கோட்டாபய ஆதரவுத் தரப்பினரும் கூறுகின்றனர்.

ரணில் தன்னுடைய அரசியல் அனுபவத்திலும் வித்துவத்திலும் செருக்குக் கொண்டே அந்த நேர்காணலை எதிர் கொள்ள முற்பட்டார். ஒரு கட்டத்தில் தடுமாறி, 'நீங்கள் பிறப்பதற்கு முன்பிருந்தே அரசியலில் இருக்கிறேன்', என்றும் கூறுகிறார்.

ஆனால், நேர் கண்டவர் துறைசார் அனுபவம் மிக்கவர், பல விவாதங்களில் களம் கண்டவர். இதனால் ரணில் சிக்குப்பட்டு விட்டார். அதிலும், ரணிலின் பக்கத்தில் வாதிடுவதற்கு விடயங்கள் இருக்கவில்லை. காரணம் இலங்கைத்தீவில் ரணிலின் காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

ரணில் ஜனாதிபதியாக வந்த பின்னர் மேற்குலக ஊடகங்களில் நேர்காணல்களை வழங்கியிருக்கிறார். இதற்கு முன்னரும் நேர் கண்டவர் மீது கோபப்பட்டு சத்தமிட்டிருக்கிறார். விடயங்களை எதிர் கொள்ள முடியாமல் போகின்ற போது, 'நீங்கள் பிறப்பதற்கு முன்னரே அரசியலில் இருப்பவர்', என்று கதை விடும் பழக்கம் ரணிலிடம் உண்டு. ஆனால், அது இம்முறை எடுபடவில்லை. ரணில் மேற்கு சார்பானவர். குறிப்பாக, அமெரிக்க ஆதரவாளர் என்னும் பார்வை பழையது. அது முன்னரைப் போன்று இப்போதும் பெறுமதியுடையதாக இருப்பதாகக் கூறமுடியாது.

ரணிலின் கருத்துகளும் இப்போது அவ்வாறு இருப்பதாகக் கூற முடியாது. நல்லாட்சி காலத்தில் தான், ரணில் விக்கிரமசிங்க அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கியிருந்தார். ரணிலின் இந்தத் தீர்மானம் இந்திய மட்டத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. அமெரிக்காவையும் சங்கடப்படுத்தியது. சீனாவின் கடன் பொறி இராஜதந்திரத்துக்கான ஒரு குறியீடாகவே அம்பாந்தோட்டை விவகாரத்தை அமெரிக்க ஊடகங்கள் வர்ணித்து வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு முதன்மையான அரசியல்வாதியாக நோக்கப்படும் நிலையில் இல்லை காரணம் அவருக்கு மக்கள் செல்வாக்கு இல்லை. ரணில் என்னதான் தன்னைப் பற்றிய அரசியல் விம்பத்தை காண்பித்தாலும் கூட அவரால் சாதாரண சிங்கள மக்களின் ஆதரவை கவர முடியவில்லை. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை திட்டமிட்டு பலவீனப்படுத்தும் தேவை எவருக்கும் இல்லை. தவிர, இலங்கையை மேற்குலகம் உற்றுநோக்கிக் கொண்டிருக்கவுமில்லை. தவிர, ரணிலை நேர்கண்ட ஊடகம் அப்படியொன்றும் அமெரிக்க ஆதரவு ஊடகமும் அல்ல.

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் குற்றவியல் வலையமைப்பை இயங்கியதாக சட்டமா அதிபர் குற்றச்சாட்டு!

தேசபந்து தென்னகோன் தனது அதிகாரத்தின் கீழ் உள்ள பொலிஸ் அதிகாரிகளைப் பயன்படுத்தி ஒரு குற்றவியல் வலையமைப்பை இயக்கியதாக சட்டமா அதிபர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளார்.

தென்னகோனின் கைது நடவடிக்கையை நிறுத்தக் கோரிய மனுவை விசாரித்த போது கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரிகளைப் பயன்படுத்தி வெலிகமவில் உள்ள ஹோட்டல் மீது தாக்குதல் நடத்த அவர் திட்டமிட்டதாகக் மேலதிக மன்றாடியார் நாயகம் திலீப பீரிஸ் கூறினார்.

ஒரு பொலிஸ் சார்ஜென்ட் மரணத்திற்கு வழி வகுத்த இந்த சம்பவம், தென்னகோனுக்கும் ஹோட்டல் உரிமையாளருக்கும் இடையிலான தனிப்பட்ட தகராறுடன் தொடர்புடையது என்று பீரிஸ் கூறினார்.

தென்னகோன் தனிப்பட்ட மோதல்களைத் தீர்க்க பொலிஸாரை 'துணை ராணுவப் படையாக' பயன்படுத்தியதாக பீரிஸ் மேலும் வெளிப்படுத்தியுள்ளார்.

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# கனேடிய உலோகத்திற்கு இரட்டிப்பு (50வீதம்) வரி விதிப்பை இடைநிறுத்திய அமெரிக்க அதிபர் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனேடிய அலுமினியம் மற்றும் உருக்கிற்கான 25வித வரியை இரட்டிப்பாக்கும் தனது திட்டத்திலிருந்து இடைநிறுத்த தீர்மானித்துள்ளார்.

ஒன்டாரியோ அரசு மின்சார வரி விதிப்பினை தற்காலிகமாக நிறுத்திய தனைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கனடா மீதான இந்த வரிகளை குறைக்க வாய்ப்புள்ளது என்று ட்ரம்ப் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். மேலும், ஒன்டாரியோ முதல்வர் டக் போர்டை 'மிகவும் வலுவான மனிதர்' என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அவர் (போர்ட்) இந்த (மின்சார வரியை) அமல்படுத்தியிருந்தால் அது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

எனினும் போர்ட் மின்சார விநியோகம் மீது வரி விதிக்கப் போவதில்லை எனவும் இதனால் நான் அதற்கு மரியாதை செலுத்துவதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, 25வீத கனேடிய உலோக வரியை இரட்டிப்பாக்கும் திட்டம் இல்லை என்று வெள்ளை மாளிகை உறுதி செய்தது.

11 மார்ச் 2025 செவ்வாய்க்கிழமை காலை ட்ரம்ப் கனேடிய உலோகத்திற்கு 50வித வரி விதிக்கப்படும் என்று எச்சரித்திருந்தார். கனடா பெரிய பொருளாதார தண்டனை அனுபவிக்கும் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

# அமெரிக்கா மீது விதிக்கப்பட்ட வரியை தற்காலிகமாக நிறுத்திய ஒன்றாறியோ மாநில முதல்வர் டக்போர்ட்

அமெரிக்காவுக்கு விநியோகம் செய்யப்படும் மின்சாரத்திற்காக விதிக்கப்பட்ட 25வீத கூடுதல் வரிச்சுமை தற்காலிகமாக நீக்குவதாக ஒன்டாரியோ மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது. ஒன்டாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட், இந்த வரி விதிப்பினை இடைநிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார்.

அமெரிக்க வர்த்தக செயலாளர் ஹோவர்ட் லட்னிக், வொஷிங்டனில் நடைபெறும் சந்திப்பில் பங்கேற்குமாறு டக் போர்ட்டிற்கு அழைப்பு விடுத்த தனைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாறுபட்ட கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளாமல், ஒருவருக்கொருவர் அச்சுறுத்தாமல், இந்த விவகாரத்தை சமரசம் செய்வதே நல்லது,' என முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கனேடிய உலோகம் மற்றும் அலுமினியத்திற்கு தன் வரிகளை இரட்டிப்பாக்குவதாக எச்சரித்த சில மணி நேரங்களுக்கு பின்னர் மின்சாரத்திற்காக 25 வீத கூடுதல் வரியை விதிப்பதாக ஒன்டாரியோ அறிவித்திருந்தது.

ஒருவர் சமரசமாக நெருங்கி பேச விரும்பும் போது, அவர்களை புறக்கணிக்கக்கூடாது என போர்ட் தெரிவித்துள்ளார்.

இன்று 14 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளுடன் கனேடிய நிதியமைச்சர் டொமினிக் லெப்லாங்க் உடன் இணைந்து போர்ட் யு.எஸ்.எம்.சி.ஏ. (USMCA - United States-Mexico-Canada Agreement) வர்த்தக ஒப்பந்தத்தின் மீள் பேச்சுவார்த்தைக்கு கலந்து கொள்ள உள்ளார்.

நாங்கள் எதற்காகவும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. ஒரு நேர்மையான, நியாயமான, மற்றும் இரு தரப்புக்கும் பயனுள்ள வர்த்தக ஒப்பந்தம் மட்டுமே எங்களுக்கு தேவையானது என போர்ட் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை கனடாவின் புளொக் கியூபிக்கோ கட்சி தலைவர் ஈவ்ஸ்–ஃபிரான்சுவா பிளாஞ்செட், டொனால்ட் டிரம்ப் விதித்த புதிய வரிகள் குறித்து கடுமையாக விமர்சித்துள்ளார்.



இந்த வரி விதிப்பு அதிகரிப்பு டிரம்பின் தோல்வியின் அங்கீகாரமாகத் தெரிகிறது என தெரிவித்துள்ளார். 25வீத வரி மட்டுமே நம்மை முடக்க போதுமானது என்று அவர் நினைத்திருந்தால், அதில் திருப்தி அடைந்திருப்பார் ஆனால் இப்போது அலுமினியத்துக்கும் உருக்கிற்கும் 50வீத வரி விதிக்கிறார்!' என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கனடாவின் ஒன்டாரியோவை தண்டிக்க, கியூபெக்கின் பொருளாதார விருப்பங்களை பயன்படுத்துகிறார் எனவும் இது மிகவும் விசித்திரமானது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, டிரம்ப் விதிக்கும் 50மூ வரி, அமெரிக்காவிற்கே பொருளாதார சுமையை ஏற்படுத்தும் என்று பல பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# கட்சித் தாவல்கள் உக்கிரம்!

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நெருங்கும் நேரத்தில் ஆசனங்கள் கிடைக்காத நிலையில பரஸ்பரம் கட்சி மாற்றங்கள் உச்சம் பெற்றுள்ளது. இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சி.காண்டீபன் கட்சியிலிருந்து விலகுவதாக தெரிவித்துள்ளார்.

அதேபோன்று யாழ்ப்பாணத்திலும் முன்னாள் தவிசாளர் ஒருவர் தமிழரசு கட்சியிலிருந்து பிரிந்து மாற்று கட்சியில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தலைமையிலான அணி இம்முறை தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னமான மான் சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

முன்னதாக தமிழீழ விடுதலை இயக்க முக்கியஸ்தர் விந்தன் கனகரட்ணம் தனது மகன் சகிதம் தமிழரசு கட்சி பக்கம் பாய்ந்திருந்தார். அடுத்து வருகின்ற நாட்களில் மேலும் பல பாய்ச்சல்கள் இடம்பெறலாமென தகவல்கள் வெளியாகி வருகின்றது.

இதனிடையே உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட தேசிய மக்கள் சக்தி கட்சி 12 மார்ச் 2025புதன்கிழமை மன்னார் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை ,நானாட்டான் பிரதேச சபை,முசலி பிரதேச சபை ,மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

வடகிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி இம்முறை தேர்தலில் களமிறங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

# அல்ஜசீரா தொலைக்காட்சியில் மூக்கு உடைபட்ட ரணில்!

அல்ஜசீரா நேர்காணல் குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிருப்தி தெரிவித்துள்ளார். நேர்காணல் ஒளிபரப்பான சிறிது நேரத்திலேயே ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரணில் விக்ரமசிங்க, தொகுப்பாளர் மெஹ்தி ஹசனுடன் இணைந்த மூன்று குழு உறுப்பினர்களில் இருவர் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் என்று கூறினார்.

மனித உரிமைகள் வழக்கறிஞரும் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் ஆணையருமான அம்பிகா சத்குணநாதன் இந்த விவாதத்தில் பங்கேற்பார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. எங்கள் சித்தாந்த வேறுபாடுகள் இருந்த போதிலும், நான் அவரை அறிந்திருப்பதால், அதில் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

இருப்பினும், பின்னர் அவருக்குப் பதிலாக விடுதலைப் புலிகள் ஆதரவு குழுக்களுடன் தொடர்பு கொண்ட இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதை அறிந்தேன், என்று கூறினார்.



நேர்காணலின் வடிவத்தையும் அவர் விமர்சித்தார், அவரது பதில்களின் முக்கிய பகுதிகள் தவிர்க்கப்பட்டதாகக் குற்றம் சாட்டினார். நான் உள்ளூர் ஊடகங்களுடன் பேசும் போது, அது நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது, எனவே நல்லது கெட்டது இரண்டும் வெளிவரும். இருப்பினும், அல் ஜசீரா இரண்டு மணி நேரம் என்னை நேர்காணல் செய்தது, ஆனால் ஒரு மணி நேர பகுதியை மட்டுமே வெளியிட்டது, அதில் பெரும்பகுதியைத் திருத்தியது என்று அவர் கூறினார்.

# கனடா வாழ் கருணையாளர்களே!



என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.



உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# டிரம்ப்பின் வர்த்தகப் போரை தோற்கடிப்போம்! கனடாவின் புதிய பிரதமர் மார்க்னி சூளுரை!

கனடாவின் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள மார்க் கார்னி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பிற்கு எதிரான வர்த்தக போரில் வெற்றி பெறப் போவதாக சூளுரைத்துள்ளார்.

அமெரிக்கர்கள் தவறாக எடை போடக் கூடாது ஹொக்கியை போல வர்த்தகப் போரிலும் அமெரிக்காவை தோற்கடிப்போம் என அவர் தெரிவித்துள்ளார். அடுத்த சில நாட்களில் கனடாவின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள மார்க் கார்னி அமெரிக்காவின் வரிகளிற்கு பதில் வரிகளை விதிக்கப் போவதாக குறிப்பிட்டுள்ளார்.

கனடா எதிர்கொள்ளும் புதிய சவால்களுக்கு புதிய திட்டங்களும் புதிய எண்ணங்களும் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். பிரிவினைக்கு முடிவு கட்டி எங்களை ஐக்கியப்படுத்தும் புதிய தலைமைத்துவத்தை கனடா மக்கள் விரும்புகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக தனது அரசாங்கம் புதிய திட்டத்தை முன்வைக்கும் என தெரிவித்துள்ள அவர் நம்பகத்தன்மை மிக்க வர்த்தக சகாக்களுடன் சிறந்த உறவை விரும்புவதாகவும் கனடாவின் எல்லைகளை பாதுகாக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் வரிசவால்கள் குறித்து குறிப்பிட்டுள்ள கனடாவின் புதிய தலைவர் அவர் வெற்றி பெறுவதற்கு அனுமதிக்க முடியாது அவர் வெற்றி பெற விடமாட்டோம் என தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக நடைபெற்ற லிபரல் கட்சியின் தலைமைப் போட்டியில் இங்கிலாந்து மற்றும் கனடாவின் முன்னாள் மத்திய வங்கித் தலைவர்



மார்க் கார்ன வெற்றி பெற்றுள்ளார்.

அவர் ஜஸ்டின் ட்ரூடோவுக்குப் பிறகு கனடாவின் பிரதமராகவும் லிபரல் கட்சித் தலைவராகவும் பதவியேற்பார். லிபரல் கட்சி தலைமைப்பதவிக்கான போட்டியில் மார்க் கார்னி அதிகப்படியான வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார். இதன்படி வாக்காளர்கள் பெற்ற வாக்குகள் வருமாறு,

மார்க் கார்னி – 131,674 வாக்குகள் 85.9வீத வாக்கு களுக்கு சமம்

கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் – 11,134 வாக்குகள் 8வீத வாக்குகளுக்கு சமம்

கரினா கோல்ட் – 4,785 வாக்குகள் 3.2வீத வாக்குகளுக்கு சமம்

ஃபிராங்க் பேலிஸ் – 4,038 வாக்குகள் 3வீத வாக்குகளுக்கு சமம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அல்ஜசீராவுடன் மோதி சிதறிப் போன பெராரி ஓட்டுநர்! ரணிலைக் கேலி செய்த அநுர தரப்பு பிமல் ரத்நாயக்கா!



பிரபல சர்வதேச ஊடகமான அல் ஜசீராவுடன் ரணில் விக்ரமசிங்க முரண்பட்ட விடயமானது, அரசியல் தரப்புகளில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், தற்போதைய அரசாங்கமும் குறித்த சம்பவத்தை விமர்சனத்திற்கு உள்ளாக்கியுள்ளது. அதன்படி 06 மார்ச் 2025 இடம்பெற்ற குறித்த சம்பவத்தை சபைத் தலைவரான பிமல் ரத்நாயக்க மறுநாள் 07 மார்ச் 2025 நாடாளுமன்றில் விமர்சித்துள்ளார்.

அதன் போது இன்றைய நாடாளுமன்ற அமர்வை ஒரு மோசமான செய்தியுடன் ஆரம்பிப்பதாக கூறிய பிமல் (22ம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழ் மக்கள் விரட்டியடிக்க மாட்டார்களா?



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் வாக்களித்தவர்களாலேயே விரட்டியடிக்கப்படுவீர்கள் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறார். சிங்கள மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் அகற்றலாம் அவ்வாறு நிகழ்ந்தால் இலங்கை அரசியலில் அது ஆச்சரியமானதல்ல.

ஏனெனில் 69 இலட்சம் வாக்குகளை வழங்கித் தங்களின் தானைத் தலைவர் என்று கொண்டாடிய கோட்டாபய ராஜபக்ஷவை வாக்களித்த மக்கள்தான் அதிகாரத்திலிருந்து அகற்றினார்கள். கோட்டபாய மயக்கத்திலிருந்த சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அரிய பெரும்பான்மை வெற்றியைப் பெற்றிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தால் அல்லது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்பாராதவாறு நெருக்கடியை சந்தித்து கோட்டாபய ராஜபக்ஷ போன்று நெருக்கடி நிலைமையை சமாளிக்க முடியாமல் திணறினால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் நிச்சயம் வீழ்ச்சியை சந்திக்கும் தான். அதில் சந்தேகம் கொள்ள ஒன்றுமில்லை.

ஆனால் இங்கு கேட்கப்பட வேண்டிய கேள்வியோ வேறு. அதாவது இலங்கை தமிழ் அரசு கட்சி 1949இல் உருவாக்கப்பட்டது. கட்சியின் இன்னொரு பெயர் சமஷ்டி கட்சி. கடந்த 75 ஆண்டுகளாக சமஷ்டியைப் பெற்றுத் தருவதாகக் கூறி இறுதியில் இருந்ததையும் தக்கவைக்க முடியாமல் தோல்வியுற்றிருக்கும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொய் வாக்குறுதிகள் தொடர்பில் ஈழத் தமிழினம் ஆவேசம் கொண்டு எப்போது இவர்களை விரட்டியடிப்பார்கள்? தாங்களும் அரசியல் விழிப்புணர்வு பெற்ற மக்கள் கூட்டம் தான் என்பதை ஈழத் தமிழர்கள் எப் போது நிரூபிப்பார்கள்? சிங்கள மக்கள் காலத்துக்குக் காலம் அதனை நிரூபித்திருக்கின்றனர் இனியும் நிரூபிப்பார்கள் என்று நம்பலாம்.

ஆனால் நமது ஈழத் தமிழினமோ குறிப்பாக யாழ்ப்பாண சமூகம் தங்களைப் படித்த சமூகமென்று பெருமை கொண்ட சமூகம் சிங்களவர்களை ‘மோட்டுச் சிங்களவர்கள்’ என்று கூறி மகிழ்ந்த வரலாற்றைக் கொண்டிருக்கும் சமூகம் இவ்வாறானதொரு சமூகத்தை எவ்வாறு தமிழ் அரசியல்வாதிகள் வெற்றிகரமாக 75 வருடங்களாக ஏமாற்றி வந்திருக்கின்றனர் இப்போதுமே ஏமாற்றலாம் என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

போக முடியாத ஊருக்கு வழி சொல்வதைத் தங்களின் வித்துவமாகக் காண்பித்துக் கொண்டிருக்கும் வாக்களிக்கும் மக்களை எல்லாக் காலத்திலும் வெற்றிகரமாக ஏமாற்ற முடியுமென்பதில் உறுதி கொண்டிருக்கும் ஈழத் தமிழ் அரசியல்வாதிகளை எப்போது தான் ஈழத்தமிழினம் விரட்டியடிக்கும்? அந்தக் காலம் வருமா? கடந்த பதினைந்து வருடங்களாக எந்தவொரு முன்னேற்றத்தையும் காண்பிக்காத தமிழ் அரசியல்வாதிகளோ தொடர்ந்தும் கதிரையைத் தங்கள் வசம் பேணிப் பாது காத்துக் கொள்ள வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருகின்றனர்.

இவர்கள் உண்மையிலேயே அரசியல் நேர்மையுள்ளவர்களாக இருந்திருந்தால் தங்களின் தோல்விக்குப் பொறுப்பேற்று அரசியலை புதிய தலைமுறையிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறியிருக்க வேண்டும். ஆனால், தங்களின் தோல்விக்கு புதிய பொய்களைக் கண்டு பிடிப்பதிலேயே கவனமாக இருக்கின்றனர். இதற்கு என்ன காரணம்? ஒரேயொரு காரணம் தான்.

அதாவது, ஈழத் தமிழினம் தங்களை விரட்டியடிக்காது அதற்கான அறிவாற்றல் அவர்களுக்கில்லை என்றே ஈழ அரசியல்வாதிகள் ஆணித்தரமாக நம்புகின்றனர். இந்த நம்பிக்கையை ஈழத் தமிழினம் கேள்விக்குள்ளாக்காத வரையில் அரசியலில் மாற்றம் என்பது முயல் கொம்பு தான்.

# யுத்தக் குற்றங்கள் பொறுப்புக் கூறல் - ஊழல் - சவேந்திரசில்வா நியமனம் தொடர்பில் அல்ஜசீரா தொலைக்காட்சிப் பேட்டியில் தடுமாறிய ரணில்!



அல்ஜசீராவிற்கு வழங்கிய நிறைந்த ஹெட் டு ஹெட் பேட்டியில் போர்க்குற்ற வாளிகளை பாதுகாக்கவில்லை என மறுத்ததன் மூலமும் சவேந்திரசில்வா மீண்டும் நியமித்ததை ஆதரித்ததன் மூலமும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமை குறித்து பதிலளிக்க மறுத்ததன் மூலமும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பார்வையாளர்களை அதிர்ச்சிக்கு ள்ளாக்கினார்.

அந்த பேட்டியில் யுத்த குற்றங்கள் அரசாங்க ஊழல்கள், 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து அவரது அரசாங்கம் நம்பகதன்மை மிக்க விதத் தில் விசாரணைகளை முன்னெடுக்க தவறியமை குறித்த கேள்விகளை எதிர் கொள்ள முடியாதவராக ரணில் விக்கிரம சிங்க காணப்பட்டார்.

ஒரு மணி நேரம் இடம் பெற்ற கருத்து பகிர்வுடனான அந்த பேட்டியின் முதல் 8 நிமிடத்திலேயே ரணில்விக்கிரமசிங்க அந்த பேட்டியிலிருந்து வெளியேறப் போவதாக எச்சரித்தார். யுத்த குற்றங் களில் தனக்குள்ள தொடர்புகள் மற்றும் யுத்த குற்றச்சாட்டுகள் குறித்த கேள்வி களிற்கு அவர் பதிலளிக்க மறுத்தார்.

தமிழர்களிற்கு எதிரான யுத்த குற்றங் களிற்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு ரணில்விக்கிரமசிங்க தவறி யமை குறித்த மெஹ்டி ஹசனின் கேள்விக்கு என அவர் பதில் அளித்தார்.

மேலும் இந்த விடயம் குறித்து கருத்து கூற மறுத்தார். ஐநா தெரிவித்து விட்டது நான் அடுத்த கேள்வியை கேளுங்கள் என தெரிவித்தார். இந்த கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மறுப்பது சிறுபிள்ளைதன மாக உள்ளது என மெஹ்டி ஹசன் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த ரணில்விக்கிரமசிங்க நான் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்கின்றேன் என்றால் காந்தி சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொண்டார் என அர்த்தம், காந்தியும் பதிலளிக்க மறுத்தார் உங்களிற்கு வரலாறு தெரி யாது என குறிப்பிட்டார்.

பலவந்தமாக காணாமல் போகச் செய்யப் பட்டமை குறித்தும் அரசாங்கம் எத்தனை பேரை கண்டு பிடித்துள்ளது என்ற கேள்விக்கும், ரணில்விக்கிரமசிங்க என பதிலளித்தார். பார்வையாளர்கள் அதிர்ச்சியில் தலையாட்டினார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கு வது குறித்த உங்கள் கேள்விக்கு ரணில் விக்கிரமசிங்கவின் அணுகுமுறை அவரது இரக்கமற்ற தன்மையையும் இலங்கை நிர்வாகத்தின் ஒட்டுமொத்த இரக்கமற்ற மனப்பான்மையையும், பெருமளவில் அநீதிகள் அட்டூழியங்கள் நிகழும் நிலைக்கு எவ்வாறு வந்தோம் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது என நிபுணர் குழுவில் காணப்பட்ட பேர்ள் அமைப்பின் நிறைவேற்று பணிப் பாளர் மதுரா இராசரட்ணம் தெரிவித் தார்.

முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற விடய ங்களிற்கும் காசாவில் இடம்பெற்ற விடய ங்களிற்கும் இடையில் தாங்க முடியாத ஒற்றுமையுள்ளது, இரு இடங்களிலும் நீங்கள் பொதுமக்களை கடற்கரையை நோக்கி தள்ளினீர்கள் தொடர்ச்சியான இடைவிடாத முடிவற்ற குண்டு வீச் சினை மேற்கொண்டீர்கள், பொது மக்களை மனிதாபிமான முற்றுகைக்குள் உட்படுத்தினீர்கள், மயக்க மருந்து கூட இல்லாமல் மருத்து சத்திர சிகிச்சை களை மேற்கொள்ள வேண்டியிருந்தது, ஐந்து மாதங்களில் 45000க்கும் அதிக மானவர்கள் கொல்லப்பட்டனர் என ஐநா மதிப்பிடுகின்றது, யுத்தத்தின் இறுதி நாட்களில் நாளாந்தம் ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்,மேலும் பலருக்கு என்ன நடந்தது என்பது தெரிய வில்லை' என பேர்ள் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மதுரா இராசரட்ணம் தெரிவித்தார்.

இந்த குற்றங்கள் ஏன் இடம்பெற்றன என்றால் நீங்கள் ஒரு அரசியல் அமைப்பொன்றை கொண்டிருக்கின்றீர் கள், ரணில்விக்கிரமசிங்கவும் இதன் ஒரு பகுதி,இது கடந்த 70 ஆண்டுகளாக நல்லாட்சியை பலிகொடுத்து நீதியை பலிகொடுத்து , பெரும்பான்மையினத்தவர்களை மகிழ் வித்து, இனவெறி அரசியலுக்கு முன்னு ரிமை அளித்து வருகின்றது இதனால் என்ன நடக்கும், என அவர் கேள்வி எழுப்பினார். இலங்கை இராணுவதளபதி யாகயிருந்த வேளை யுத்தகுற்றங்களில் சட்டவிரோத கொலைகளில் ஈடுபட்டார் என அமெரிக்காவினால் குற்றம்சாட்டப் பட்ட சவேந்திர சில்வாவிற்கு மீண்டும் நியமனம் வழங்குவது குறித்து ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பப் பட்டது.

தனது முடிவை நியாயப்படுத்திய ரணில் விக்கிரமசிங்க சவேந்திரசில்வா அவ் வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிரு க்கவில்லை என தான் முழுமையாக திருப்தியடைந்ததாக தெரிவித்தார்,

# அரசியல் வரலாற்றில் முதன் முதலாக திணறிய ரணில்!



50 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அரசி யல் வரலாற்றில் முதன்முறையாக சர்வ தேச ஊடகமொன்றின் கேள்விகள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவை திணறடித்துள்ளன. ரணில் விக்ரமசிங்க உலகத் தலைவர்கள், உலக அமைப்புக்கள் மற்றும் சர்வதேச ஊடகங்களை கையாள்வதில் கை தேர்ந்தவர் என பெயர் பெற்ற ஒருவர்.

இவ்வாறிருக்க, அரகலய போராட்டம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் உள்நாட்டு யுத்தம் தொடர்பான சர்வ தேச ஊடகத்தின் கேள்விகளுக்கு ரணில் பதிலளிக்க முடியாமல் திணறு வதை அவதானிக்க முடிந்தது. இது தற்போது பெரும் சர்ச்சையாகவும் பேசுபொருளாகவும் மாறியுள்ளது.

குறித்த நேர்காணலின் போது, ஐரோப் பிய ஒன்றியம் வேறு சில அமைப்பு க்களுக்கு நிதி வழங்கி தன்னை ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றுவ தற்கு முயற்சித்ததாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரி வித்துள்ளார்.

அதே ஐரோப்பிய ஒன்றியம், பொரு ளாதாரத்தில் வீழ்ச்சி கண்ட இலங் கையை மீட்டெடுத்தமைக்காக தன்னை பாராட்டியதாகவும் அவர் கூறியுள்ளார்.

காலி முகத்திடல் போராட்டக்காரர் களை இராணுவத்தைக் கொண்டு அடக்கிய நீங்கள் எவ்வாறு மக்களின் நண்பன் ஆக முடியும் என நேர் காணலின் ஒலிபரப்பாளர் ரணிலிடம் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், ஐரோப்பிய ஒன்றிம் போராட்டக்காரர் களை கையாண்ட விதம் தொடர்பில் ரணிலை விமர்சித்திருந்ததையும் ஒலிபரப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த ரணில், ஐரோப்பிய ஒன்றியம் இரட்டை நிலைப்பாட்டை கொண்டது என விமர்சித்தார். மேலும், போராட்டக்காரார்களில் சிலர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை கொன்ற மையினாலேயே பாதுகாப்பை பலப்படு த்தியதாக அவர் கூறினார்.

இதன்பின்னர், ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது உங்களுக்கு வெறுப்பு உள்ளதா என கேட்ட போது, இல்லை, ஒன்றி யத்தை நான் இன்னும் விரும்புகிறேன் என ரணில் பதிலளித்தார்.

இதேவேளை, 2023ஆம் ஆண்டு தேர் தலை நடாத்த முடியாமல் போனதுக்கு என்ன காரணம் என கேட்கப்பட்ட கேள்விக்கு எங்களிடம் தேர்தலை நடத்துவதற்கான பணம் இருக்க வில்லை என ரணில் கூறினார்.

தொடர்ந்து, மறைந்த முன்னாள் பிரித்தானிய மகாராணியினதும் முன் னாள் ஜப்பான் பிரதமரினதும் இறுதி சடங்கிற்கு செல்ல மட்டும் உங்களிடம் பணம் இருந்தது என ஒலிபரப்பாளர் விமர்சித்தார்.

அதற்கு பதிலளித்த ரணில், அவை



2022ஆம் ஆண்டுக்கான செலவுகள் எனவும் தேர்தல் 2023ஆம் ஆண்டு க்கான செலவு எனவும் சுட்டிக்காட்டி னார்.

இதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பிறந்த தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண் டமை குறித்து கேட்கப்பட்ட கேள்வி க்கு அதில் ஒன்றும் தவறில்லை என ரணில் பதிலளித்தார். மாலைதீவுக்கு தப்பிச் சென்ற கோட்டாபய ராஜபக்ச இலங்கைக்குள் மீண்டும் அனுமதிக்கப் பட்டமை குறித்தும் இதன் போது கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளிக்கையில், கோட்டாபய மீது எந்தவொரு குற்றச்சாட்டும் இருக்கவில்லை. எனவே அவரை நாட்டுக்குள் அனுமதிக்காமல் இருப்ப தற்கு நான் சர்வாதிகாரி இல்லை என ரணில் தெரிவித்தார்.

ராஜபக்சக்களின் துணையுடன் தான் உங்களுக்கு ஜனாதிபதி பதவி கிடை த்தது என கூறப்பட்டமைக்கு பல தமிழ் எம்.பிக்களும் எனக்கே ஆதரவு வழங்கினர் என ரணில் சுட்டிக்காட்டி னார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் ஏற்பட்ட போது அரசாங்கத்தின் தோல்வியை கத்தோலிக்க திருச்சபை விமர்சித்திருந்ததை ஒலிபரப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளிக்கையில், இது கத்தோலிக்க திருச்சபையின் அரசியல் என ரணில் சுட்டிக்காட்டினார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு கார ணமானவர்களை நான் ஒருபோதும் காப்பாற்றவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழரசுக்கட்சியின் வவனியா மாவட்டக் கிளை அலுவலகம் திறப்பு! நிகழ்வை புறக்கணித்த ஸ்ரீதரன்!




இலங்கை தமிழரசுக்கட்சியின் மாவட்ட அலுவலகமும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களின் மக்கள் தொடர்பாடல் காரியாலமும் வவுனியா குருமன்காடு காளி கோவில் வீதியில் கடந்தவாரம் திறந்து வைக்கப்பட்டது. கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், புதிய அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.


இதன் போது பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிகரன், கோடீஸ்வரன், ஞா.சிறிநேசன் குகதாசன், சிறிநாத், இ.சாணக்கியன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்,கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், மாவட்ட கிளையினர் என பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகத் திறப்பு விழா நிகழ்வை புறக்கணித்து, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மத்திய குழுக் கூட்டம் முடிவடைந்த பின் வெளியேறிச் சென்றிருந்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெரு பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் காலை 10 மணி முதல் மதியம் வரை நடைபெற்றது. அதில் கட்சியின் முக்கிய உறுப்பினரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிறிதரனும் கலந்து கொண்டிருந்தார்.

மத்திய குழுக் கூட்டம் முடிவடைந்த பின் தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகமும், பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் தொடர்பாடல் அலுவலகமும் குருமன்காடு, காளி கோவில் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குறித்த அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளாது மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் வெளியேறிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போரின் இறுதியில் மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடைபெற்றதை ஏற்றுக் கொண்ட ரணில்



மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்படக் கூடாது என்று வலியுறுத்தியவனாக இருக்கின்ற போதிலும் போரின் இறுதியில் அவ்விதமான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய செவ்வியின் போது, பார்வையாளர்கள் பகுதியிருந்தான கேள்வி நேரத்தின் போது சனல்-4 ஊடகவியலாளரான கெலும் மக்ரேயின் பொறுப்புக்கூறல் பற்றிய வினாவுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த நேர்காணலின் போது சர்வதேச விசாரணை பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கு நீங்கள் தவறியதால் சர்வதேச சட்டங்களை புறக்கணிக்கும் நிலை உருவாகியுள்ளதெனக் கருதுகின்றீர்களா என்று இலங்கையின் உள்நாட்டு போரின் இறுதித் தருணங்களில் நிகழ்ந்த பாரிய மனித உரிமைமீறல்களை வெளிக்கொணர்ந்த சனல்-4 ஊடகவியலாளரான கெலும் மக்ரே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்விஎழுப்பினார். அத்துடன் அவர் தனது கேள்வி யில், ஹமாஸை அழிப்பதற்கான ராஜபக்ஷ மாதிரி குறித்தும் கட்டுரையொன்று வெளியாகியுள்ள நிலையில் அக்கட்டுரையையும் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக, காசாவில் யுத்தம் ஆரம்பித்து ஒரு மாதத்தின் பின்னர் அமெரிக்காவின் புத்திஜீவிகள் அமைப்பொன்று 'ஹமாஸினை முற்றாக அழிப்பதற்கான ராஜபக்ஷக்களின் திட்டம்' என்ற தலைப்பில் கட்டுரையொன்றை வெளியிட்டது.

அக்கட்டுரையில், இஸ்ரேல் ராஜபக்ஷக்கள் பயன்படுத்திய தந்திரோபாயத்தை பயன்படுத்த வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட மூலோபாயம் என்பது பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களை, மோதல் தவிர்ப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதியை நோக்கி செல்ல வைத்து அதன் பின்னர் அவர்கள் மீது குண்டு வீசுவதாகும்.

ராஜபக்ஷக்கள் செய்ததை இஸ்ரேல் செய்ய வேண்டும், என்று அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டதுடன் இஸ்ரேல் எந்த வகையான சர்வதேச விசாரணை பொறுப்புக்கூறலிற்கும் உடன்படக் கூடாதென தெரிவிக்கப்பட்டிருந்தது.

சர்வதேச விசாரணை பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கு நீங்கள் தவறியதால சர்வதேச சட்டங்களை இலங்கை அரசாங்கம் புறக்கணிக்கும் நிலை உருவாகியுள்ளது. அவ்வாறு சர்வதேச சட்டங்களை புறக்கணிப்பதை நியாயப்படுத்தும் அதன் விளைவுகளை நியாயப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது, அதனை காசாவில் பார்க்க வேண்டியுள்ளது என்பது குறித்து நீங்கள் கவலையடைகின்றீர்களா? என்று கேட்டார்

இதற்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க நான் அந்த கட்டுரையை படிக்கவில்லை. ஆகவே அதிலென்ன தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியாது. இதனால் அது குறித்து கருத்துத் தெரிவிக்க முடியாது என்றார்.

எனினும் நேர்காணல் செய்து கொண்டிருந்த, மெஹ்டி ஹசன் இஸ்ரேலை ஆதரிக்கும் சிலர் யுத்தகுற்றங்கள் மருத்துவமனைகள் மீதுதாக்குதலை மேற்கொள்வது போன்ற ராஜபக்ஷ பாணியை பின்பற்ற வேண்டுமென கருதுகின்றார்களே என்று கேள்வி எழுப்பினார்.

அப்போது, மருத்துவமனைகள் மீது தாக்குதல்கள் இடம் பெறவில்லையென இதற்கு பதிலளிக்க ஆரம்பித்தவேளை பார்வையாளர்கள் மத்தியிலிருந்து குரல்கள் எழுந்தன. அச் சமயத்தில் எனது பதிலை முடிப்பதற்கு விடுகின்றீர்களா? என்று தெரிவித்து விட்டு, முள்ளி வாய்க்கால் மருத்துவமனை மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலே முக்கியமானது, வேறு சில சம்பவங்கள் குறித்து விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டன மருத்துவமனைகள் மீது விமானப் படை தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அது குறித்து நடவடி க்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆனால் பாரியளவில் மருத்துவமனைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள கூடாதென வலியுறுத்தியவன். நான் அதனை நாங்கள் உறுதி செய்தோம். யுத்தத்தின் இறுதி தருணங்களில் என்ன நடந்தது என்றால் 'ஆம்' அங்கு பிரச்சினைகள் உள்ளன. அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன், நான் இல்லையென தெரிவிக்கமாட்டேன் என்று குறிப்பிட்டார்.

# ஜே.வி.பி.யின் ஊழல் விசாரணை!

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தேர்தல் வாக்குறுதி என்றால் அது ஊழல்வாதிகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவது தான். இலங்கையைப் பொறுத்தவரையில் ஊழல்வாதிகள் என்றால் அவர்கள் அனைவருமே அரசியலில் ஆதிக்கம் செலுத்திய முக்கிய நபர்கள் தான்.

முக்கியமாக ராஜபக்ஷக்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்குள் தள்ளி விட்டதாகக் கூறியே தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது.

அந்த அடிப்படையில் அவர்களின் முதல் இலக்கு ராஜபக்ஷ குடும்பமாகவே இருக்க முடியும். அடுத்தது ராஜபக்ஷக்களோடு அரசியல் தேனிலவில் இருந்தவர்கள். இந்தநிலையில், தற்போது ரணில் விக்கிரமசிங்க காலத்தில் இடம் பெற்ற பிணைமுறி விவகாரம் தொடர்பில் புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமென்று பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறுவது போன்று எவர் மீதும் விசாரணைகளை முன்னெடுக்கலாம். ஏனெனில், அதற்கான அதிகாரங்கள் அவர்களிடம் உண்டு. ஆனால், அவ்வாறான விசாரணைகள் கைது வரையில் செல்லுமா அல்லது இடை நடுவில் காணாமல் போய்விடுமா என்பதில் தான் தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதி உற்றுநோக்கப்படும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரையில் இடம் பெற்ற எந்தவொரு விசாரணையிலும் முக்கிய அரசியல் தலைகள் விழுந்ததான வரலாறு இல்லை. சில தலைகள் இலக்கு வைக்கப்படுவதுண்டு ஆனால், இறுதியில் அவர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுவிக்கப்படுவதே நடந்திருக்கிறது. இதன் மூலம் இலங்கையில் இடம் பெறும் விசாரணைகள் பெரும்பாலும் தூய்மையாக்கலுக்கே பயன்படுவதுண்டு.

இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தி உண்மையாகவே விசாரணைகளை முன்னெடுக்குமா அல்லது முன்னர் இடம் பெற்றது போன்று, வெறும் கண்துடைப்பாகவே முடிவுறுமா என்பதைப் பொறுத்திருந்தே நோக்க வேண்டும். ஆனால், தேசிய மக்கள் சக்தி உண்மையிலேயே நாட்டை ஊழலற்ற நாடாக்க வேண்டும் என்பதில் கரிசனை கொண்டிருந்தால் அதனை அவர்களால் நிச்சயம் செய்ய முடியும். ஏனெனில், அதற்கான அரசியல் பலம் வரலாற்றில் மிகவும் அரிதான வகையில் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

இந்த வாய்ப்பு இனி அவர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. தேசிய மக்கள் சக்தி ஒரு வாய்ப்புத் தான். ஆனால், அது வாய்ப்பாக செழித்து வளர்வதும் அல்லது முளையிலேயே கருகி விடுவதும் அவர்களின் அணுகுமுறையிலேயே தங்கியிருக்கிறது. ஊழலை விசாரித்தல் என்பது இன்னொரு வகையில் தேசிய மக்கள் சக்தியின் — குறிப்பாக ஜே.வி.பியின் அரசியல் எதிர்காலத்துடனும் தொடர்புபட்டிருக்கிறது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சில அரசியல் தலைகளை முடக்காது விட்டால், அவ்வாறானவர்கள் மீண்டும் அரசியலில் தலைதூக்க அதிக வாய்ப்புண்டு. அதன் பின்னர் ஜே.வி.பின் நிலைமை சிக்கலடைந்து விடும் என்பதையும் ஜே. வி. பியின் உள்வட்டம் உணராமல் இருக்காது. அந்த வகையில் நோக்கினால் முக்கியமாக ராஜபக்ஷக்களின் கடந்த காலத்தைத் தோண்ட வேண்டிய தேவை ஜே. வி.பிக்கு இருக்கிறது. ஆனால், ராஜபக்ஷக்களை முழுமையாக முடக்குவதற்கான ஆதாரங்களை எவ்வாறு ஒன்று சேர்ப்பது அது முடியுமா என்பதில் தான் ஜே. வி. பியின் ஊழல்வாதிகளை தண்டிக்கும் இலக்கின் வெற்றி தங்கியிருக்கிறது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ரெலோவின் மூத்த உறுப்பினர் விந்தன் தமிழரசுக்கட்சியில் இணைவு!



தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ அமைப்பின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினருமான விந்தன் கனகரட்னம் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

ரெலோ அமைப்பின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்து முன்னாள் மாநகரசபை மாகாண சபை உறுப்பினராக இருந்த விந்தன் கனகரட்னத்துக்கும் கட்சிக்கும் இடையில் அண்மைக் காலமாக முரண்பாடுகள் ஏற்பட்டு வந்திருந்தன.

இந் நிலையில் திடிரென 10 மார்ச் 2025 அவரும் அவரது மகனும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் முன்னிலையில் தமிழரசுக் கட்சியில் இணைந்து உறுப்புரிமைகளையும் பெற்றுக் கெண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் முதல், அரசியல் பயணம் என நீண்டகால உறுப்பினர் மட்டுமல்லாது, அக்கட்சியின் முக்கியஸ்தராகவும் விளங்கி வந்த விந்தன் கனகரட்னம், அக் கட்சியிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டமை அரசியல் கட்சிகளிடத்தே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, யாழ்ப்பாணம் மாநகரசபை மற்றும் வடக்கு மாகாண சபைகளின் உறுப்பினரும் கடந்த நாற்பத்தியொரு வருட கால போராட்ட பின்புலம். கொண்டு ஜனநாயக ரீதியாக அரசியற் பயணம் என தமிழீழ தேச மண்ணின் விடுதலைக்காகவும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பயணித்து வந்தார்.

இவ்வாறு பயணித்தவர் 10 மார்ச் 2025 அன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் தன்னை ஒர் ஆயுள் கால உறுப்பினராக இணைத்து கொண்டுள்ளார், அவரோடு அவரின் மகனான, யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவனும் தற்போதைய யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவனுமான மார்க் அன்ரனியும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் ஆயுள் கால உறுப்பினராக இணைந்து கொண்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் முன்னிலையில் அவரின் நல்லூர் கல்வியங்காடு அலுவலகத்தில் வைத்து இருவருக்குமான உறுப்புரிமைகளை அவர் வழங்கி வைத்தார்

இதேவேளை தனித்து நின்று ஆட்சி பிடிக்கும் கதைகளை மறந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி சாம்பார் கூட்டுக்கு தயாராகியுள்ளது. தமிழரசு மற்றும் தமிழ் தேசிய ஜனநாயக கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய தரப்புக்கள் முன்னணியுடன் கூட்டிற்கு தயராகிவருகின்றன.

இதனிடையே வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட தமிழ் தேசிய மக்கள் முன்னனி வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.


அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னனி அதன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் தனித்து போட்டியிடவுள்ளதாக கூறப்படுகின்றனர்.

## பெண் மருத்துவர் வன்புணர்வு:- சந்தேக நபர் கைது!



அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் மருத்துவரை பாலியல் வன்புணர்வு செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் என்றும், அவர் கல்னேவ பகுதியில் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 மார்ச் 2025 திங்கட்கிழமை இரவு பயிற்சி பெற்று வந்த 32 வயது மருத்துவரை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி விட்டு தப்பி ஓடிய நபரை கைது செய்வதற்கு பல பொலிஸ் குழுக்கள் விசாரணையைத் தொடங்கிய நிலையில் தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் மருத்துவரிடமிருந்து திருடிய அலைபேசியைப் பயன்படுத்தி கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவத்திற்கு முந்தைய நாள் போதைப்பொருள் சம்பவம் தொடர்பாக அவர் தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர்.


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%


- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# அல்ஜசீராவில் ரணில்!

ஐநாவின் 58ஆவது கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில் ரணில் விக்ரமசிங்கவை அல்ஜசீரா அம்பலப்படுத்தியிருக்கிறது.

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானமானது பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலைமாறு கால நீதிக்கானது. இந்தத் தீர்மானத்தில் இலங்கை அரசாங்கம் இணை அனுசரணையாளராக செயல்பட்டது. அதாவது அரசாங்கமும் சேர்ந்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது. அதற்கு முன் நிறைவேற்றப்பட்ட எல்லாத் தீர்மானங்களும் அரசாங்கத்துக்கு எதிரானவை. இலங்கை அரசாங்கங்களால் ஏற்றுக் கொள்ளப்படாதவை. அதற்கு பின்வந்த தீர்மானங்களும் அத்தகையவை தான்.

2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான அந்தத் தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கிய பொழுது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தார். அதாவது இலங்கைத் தீவில் நிலைமாறு கால நீதிக்கான ஐநா தீர்மானத்திருகு ரணிலும் மைத்திரியும் பெற்றோர் ஆவர். ஆனால் 2018ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன அந்தத் தீர்மானத்தைக் காட்டிக் கொடுத்தார். மஹிந்தவோடு இணைந்து அதற்கு எதிராகத் திரும்பினார். அதனால் பழி அவர் மீது தான் விழுந்தது. அதாவது நிலைமாறு கால நீதியின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரி தன் குழந்தையைக் குப்பைத் தொட்டிக்குள் வீசினார் என்று.

ஆனால் இரண்டாயிரத்தி இருபத்தி நாலாம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட மக்கள் அமைப்பு, யாழ்ப்பாணம் உரும்பிராயில் சுமந்திரனைச் சந்தித்த போது அவர் என்ன சொன்னார்?

ரணில் விக்கிரமசிங்க தான் அதைக் குழப்பியவர் என்று சொன்னார். ரணில் விக்கிரமசிங்க நிலைமாறு கால நீதிக்கு விசுவாசமாக இருக்கவில்லை என்றும் சொன்னார். ஆனால் அவர் அதை உரும்பிராயில் வைத்துச் சொல்வதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பு திருநெல்வேலியில், யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட வளாகத்தில், ரணிலும் அமர்ந்திருந்த மேடையில் உரையாற்றும் பொழுது என்ன சொன்னார்? 2005 ஆம் ஆண்டு உங்களைத் தெரிவு செய்யாமல் விட்டதற்காக தமிழ் மக்கள் வருந்துகிறார்கள் என்ற பொருள்பட உரையாற்றினார்.

இலங்கைத் தீவில் நிலைமாறு கால நீதி எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தியது. அதற்கு ரணிலும் பொறுப்பு மைத்திரியும் பொறுப்பு. மட்டுமல்ல அவர்களோடு பங்காளிகளாக இருந்த தமிழ்த் தரப்பைச் சேர்ந்த சம்மந்தரும் பொறுப்பு' சுமந்திரனும் பொறுப்பு.

2015இல் நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய ரணில் சில நாட்களுக்கு முன் வெளியிடப்பட்ட அல்ஜசீராவின் நேர் காணலில் என்ன கூறுகிறார்? பொறுப்புக் கூறல் தொடர்பில் பொறுப்பற்ற விதமாகப் பதிலளிக்கின்றார். தன்னை நேர் கண்ட மஹ்தி ஹசனை மடக்குவதாக நினைத்துக் கொண்டு அவர் சொன்ன பதில்கள் அவர் பொறுப்புக் கூறலுக்கு உண்மையாக இல்லை என்பதை வெளியே கொண்டு வந்திருக்கின்றன.

அல்ஜசீராவின் ஹெட் டு ஹிட் என்ற அந்த நிகழ்ச்சியை ஒரு பேட்டி என்று அழைப்பதை விடவும் குறுக்கு விசாரணை என்று தான் அழைக்க வேண்டும். அரசியல்வாதிகளை பேட்டி காணச் செல்லும் ஊடகவியலாளர்கள் எப்படி எல்லாம் வீட்டு வேலை செய்திருக்க வேண்டும் என்பதற்கு அது ஒரு தரமான உதாரணம். வீட்டு வேலை செய்யாமல் கேள்வி கேட்கப் போகும் ஊடகவியலாளர்கள் மஹ்தி ஹசனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

ரணிலைக் அவர் பல இடங்களில் திணறடிக்கிறார். ரணிலின் அரசியல் வாழ்வில் அவர் இந்த அளவுக்கு அவமதிக்கப்பட்ட அல்லது அம்பலப்படுத்தப்பட்ட ஒரு நேர்காணல் இருக்க முடியாது. அந்த நேர்காணலைக் குறித்து முகநூலில், ரணிலுக்கு எதிராக



முஸ்லிம் நண்பர்கள் அதிகம் விமர்சனங்களைப் பதிவெற்றி வருகிறார்கள்.

ரணில் அந்த நேர்காணல் முழுவதிலும் தன்னை ஒரு சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் பாதுகாவலனாகவே காட்டிக் கொள்கிறார். அவருடைய லிப்ரல் முகமூடியை மஹ்தி ஹசன் அவமானகரமான விதங்களில் கிழித்தெறிந்து விடுகிறார்.

அந்த நேர்காணல் முழுவதிலும் ரணில் ராஜபக்சக்களை பாதுகாக்க முயல்கிறார். ஆனால் அதை அதை விடச் சரியான வார்த்தைகளை சொன்னால் அவர் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலை நியாயப்படுத்துகிறார் என்பதே பொருத்தமானது.

அவ்வாறு நியாயப்படுத்த முற்படுகையில் அவர் போர்க் குற்றங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறுவதற்குத் தயாரற்றவராகத் தன்னைக் காட்டிக் கொள்கிறார்.

முஸ்லிம்களுக்கு பொறுப்பு கூறத் தயாரற்றவராகத் தன்னை காட்டிக் கொள்கிறார். சிங்கள கத்தோலிக்கர்களையும் அவர் அங்கே அவமதிக்கிறார். முழுக்க முழுக்க ஒரு சிங்கள பௌத்த பெருந்தேசியவாதியாக அந்த இடத்தில் தோற்றம் தருகிறார். ஆனால் அவர் தான் 2015 ஆம் ஆண்டு நிலைமாற கால நீதிக்கான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கை அரசாங்கத்தின் பிரதமராக இருந்திருக்கிறார்.

எனவே அந்த நேர்காணல் ரணிலை அம்பலப்படுத்தியது என்பதை விடவும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை அம்பலப்படுத்தியிருக்கிறது. லிபரல் முகமூடி அணிந்த தலைவரும் சரி அவ்வாறு முகமூடி அணிந்திராத தலைவர்களும் சரி, இடதுசாரி முகமூடி அணிந்த தலைவர்களும் சரி எல்லாருமே இறுதியிலும் இறுதியாக சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பை பாதுகாப்பவர்கள் தான். இதில் இப்பொழுது கடைசியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் தேசிய மக்கள் சக்தியும் அடங்கும்.

ரணில் அல்ஜசிராவில் அம்பலப்படுத்தப்படுவதற்கு முன்னரே கடந்த 25 ஆம் திகதி ஜெனிவாவில் புதிய வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தனது உரையில் என்ன சொல்லியிருக்கிறார்?. அதன் பின் கடந்த மூன்றாம் திகதி ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய வாய்மூல அறிக்கை வெளியிடப்பட்ட பின் அதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் வழங்கிய பதிலில் என்ன கூறப்பட்டுள்ளது? தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்புக்கு கூறத் தயாராக இல்லை என்பதே ஐநாவில் அவர்கள் வெளிப்படுத்திய செய்தியின் சாரம்.

அதாவது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு என்றைக்குமே பொறுப்புக் கூறாது. அது ராஜபக்சக்களாக இருந்தாலும் சரி, ரணிலாக இருந்தாலும் சரி.சந்திரிகாவாக இருந்தாலும் சரி, மைத்திரியாக இருந்தாலும் சரி, அனுராவாக இருந்தாலும் சரி.யாருமே பொறுப்புக் கூற மாட்டார்கள்.

இதில் இங்கே தமிழ் மக்கள் கவனிக்க வேண்டிய மற்றொரு விடயம் உண்டு. ஐநா கூட்டத் தொடர்களின் போது தான் சனல் நாலு வீடியோக்கள் வெளிவந்தன. ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பான ஒப்புதல் வாக்கு மூலங்களை வெளிப்படுத்தும் வீடியோக்கள் வெளிவந்தன. இப்பொழுதும் ஐநா கூட்டத் தொடரின் போது தான் ரணிலை அம்பலப்படுத்தும் அல்ஜஸீராவின் வீடியோவும் வெளி வந்திருக்கிறது.

அது ரணிலை மட்டும் அம்பலப்படுத்தவில்லை. இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு பொறுப்புக்கூறும் பண்பு இல்லாதது என்பதையும் மறைமுகமாக வெளிப்படுத்துகின்றது. ஐநா கூட்டத் தொடர் நடக்கும் காலங்களில் இலங்கை அரசாங்கங்களின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் உத்திகளா இவை? ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் அந்த அழுத்தங்கள் தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுத் தந்தன? அதேசமயம் மேற்கு நாடுகளுக்கு எதைப் பெற்றுக் கொடுத்தன?

# சிம்பொனியால் தமது இசைப் பயணத்தை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்ற இளையராஜா

இசைஞானி இளையராஜா சிம்பொனியால் தனது இசைப்பயணத்தை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றுள்ளார். இசைஞானி இளையராஜா மேற்கத்திய – கர்நாடக இசை கலந்த 'வேலியண்ட்' பாரம்பரிய சிம்பொனி இசையை இயற்றி இருக்கிறார். இதனை முதன் முதலில் அரங்கேற்றும் நிகழ்ச்சி, லண்டனில் உள்ள அப்பல்லோ அரங்கத்தில் நடைபெற்றது.



உலகின் தலைசிறந்த இசைக்குழுவான ரோயல் பிலார்மோனிக் ஆர்கெஸ்ட்ரா வுடன் இணைந்து வேலியன்ட் சிம்பொனி இசை அரங்கேற்றப்பட்டது.

ஒரு கதை அல்லது ஒரு சம்பவம் அல்லது ஒரு நிகழ்ச்சியை இசை வடிவத்தில் நான்கு பகுதிகளாக சொல்வதற்கு பெயர் தான் சிம்பொனி எளிமையாக சொல்லவேண்டும் என்றால் சிம்பொனி என்பது ஒரு ஆர்கஸ்ட்ரா (Orchestra) அவ்வளவுதான். மிக முக்கியமாக, சிம்பொனி இசையை ஸ்டுடியோவுக்கு உள்ளே உருவாக்கி பின்னர் அதை வெளியிடக் கூடாது. ஒரு பெரிய அரங்கத்தில் 80க்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்களோடு, ஒவ்வொரு இசையையும் இருபது நிமிடங்களுக்கு மேல் பார்வையாளர்களுக்கு முன்னிலையில் இசைக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் அது சிம்பொனியாகக் கருதப்படும்.

சிம்பொனி குறைந்த பட்சம் இருபது நிமிடங்கள் இருக்க வேண்டும். 18 முதல் 24 வகையான இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டும். 80 முதல் 120 இசைக் கலைஞர்கள் வரை ஒரு அரங்கத்தில் இதை இசைக்க வேண்டும்.

இந்த எண்ணிக்கையில் ஒன்று குறைந்தால் கூட அது சிம்பொனி ஆர்கஸ்ட்ரா என்று அழைக்கப்படாது. மாறாக அது சேம்பர் ஆர்கஸ்ட்ரா என்று தான் அழைக்கப்படும்.

1976 ஆம் ஆண்டு தேவராஜ்–மோகன் இயக்கத்தில் வெளியான 'அன்னக்கிளி' திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் இசைஞானி இளையராஜா. இவர் தனது வரலாற்றில் இதுவரை 1,000க்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

பிரபல இசை விமர்சகர் மறைந்த சுப்புடு அவர்கள் இளையராஜாவின் பாடல்களை அதிகம் இவர் குறை சொல்லியது இல்லை அதிகம் பாராட்டத் தான் செய்வார். அதிலும் சில குறைகள் இருந்தால் அதிக பட்சம் சொல்வார் ஆனால் அதிகபட்சம் இளையராஜாவின் பாடல்களை இவர் பாராட்டி தான் பழக்கம்.

இளையராஜா 1993ல் லண்டனில் சிம்பொனி இசையமைத்து வந்த போது இவர்தான் முதல் நபராக சென்று இளையராஜாவுக்கு வாழ்த்து சொல்லியவர்.சுப்புடு அவர்கள். கடந்த 2007இல் சுப்புடு மறைந்தார்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

08 மார்ச் 2025 - 14 மார்ச் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புவனேஸ்வரி நடராஜா

தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி நடராஜா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 08 மார்ச் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி புவனேஸ்வரி நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம்

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 08 மார்ச் 2025 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு விஸ்வலிங்கம் சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி முருகேசு பரிமளம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசு பரிமளம் அவர்களின் 14வது ஆண்டு நினைவு நாள் 07 மார்ச் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி முருகேசு பரிமளம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு கோகுலன் சண்முகம்

கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த கோபி என்று அன்பாக அழைக்கப்படும் திரு கோகுலன் சண்முகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 05 மார்ச் 2025 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்ப நண்பர் திரு ஆர்.ஆர். ராஜ்குமார் அவர்கள் கோபியின் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார். திரு கோகுலன் சண்முகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது நண்பர் ராஜ்குமார் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 21 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மார்க்கண்டு மனோன்மணி
### திரு செல்லர் மார்க்கண்டு

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர்களது 26வது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் தந்தையார் திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது நினைவையும் இணைத்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். தாய், தந்தையரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



01 மார்ச் 2025 சனிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் இரத்தினவடிவேல் மயில்வாகனம் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



17 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடா குடும்ப இணைவு நன்நாளாகும். அன்றைய தினத்திற்காக கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி குடும்பத்தினர் 02 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




05 மார்ச் 2025 புதன் கிழமை கனடாவில் வசிக்கும் திரு கண்ணன் இலங்கையன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கண்ணன் இலங்கையன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



05 மார்ச் 2025 புதன்கிழமை கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கோகுலன் (கோபி) சண்முகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவர்களது குடும்ப நண்பர் திரு ஆர்.ஆர்.ராஜ்குமார் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



07 மார்ச் 2025 வெள்ளிக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசு பரிமளம் அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



08 மார்ச் 2025 சனிக்கிழமைகனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஸ்ரீதேவி ஸ்ரீகுமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஸ்ரீதேவி ஸ்ரீகுமார் அவர்கள் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




08 மார்ச் 2025 சனிக்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு விசுவலிங்கம் சுப்பிரமணியம் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



08 மார்ச் 2025 சனிக்கிழமை தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி நடராஜா அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




24 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





10 மார்ச் 2025 திங்கட்கிழமை யாழ்.சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது கணவர் திரு செல்லர் மார்க்கண்டு அவர்களையும் நினைவு கூர்ந்து அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 மார்ச் 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தினுஷன் செல்வராஜா லக்ஷி தம்பதிகளின் செல்வப்புதல்வன் றேயுன் தினுஷனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் றேயுன் தினுஷன் தனது பெற்றோரகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





APRIL
18&19
2025
TICKETS
$30 $50 VIP($100)
416-566-0790
RAMU
Playback Singer
TMS SELVAKUMAR
AKSHAYA SHIVKUMAR
Zee Tamil Singer
OLD IS GOLD
KARIS
EVENT PLACE
55 Nugget Ave unit 10,
Scarborough, ON M1S 4L4
AAROSAI
APRIL 18
NATCHATHRAA
MUSIC GROUP
APRIL 19



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா




SUNDAY
JUNE 01
2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்

## சர்க்கரைப் பொங்கல் விழா - 2025
## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. ஏப்பிரல் 27, 2025ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..............................

குடும்பப் பெயர்: ..............................

பிரிவு: ..............................

பிறந்த திகதி: ..............................

தொலைபேசி எண், email: ..............................

..............................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**

# யாழ்ப்பாணமே உனது பசி எது? தாகம் எது?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



அண்மையில் பலாலி வீதியில் பல்கலைக் கழகத்தில் இருந்து நடந்து போகக் கூடிய தூரத்தில் ஓர் உயர்தர உணவகம் திறக்கப்பட்டது.அதன் பெயர் டெலிஸ் .அதற்குச் சில கிழமைகளுக்கு முன்பு அதே பலாலி வீதியில் மற்றொரு உயர்தர உணவகம்-காலித் பிரியாணி-திறக்கப்பட்டது. முன்சொன்ன உணவகத்தில் இருந்து நடந்து போகக்கூடிய




தூரத்தில் இந்த உணவகம் உண்டு. இந்த இரண்டு உணவகங்களும் திறக்கப்படுவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் யாழ்ப்பாணம் நகரத்தின் மையத்தில் முன்பு வெலிங்டன் தியேட்டர் அமைந்திருந்த வளவிற்குள் 'கீல்ஸ்' பேரங்காடி திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட நாளிலிருந்து இரவும் 'பகலும் நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு குவிகிறார்கள்.

ஏற்கனவே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இருந்து நடந்து போகக்கூடிய தூரத்தில் ஆஸ்பத்திரி வீதியில்.வேம்படிச் சந்திக்கு அருகாக உள்ள சூழலில் உயர்தர உணவகங்கள் பல திறக்கப்பட்டுள்ளன. பீட்சா கடைகளில் இருந்து பிரியாணி கடைகள் வரை பல்வேறு வகைப்பட்ட உணவகங்கள் மிகக் குறுகிய தூர இடைவெளிக்குள் உண்டு.

இந்த உணவகங்கள் தவிர இவற்றிற்கு முன்னரே திறக்கப்பட்ட உயர்தர விருந்தினர் விடுதிகள் உண்டு. அங்கேயும் இரவில் நூற்றுக்கணக்கானவர்களைக் காணமுடியும். அவரவர் அவரவர் நுகர்வுக் கொள்ளளவுக்கு ஏற்ப உணவகங்களை நாடிச் செல்கிறார்கள்.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான தமிழ்ச் சமூகத்தில் நுகர்வுத் தாகம் அதிகரித்து வருவதைஒரு நுகர்வு அலை எழுந்திருப்பதை பல ஆண்டுகளுக்கு முன்னரே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கடந்த 15 ஆண்டுகளிலும் அந்த நுகர்வுப் பசியும் தாகமும் அதிகரித்துச் செல்கின்றன. போரினால் மூடப்பட்டிருந்த ஒரு சமூகம் வெளியுலகத்துக்குத் திறந்துவிடப்படுகையில் நுகர்வுத்தாகமும் பசியும் அதிகமாக இருக்கும். புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியுதவிகள் மட்டும் இதற்குக் காரணமல்ல.ஆயுத மோதலுக்கு பின்னர் தமிழ்மக்கள் தமது வாழ்க்கையைப் படிப்படியாகக் கட்டியெழுப்பி வருகிறார்கள் என்பதன் குறிகாட்டிகளில் ஒன்றாக மேற்படி உயர்தர உணவகங்களின் பெருக்கத்தைக் கூறலாம்.

ஒரு மாற்றத்திற்காக வெளியில் போய்ச் சாப்பிட விரும்புகிறவர்கள்அல்லது வித்தியாசமாகச் சாப்பிட விரும்புகிறவர்கள் அல்லது கூடியிருந்து சாப்பிடுவதைக் கொண்டாட விரும்புகிறவர்கள் அவ்வாறு உயர்தர விருந்தகங்களை நோக்கிப் போகிறார்கள்.

வசதி படைத்த மேல்நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமல்ல அன்றாடம் உழைப்பவர்கள் அதிகமுடைய கிராமங்களிலும் கூட இரவு உணவுக்காக பேக்கரிகளில் தங்கியிருக்கும் ஒரு நிலையைக் காணலாம்.

உதாரணமாக.சில ஆண்டுகளுக்கு முன்பு உரும்பிராயில் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஸ்தாபகருடைய நினைவு தினத்தைக் கொண்டாடுவதற்காக போயிருந்தோம். பெருமளவிற்கு அன்றாடம் உழைப்பவர்களைக் கொண்ட ஒரு கிராமம் அது. நாங்கள் அங்கேயிருந்த சுமார் 5 மணித்தியால காலப்பகுதிக்குள் 8 பேக்கரி வாகனங்கள் அப்பகுதிக்குள் வந்துபோயின.அவற்றுள் சில ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வந்தன. அந்த கிராமத்தவர் ஒருவரிடம் கேட்டேன். இவ்வளவு அதிக தொகையாக பேக்கரி வாகனங்கள் வருகின்றனவே அந்த அளவுக்கு நுகர்வு உண்டா? என்று. அவர் சொன்னார்.''ஓம் பெருமளவுக்கு உடல் உழைப்பாளிகளாகிய எமது கிராமத்தவர்கள் இரவுகளில் ஆறுதலாக இருக்க விரும்புகிறார்கள். இரவில் சமைப்பதை விடவும் இந்த பேக்கரி உணவுகளை வாங்கினால் பெண்கள் ஆறுதலாக இருந்து திரைத்தொடர்களைப் பார்க்கலாம்'' என்று சொன்னார்.

சமையல் பெண்களுக்கு மட்டுமே விதிக்கப் பட்ட ஒரு கடமை என்று கருதும் ஒரு சமூகத்தில் இவ்வாறு விருந்தகங்களுக்குப் போவதன் மூலம் பெண்களுக்கு ஆறுதல் கிடைக்கும். பொதுவாக கிழமைக்கு ஒரு நாளிலாவது அல்லது ஒரு நாளில் ஒரு வேளையாவது சமையாமல் இருப்பதை பெண்கள் பெருமளவுக்கு ஆறுதலாகக் கருதுகிறார்கள்.

எனினும் இவ்வாறு உணவை கூடியிருந்து சாப்பிடுவதை ஒரு கொண்டாட்டமாகக் கருதும் பலரும், உயர்தர உணவகங்களில் உணவுக்கு ஓர்டர் கொடுத்து விட்டு மேசையைச் சுற்றியிருந்த அவரவர் அவரவருடைய கைபேசியை நோண்டிக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன் .ஒன்றாக உட்கார்ந்து உணவைச் சுவைப்பது ஒரு கொண்டாட்டம். அந்த கொண்டாட்டத்துக்குள்ளும் கைபேசி?

மேற்சொன்ன உயர்தர உணவகங்களில் ஒரு தொகுதி கோர்ப்பரேட் வலைப்பின்னலுக்குள் வருபவை. உதாரணமாக ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருக்கும் ஆர்ஆர் பிரியாணி இந்தியாவை மையமாகக் கொண்டது. அதற்கு நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் கிளைகள் உண்டு. அடுத்ததாக காலித் பிரியாணியும் சென்னையை மையமாகக் கொண்டது. பெருந்தொற்று நோய்க்காலத்தில் மூவர் இணைந்து உருவாக்கிய உணவகங்களின் சங்கிலி வலையமைப்பு அது.

கோப்பரேட் உணவகங்கள் உலகப் பொதுவான கோப்பரேட் சுவையைப் பரப்புகின்றன. யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான சனாதனன் கூறுவார் எல்லா பேரங்காடிகளுக்கும் ஒரே மொழி தான் என்று. அங்குள்ள தட்ப வெட்பம். அங்கு மென்மையாகத் தவழும் இசை, உணவு வேகும் வாசம் போன்ற எல்லாமும் உலகின் எல்லாப் பேரங்காடிகளுக்கும் ஒரே மாதிரியானவை தான்.

அப்படித்தான் கோப்பரேட் உணவகங்களும் உலகப் பொதுச் சுவையை பரப்புகின்றன.

ஆனால் இதனால் உள்ளூர் சாப்பாட்டுக் கடைகள் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றன என்று கூற முடியாது. ஏனென்றால் உள்ளூர் சாப்பாட்டுக் கடைகளில் வழமையாக உணவு அருந்துபவர்கள் எப்பொழுதும் அங்கே போவார்கள். ஒரு குறிப்பிட்ட பிரிவினர் தான் உயர்தர உணவகங்களை நோக்கியும் குறிப்பிட்ட சில பேரங்காடிகளை நோக்கியும் போகிறார்கள்.

உயர்தர உணவகங்களில் பிரியாணி வகை உணவைச் சாப்பிடுவது என்பது ஒரு அந்தஸ்தை சமூகத் தராதரத்தை காட்டும் விடயம் என்று கனடாவில் வசிக்கும் கீதா சுகுமாரன் கூறுகிறார். அவர் உணவுப் பண்பாட்டை தனது கலாநிதிப் பட்ட ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டவர். பிரியாணி என்பது எல்லாவிதமான பொருட்களும் கலந்து சமைக்கப்படும் ஓர் உணவு. விருந்துகளில் அது அந்தஸ்தைக் குறிப்பது. பிரியாணிக் கடைகளில் சாப்பிடுவதை ஒரு சமூக அந்தஸ்தாக கருதும் ஒரு பிரிவினர் அங்கே போகிறார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

ஆனால் அதனால் உள்நாட்டுச் சுவையும் உள்நாட்டு உணவும் கைவிடப்படுகின்றதா? இல்லை. அவ்வாறெல்லாம் ஏங்கத் தேவையில்லை. வீடுகளில் இப்பொழுதும் உள்நாட்டு சமையல் தான். உள்ளூர் சுவை தான். ஒரு வித்தியாசத்துக்காக, ஒரு மாற்றத்திற்காக அல்லது தமது அந்தஸ்தைக் காட்டுவதற்காக பிரியாணிக் கடைக்கு போகின்றவர்கள் வாழ்க்கை முழுவதும் பிரியாணிக் கடைகளிலேயே சாப்பிடுவதில்லை.

அவ்வாறு தினசரி பிரியாணிக் சாப்பிடுகிறவர்கள் யாழ்ப்பாணத்தில் அந்தக் கடைகளில் இருந்து குறுகிய தொலைவில் காணப்படும் தனியார் ஆஸ்பத்திரிகளில் தங்களுடைய கொலஸ்ட்ரோலைக் கரைப்பதற்கான சிகிச்சைகளையும் பெறுகிறார்கள்.



அதாவது ஒரு கோப்பரேட் கொலஸ்ட்ரோலை விற்கிறார். ஒரு கோப்பரேட் கொலஸ்ட்ரோலைக் கரைக்கிறார். ஆக மொத்தம் கோப்பரேட்களின் ஆய்வு கூடமாக மாற்றப்பட்ட உள்ளூர் உடல்?

கோப்பரேட் சுவை என்பது உலகப் பொதுவானது. உள்ளூர்ச் சுவை என்பது அதிகம் தேசியத் தன்மை மிக்கது. ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாகவனையும் அம்சங்களில் ஒன்று பொதுப் பண்பாடு. பொதுப் பண்பாட்டுக்குள் உணவுப் பண்பாடும் அடங்கும். எனவே உணவுப் பண்பாடானது ஒரு மக்கள் கூட்டத்தின் தேசியத் தனித்துவங்களில் ஒன்றாகக் கருதத்தக்கது.

1966இல் மேதினத்தன்று இடதுசாரிகள் தமிழ்மக்களுக்கு எதிராக எழுப்பிய கோசத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். தோசே மசால வடே அப்பிட்ட எப்பா இது தமிழர்களை அவர்களுடைய உணவுக் கூடாக விழித்த ஒரு கோஷம். தோசையும் மசாலா வடையும் வேண்டாம் என்று பொருள். அதாவது தோசையும் வடையும் அங்கே தமிழ் மக்களின் குறியீடாகப் பயன்படுத்தப் பட்டன.

ஈழத் தமிழர்கள் மத்தியில் வடக்கிலும் கிழக்கிலும் வித்தியாசமான உணவுப் பண்பாடுகள் உண்டு. வடக்கில் யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இடையே வித்தியாசங்கள் உண்டு. யாழ்ப்பாணத்திலேயே வடமாராட்சி தீவுப் பகுதிக்கிடையே வித்தியாசமான உள்ளூர் உணவுப் பண்பாடுகள் உண்டு. ஒரு தேசிய இனத்தின் உள்ளூர் உணவு பண்பாட்டுக்குள்ளேயே பல வகைகள் உண்டு. அவை ஏக பரிமாணத்தைக் கொண்டவை அல்ல. இந்தப் பல்வகைமையின் திரட்சி தான் ஈழத் தமிழர்களுடைய பொதுவான உணவு பண்பாடாகும். உலகில் தூய உணவுப் பண்பாடு என்று ஒன்று கிடையாது என்று கீதா சுகுமாரன் கூறுகிறார்.எல்லா உள்ளூர் உணவுப் பண்பாடுகளும் கொண்டும் கொடுத்தும் வளர்ந்தவை தான்.

இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே கோப்பரேட் உணவுப் பண்பாட்டையும், உள்ளூர்.தேசியத் தனித்துவம் மிக்க உணவுப் பண்பாடுகளையும் பார்க்க வேண்டும்.

ஆயுத மோதல்களுக்கு பின்னரான நுகர்வுப் பசி.தாகம் என்பவற்றின் பின்னணியில் ஒரு தேசமாக திரள்வதன் மூலம் மட்டுமே தனது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய தமிழ்ச் சமூகமானது. தனித்துவம் மிக்க தனது சொந்தச் சுவையைக் குறைத்து மதிப்பிட்டு. அதை லோக்கலானது என்று இகழ்ந்துவிட்டு. கோப்பரேட் சுவை மீது பசி தாகமுடையதாக மாறி விடுமா?

கோப்பரேட் உணவகங்களின் பெருக்கத்தின் மத்தியில் உள்ளூர்த் தனித்துவங்களைப் பாதுகாப்பதை ஒரு வாழ்க்கை முறையாக. பெருமைக்குரிய வாழ்க்கை முறையாகக் கட்டமைப்பது என்பது ஒரு சமூகத்தின் அரசியல் சமூக பண்பாட்டுத் தலைமைத்துவங்களின் வேலை. அது தொடர்பாக அந்த சமூகத்தின் தேசியவாத அரசியலை முன்னெடுக்கும் தரப்புக்கள் மத்தியில் பொருத்தமான விழிப்பும் தூரநோக்கிலான (22ம் பக்கம் பார்க்க)

# மறுக்கப்படும் பொறுப்புக்கூறல்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றங்கள் குறித்து, கடந்த மார்ச் 3ஆம் திகதி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் வாய்மொழி அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

தண்டனை விலக்கு கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருமாறும், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துமாறும், வலியுறுத்திய அந்த அறிக்கையில், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீதான கண்காணிப்புகளை தளர்த்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது, ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருண திலக அந்த அறிக்கைக்கு பதிலளித்து உரையாற்றியிருந்தார்.

அவரது அந்தப் பதில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் நிகழ்த்திய உரையின் மறு பதிப்பாகவே அமைந்திருந்தது. காணாமல் போனோருக்கான பணியகம் மற்றும் இழப்பீடுகளுக்கான செயலகத்தை வலுப்படுத்துவது, உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவது போன்ற விடயங்களை அது உள்ளடக்கியதாக இருந்தது.

அத்துடன் சாட்சியங்களை சேகரிக்கும் வெளியகப் பொறிமுறையை, இறைமையுள்ள நாடு என்ற வகையில், இலங்கை நிராகரிப்பதாகவும் அவர் அந்த அறிக்கையில் கூறியிருந்தார். இலங்கை அரசாங்கம் இறைமையுள்ள நாடு என்ற வகையில் வெளியகப் பொறி முறையை நிராகரிக்கிறதா அல்லது இலங்கையில் இடம் பெற்ற மீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான சாட்சியங்களை, சேகரிக்கும் பொறிமுறையை நிராகரிக்கிறதா என்ற கேள்வி இருக்கிறது. இதுவரை காலமும், இலங்கை அரசாங்கம் நம்பகமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கியிருக்கவில்லை. மீறல்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற முறையில் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சான்றுகளை சேகரித்துப் பகுப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த 16 ஆண்டுகளாக பொறுப்புக் கூறலுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், இலங்கை அரசாங்கம் அது உள்ளக மட்டத்தில் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தி வந்தாலும், உள்ளக மட்ட பொறுப்புக் கூறல் முயற்சிகளில் அது கவனம் செலுத்தியிருக்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கங்கள் இதற்கான எந்த நடவடிக்கையிலும் இறங்கவில்லை.

இப்பொழுது ஆட்சிக்கு வந்துள்ள, அநுரகுமார திசாநாயக்க அரசாங்கமும் கூட, இந்த விடயத்தில் முன்னைய அரசாங்கத்தை பின்பற்றுகின்ற நிலைப்பாட்டி லேயே இருக்கிறது. அதாவது, வெளியகப் பொறிமுறைகளை நிராகரிப்பதில் உறுதியாக இருக்கிறது. வெளியகப் பொறி முறை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் தானாக உருவாகவில்லை.

இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள், அதற்கான நடவடிக்கைகளை எடுக்காத நிலையில்தான், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் மூலம், சாட்சியங்களையும் சான்றுகளையும் சேகரிக்கின்ற, பக்கச் சார்பற்ற ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டது. அதைவிட ஐ.நா. ஒன்றும் தனியார் நிறுவனம் அல்ல. அது நாடுகளின் கூட்டமைப்பு. ஐ.நாவில் அங்கம் வகிக்கின்ற அரசாங்கங்களின் அமைப்பாக தான் அது செயற்படுகிறது. அதன் அமைப்புக்களை, தனி நபர்களோ, தனி நிறுவனங்களோ, நாடுகளோ கட்டுப்படுத்துவதில்லை. ஐ.நா.வில் இலங்கையும் ஒரு பங்காளி நாடு.

ஐ.நா.வின் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக இலங்கை அரசாங்கம் ஜெனிவா விலும், நியூ யோர்க்கிலும் நடக்கும் ஒவ்வொருகூட்டத்திலும் கூறி வந்திருக்கிறது. அப்படியிருக்க, ஐ.நா. உருவாக்கிய சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையை, இலங்கையின் மீதான தலையீடாகவோ இறைமையின் மீதான தலையீடாகவோ கருத முடியாது. அவ்வாறு கருதினால் இலங்கை அரசாங்கம் ஐ.நா.வில் அங்கத்துவம் வகிப்பதும், அதன் இறைமைக்கு விடுக்கப்படும் சவால் தான். ஐ.நா.வின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டே, அந்த அமைப்பில் இலங்கை இணைந்து கொண்டது.

இப்பொழுது கூட, இலங்கை அரசாங்கம் கூறுவது போல, ஐ.நா மனித உரிமைகள் பேரவை பக்கச் சார்பாகவோ, இரட்டை நிலைப்பாட்டிலோ இருக்கிறது எனக் கருதினால், அதில் இருந்து அமெரிக்காவைப் போல வெளியேறக் கூடிய சுதந்திரத்தை கொண்டிருக்கிறது. அதனுடன் இணைந்து செயல்பட முடி யாது என்று கூறி வெளியே வரக்கூடிய வாய்ப்பு இலங்கைக்கு இருக்கிறது. ஆனால், இலங்கை அவ்வாறு வெளியே வரமுடியாது. வெளியே வருவதற்கும் அது தயாராக இல்லை.

ஏனென்றால் அப்படி வெளியேறினால், அது இலங்கைக்கு பாதகமாக அமையும் என்பது ஆட்சியில் உள்ள அரசாங்கங்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால், அமெரிக்காவைப் போல, இஸ்ரேலை போல போல அத்தகைய ஒரு முடிவை எடுக்கமுடியாத நிலையில் இலங்கை இருக்கிறது.

இலங்கையை பொறுத்தவரையில், ஜெனிவாவை காலத்தை இழுத்தடிக்கும் ஒரு அரங்காகத்தான் பயன்படுத்த முனைகிறதே தவிர, பிரச்சினைகளை தீர்ப்பதற்கான களமாக பயன்படுத்துவதற்கு தயாராக இல்லை. அப்படி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பயன்படுத்த விரும்பி இருந்தால், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணி யகம் வழங்க முன் வந்த தொழில்நுட்ப உதவிகளை பயன்படுத்திக் கொண்டு, பொறுப்புக்கூறல் பிரச்சினையை போதோ தீர்த்திருக்க முடியும்.

ஆனால் அவ்வாறான ஓர் எண்ணம், இப்போதும் சரி, இதற்கு முன்னரும் சரி, ஆட்சியில் இருந்த எந்த ஒரு ஆட்சியாளரிடமும் இருக்கவில்லை. இப்போதைய அரசாங்கம் பொறுப்புக் கூறல் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதாக கூறினாலும், உள்ளக மட்டத்தில் அதனை அணு குவதாக கூறினாலும், அதற்கான எந்த ஒரு சிறு துரும்பை கூட அசைத்திருக்கவில்லை என்பதே உண்மை.

ஜெனிவா தீர்மானத்தில் தனியே பொறுப்புக் கூறல் விடயங்கள் மாத்திரம் வலியுறுத்தப்பட்டிருக்கவில்லை. போர்க் காலத்துடன் தொடர்புடைய பல் வேறு விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள, அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, இராணுவத்தினரின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை மீள ஒப்படைப்பது, பௌத்தமயமாக்கலை நிறுத்துவது, காணி அபகரிப்பை நிறுத்துவது என பல விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

அப்படி இருந்தும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் ஆகப் போகின்ற நிலையில், இவற்றுக்கு கூட இன்னமும் எந்த தீர்வும் வழங்கப்படவில்லை. எல்லாவற்றையும் செய்வோம் என கூறுகின்ற நிலையில் தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இருக்கின்றது செய்வோம்

செய்வோம் என்றால், எப்போது செய்வோம் என்ற கேள்வி வருகிறது. அவர்கள் அதற்கு ஒரு காலக்கெடுவினை நிர்ணயிக்க தயாராக இல்லை. தங்களுக்கு உள்ள, ஐந்து ஆண்டு பதவிக் காலத்தில் எப்போது வேண்டுமானாலும் அதனைச் செய்யலாம் என்பது தவறான ஒரு அணுகுமுறை. ஏனென்றால் 5 ஆண்டுகள் பதவிக் காலம் அவர்களுக்கு இருந்தாலும், அதுவரை வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு காலத்தை இழுக்க வேண்டிய தேவை இல்லை. அப்படி காலத்தை இழுத்தடிக்க ஒரு அரசாங்கம் நினைக்கிறது என்றால், அவர்கள் ஏமாற்ற முனைகிறார்கள் என்பது தான் அர்த்தம்.

ஒரு வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு கடைசி எல்லை வரை காத்திருக்க வேண்டும் என்ற விதி கிடையாது. ஏனென்றால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை எவ்வளவு விரைவாக திருப்திப் படுத்த முடியுமோ, அவர்களுக்கு எவ்வளவு விரைவாக பதிலை கொடுக்க முடியுமோ, அது அவர்களுக்கு ஆறுதலை அளிக்கும். அவர்களின் காயங்களை குணப்படுத்தும். இன்றைய சூழலில் அதுதான் முக்கியமானது. ஆனால், அந்த விடயத்தில் இந்த அரசாங்கம் கூட கவனம் செலுத்தவில்லை. தற்போதைய அரசாங்கத்துக்கு எல்லா விதமானவாய்ப்புகளும் கிடைத்திருக்கின்றன. தட்டிக் கழிக்க முடியாத வகையில் அதனிடம் (22ம் பக்கம் பார்க்க)



# நாடு அநுராவோடு! ஊர் எங்களோடு!
## உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்மக்களிடம் எடுபடுமா இந்தச் சுலோகம்?

நீண்ட காலமாக தாமதிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்களை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியிருக்கிறது. அரசியல் கட்சிகளும் குழுக்களும் மார்ச் 17ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நியமனப் பத்திரங்களை கையளிக்கலாம். அனேகமாக மே மாத முற்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் தோல்வி கண்ட அரசியல் கட்சிகள் மீண்டும் ஒரு தேர்தலுக்கு முகங்கொடுக்கக் கூடிய அளவுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளக் கூடிய வலுவுடன் இல்லை என்ற போதிலும், போட்டியிட வேண்டிய அரசியல் நிர்ப்பந்தம் அவற்றுக்கு இருக்கிறது.

தெற்கில் உள்ள பழைய கட்சிகளையும் வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளையும் பொறுத்தவரை, இரு தேசிய தேர்தல்களுக்கு பின்னரான புதிய அரசியல் சூழ்நிலையில் தங்களுக்கு ஒரு பொருத்தப்பாட்டை தேடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. அதனால் உள்ளூராட்சி தேர்தல்களை எதிர் கொள்வதற்கு கூட்டணிகளை அமைக்கும் முயற்சிகளில் அவை இறங்கியிருக்கின்றன.

நீண்டகாலமாக அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) க்கு இருந்த மக்கள் ஆதரவைக் கூட தற்போது கொண்டிருக்கவில்லை.

ராஜபக்சாக்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்த வேகத்தில் மக்கள் மத்தியில் அமோக செல்வாக்கைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியதோ அதே வேகத்தில் அதிகாரத்தையும் ஆதரவையும் இழந்து நிற்கிறது. குறைந்தளவு மக்கள் ஆதரவுடன் என்றாலும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியே இரண்டாவது பெரிய அரசியல் சக்தியாக விளங்குகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒரு இணக்கப்பாடுக்கு வந்து உள்ளூராட்சி தேர்தல்களை கூட்டாக எதிர் கொள்வதற்கு ஐக்கிய தேசிய கட்சி அண்மைக காலமாக மேற்கொண்ட முயற்சிகளில் பரவலாக எதிர்பார்க்கப் பட்டதை போன்றே முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை. இரு கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகள் இணைந்து செயற்படுவதற்கு விரும்புகின்ற போதிலும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான தன்னகம்பாவப் போட்டி இதற்கு பிரதான முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. அதனால், இரு கட்சிகளும் உள்ளூராட்சி தேர்தல்களை கூட்டாகச் சந்திப்பதற்கான வாய்ப்பு பெரும்பாலும் இருக்காது.

அதேவேளை, ஆளும் கட்சியான ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரை, அதன் கடந்த ஐந்து மாத கால ஆட்சி மீதான ஒரு வாக்கெடுப்பாக உள்ளூராட்சி தேர்தல்கள் அமையப் போகின்றன. பழைய அரசியல் கட்சிகளை நிராகரித்து பெரும் எதிர்பார்ப்புகளுடன் தேசிய மக்கள் சக்தியை மக்கள் அதிகாரத்துக்கு கொண்டு வந்த போதிலும், பொருளாதார இடர்பாடுகளில் எந்தவிதமான குறிப்பிடத்தக்க தணிவையும் காணமுடியாமல் இருப்பதால் அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். நடைமுறைச் சாத்தியத்தைப் பற்றி சிந்தித்துப் பார்க்காமல், இரு தேசிய தேர்தல்களிலும் மக்களுக்கு வழங்கிய பெருவாரியான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் அரசாங்கம் தடுமாறுகிறது. ஆனால், அதற்காக எதிர்க்கட்சிகளை உள்ளூராட்சி தேர்தல்களில் பெருமளவில்



ஆதரிக்கக்கூடிய அளவுக்கு மக்களின் மனங்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டு வருகிறது என்று கூறிவிட முடியாது.

கடந்த ஜனாதிபதி தேர்தல்களில் வாக்களிக்காதவர்களின் தொகையை விடவும் பாராளுன்ற தேர்தல்களில் வாக்களிக்காதவர்களின் தொகை மிகவும் அதிகமானதாகும். ஒரு ஏழு மாத கால இடைவெளியில் மூன்று தேர்தல்களைச் சந்திக்க நிர்ப்பந்திக்கப்படுவதாலும் தாங்கள் ஆட்சிக்கு கொண்டு வந்த அரசாங்கம் தங்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இயலாததாக இருப்பதாலும் மக்கள் உள்ளூராட்சி தேர்தல்களில் எந்தளவுக்கு ஆர்வம் காட்டுவார்கள் என்பது முக்கியமான ஒரு கேள்வி.

இது இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேர்தல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் பின்னடைவைக் கண்ட தமிழ் அரசியல் கட்சிகளும் உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுவதற்காக மீண்டும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடும் பிரயத்தனங்களில் ஈடுபடுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவை பெருமளவில் பெற்று இரு மாகாணங்களிலும் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றிய தனியான கட்சியாக விளங்குவதற்கு காரணம் தங்களது கடந்த கால செயற்பாடுகளே என்பதை தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இதுவரையில் முழுமையாகப் புரிந்து கொண்டார்களோ தெரியவில்லை.

தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சியை, எதிர்காலத் தேர்தல்களை நோக்கமாகக் கொண்டு அல்லாமல், வேறு காரணத்துக்காக முன்னெடுப்பதாக முதலில் கூறியவர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொனானம்பலம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை முன்னெடுக்கும் போது தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகளை தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து முன் வைப்பதை நோக்கமாகக் கொண்டதே தனது முயற்சி என்று அவர் அறிவித்தார். இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடனும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுடனும் பொன்னம்பலம் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தை யாழ்ப்பாணத்தில் நேரில் சந்தித்து பொன்னம்பலம் ஒத்துழைப்பைக் கோரி கடிதம் ஒன்றையும் கையளித்தார். ஆனால், தமிழரசு கட்சி அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை தொடர்பிலான அதன் நிலைப்பாட்டை அவருக்கு அறிவித்ததை அடுத்து அவரது முயற்சி தடங்கலுக்கு உள்ளானது. அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு பின்னரே புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை முன்னெடுக்கவிருப்பதாக அறிவித்திருப்பதால், அந்த விவகாரத்தில் தற்போது அவசரப்பட வேண்டியதில்லை என்ற தொனியில் தமிழரசு கட்சியின் பதில் அமைந்திருந்தது.




தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்தினால் எந்தவிதமான அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனையும் முன் வைக்கப்படாத நிலையில் தமிழ்க் கட்சிகள் அது தொடர்பில் ஆராய்வதற்கு எதுவுமில்லை என்பதே தமிழரசு கட்சியின் நிலைப்பாடாக இருந்தது.

முதலில் பொன்னம்பலத்துடன் ஒத்துழைத்துச் செயற்படுவதில் அக்கறை காட்டிய சிறீதரன் தனது கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த ஒத்துழைப்பை தொடர்வதில் அசௌகரியத்தை எதிர் நோக்க வேண்டியிருந்தது. தமிழரசு கட்சியின் செயற்பாடுகள் தொடர்பிலான சகல தீர்மானங்களையும் மேற்கொள்ளும் மத்திய செயற்குழுவில் சிறீதரன் செல்வாக்கைச் செலுத்த முடியாத ஒரு நிலை தற்போது காணப்படுகிறது.

அவரை எதிர்த்து கடந்த வருடம் ஜனவரியில் தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற முடியாமல் போன முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரனே இன்று அந்த கட்சியை வழி நடத்துகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். அவர் இப்போது கட்சியின் பதில் பொதுச் செயலாளராவும் இருக்கிறார்.

அதனால் புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை தொடர்பிலான

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- வீ.தனபாலசிங்கம் -




கட்சியின் நிலைப்பாடு சுமந்திரனின் அணுகுமுறைகளின் அடிப்படையிலேயே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஜனாதிபதி தேர்தல் உட்பட பல்வேறு விவகாரங்களில் கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராக வெளிப்படையாகச் செயற்பட்டுவந்த சிறீதரன் புதிய அரசியலமைப்பு விவகாரத்தில் பொன்னம்பலத்துடன் சேர்ந்து தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியை தொடருவதில் ஏன் நாட்டம் காட்டவில்லை என்பது தெரியவில்லை.

இந்த நிலையில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து யோசனைகளைச் சமர்ப்பிப்பதை நோக்கிய முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படாமல் இருக்கிறது. கடந்த பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு வழமைக்கு மாறாக, பொன்னம்பலம் தமிழரசு கட்சியுடன் (குறிப்பாக சிறீதரனை தலைவராகக் கொண்ட அதன் பாராளுமன்றக் குழுவுடன்) ஒத்துழைத்துச் செயற்படுவதில் அக்கறை காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு தமிழரசு கட்சி இன்றியமையாதது என்றும் அது பாராளுமன்ற தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பது ஜனநாயக விரோதமானது என்றும் பொன்னம்பலம் வெளிப்படையாக கருத்து வெளியிட்டதையும் காணக்கூடியதாக இருநதது.

புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையின் போது தமிழ்க்கட்சிகள் எடுக்க வேண்டிய நிலைப்பாடுகள் தொடர்பில் மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் நடத்தப்படக்கூடிய பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கு ஏழு பேரைக் கொண்ட குழுவொன்றை ஜனவரியில் தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு நியமித்தது. அந்த குழுவில் சிறீதரனும் ஒரு உறுப்பினர் என்ற போதிலும், தமிழரசு கட்சி பாராளுமன்றக் குழுவின் தலைவர் என்ற வகையில் அவர் பொன்னம்பலத்தின் முயற்சிகளில் (20ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2




## மணமகள்

**ID08121216 (F)**
24yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Diploma , Tba , Canada

**ID08121215 (F)**
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Bank Officer , Canada

**ID08121211 (F)**
35yrs, 5'4" , Single , Makam , 10 Sevai , Masters Degree , TBa Canada

**ID08121209 (F)**
28yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Ph.D , Doctor , India

**ID08121208 (F)**
36yrs, 5'2" , Single , Makam , 9 Sevai , Bachelors.. , Clerk , Canada

**ID08121207 (F)**
30yrs, 5' , Single , Revathi , Sevai , Bachelors.. , Accountant , Sri Lanka

**ID08121204 (F)**
31yrs, 5'4" , Single , Uthiram , 7 Sevai , Bachelors.. , Residency.. , Canada

**ID08121199 (F)**
30yrs, 5'3" , Single , Poosam , 1 Sevai , Bachelors.. , Medical Lab.. , Canada

**ID08121198 (F)**
30yrs, 5'8" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , CRA- , Canada

**ID08121197 (F)**
30yrs, 5'1" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Medical Doctor , Canada

**ID08121196 (F)**
25yrs, 5'5" , Single , Thiruvonam , 4 Sevai , Postgraduate.. , Finance Analyst , Canada

**ID08121193 (F)**
34yrs, 5'7" , Annulled , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Toronto city.. , Canada

**ID08119603 (F)**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08119509 (F)**
28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada

**ID08115839 (F)**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08115124 (F)**
40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Seva , Bachelors.. , Pharmacist , New Zealand

**ID08115839 (F)**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08120732 (F)**
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728 (F)**
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727 (F)**
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723 (F)**
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722 (F)**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721 (F)**
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718 (F)**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08121189 (F)**
32yrs, 5'6" , Single , Rohini , N/A Sevai , Ph.D , Engineer , United States

**ID08121188 (F)**
39yrs, 5'2" , Divorced , Pooraadam , 4 Sevai , High School , No work , Sri Lanka

**ID08121186 (F)**
29yrs, 5'7" , Single , Chithirai , N/A Sevai , Postgraduate.. , Accounting.. , Canada

**ID08121185 (F)**
27yrs, 5'6" , Single , Aayilyam , N/A Sevai , Diploma , Office work.. , Sri Lanka

**ID08121182 (F)**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 12 Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08121186 (F)**
29yrs, 5'7" , Single , Chithirai , N/A Sevai , Postgraduate.. , Accounting.. , Canada

## மணமகன்



**ID08121218 (M)**
32yrs, 5'7" , Single , Kettai , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121217 (M)**
43yrs, 5'5" , Divorced , Poosam , Sevai , Bachelors.. , Maintenance.. , Canada

**ID08121214 (M)**
36yrs, 6' , Single , , Sevai , , Business , Canada

**ID08121213 (M)**
26yrs, 5'6" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Software developer , Sri Lanka

**ID08121206 (M)**
33yrs, 5'3" , Single , Thiruvonam , N/A Sevai , High School , Own business , Sri Lanka

**ID08121205 (M)**
32yrs, 5'5" , Single , Moolam , 10 Sevai , , , Sri Lanka

**ID08121202 (M)**
31yrs, 5'7" , Single , Anusham , 5 Sevai , Masters Degree , Banker , Sri Lanka

**ID08121195 (M)**
36yrs, 5'5" , Single , Swaathi , N/A Sevai , Diploma , Manager , Sri Lanka

**ID08121194 (M)**
44yrs, 5'3" , Single , Swaathi , N/A Sevai , Diploma , Pharmacist.. , Sri Lanka

**ID08121191 (M)**
26yrs, 5'6" , Single , Chathayam/sadayam , 7 Sevai , High School , Textile -.. , Sri Lanka

**ID08121190 (M)**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 10 Sevai , High School , Tyre shop.. , Sri Lanka

**ID08121168 (M)**
42yrs, 5'10" , Divorced Punarpoosam , N/A Sevai , Diploma , Own Company , Canada

**ID08120583 (M)**
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564 (M)**
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada

**ID08120356 (M)**
30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada

**ID08120270 (M)**
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120144 (M)**
35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada

**ID08119698 (M)**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120481 (M)**
30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada

**ID08116778 (M)**
37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada

**ID08116404 (M)**
43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka

**ID08115828 (M)**
31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada

**ID08111978 (M)**
45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada

**ID08120734 (M)**
35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka

**ID08121184 (M)**
47yrs, 5'7" , Single , Chathayam/sadayam , 9 Sevai , Masters Degree , Entrepreneur , Canada

**ID08121183 (M)**
36yrs, 5'10" , Single , Anusham , 5 Sevai , Diploma , Business , Sri Lanka

**ID08121190 (M)**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 10 S evai , High School , Tyre shop.. , Sri Lanka

**ID08121181 (M)**
35yrs, 6' , Single , Hastham , 1 Sevai , Postgraduate.. , TTC , Canada

**ID08121180 (M)**
49yrs, 5'6" , Single , Aswini , 9 Sevai , Masters Degree , Engineer , Sri Lanka

**ID08121178 (M)**
30yrs, 6'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Software engineering , Sri Lanka

# வரலாற்றில் கற்றுக் கொள்ள மறுத்த பாடம்

இலங்கை அரசியலில் பேரலையாக எழுச்சியடைந்திருக்கும் தேசியமக்கள் சக்தி (NPP)யை எதிர்கொள்வதில் எதிர்க்கட்சிகளுக்கு (எதிரணிகளுக்கு) சவாலே மிஞ்சுகிறது. இதனால் தனிப் பெரும்பான்மை பலத்தோடு ஆட்சி அமைத்திருக்கும் NPP அரசாங்கத்தை எதிர் கொள்வதற்கு பலமான தரப்புகள் எதுவுமே தற்போதில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. NPP யை விமர்சிப்பதற்குக் கூட பலமான காரணங்களை எதிரணிகள் கண்டு பிடிக்கவில்லை.

பாராளுமன்றத்திலும் வெளியிலும் சில காரணங்களை அவை சொன்னாலும் அவை ஒன்றும் சனங்களிடம் எடுபடக் கூடிய அளவுக்கில்லை. இதனால் எந்த ஊடகங்களிலும் அவற்றுக்கு முன்னிலை இல்லை. மலையில் எறும்பு ஊர்வதைப் போலவே முன்வைக்கப்படும் விமர்சனங்கள் உள்ளன.

இது அரசியல் அரங்கில் தேசியமக்கள் சக்தியை மேலும் உயரத்துக்கே கொண்டு செல்லவைத்துள்ளது. இதனால். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகியவற்றில் பல இடங்களிலும் NPP வெற்றியடையக் கூடிய சூழலே காணப்படுகிறது.

இந்த நிலையை எதிர்கொள்வதற்கு எதிர்த் தரப்புகளில் ஐ.தே.க வும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும் என்று அவற்றின் ஆதரவாளர்கள் விரும்புகிறார்கள். அதற்காக ஐ.தே.கவுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் (ரணிலுக்கும் சஜித்துக்கும்) இடையில் உள்ள பனிப்போர் இன்னமும் முடியவில்லை. இரு தரப்பையும் உடன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு மேற் கொள்ளப்படும் சமரச முயற்சிகள் இன்னும் பெரியளவுக்குப் பயனளிக்கவில்லை என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்தாலும் எப்படியாவது இரண்டு தரப்பையும் ஒன்றாக்கவேணும். குறைந்த பட்சம் சில அடிப்படைகளிலேனும் ஒருங்கிணைந்து செயற்படவைக்க வேண்டும் என இரு தரப்பிலும் உள்ள விக்கிரமாதித்தியன்கள் மனந்தளராமல் முயற்சித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுக்களைக் கொடுப்பதற்கான காலம் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் முடியப்போகிறது.

மறுபக்கத்தில் வெறுங்கையோடு நிற்கும் பொதுஜன பெரமுன, வீம்புக்காகக் காற்றில் வாளைச் சுழற்றுகிறது. பொழுது போகவில்லை என்பதற்காக அதில் உள்ளவர்கள் அவ்வப்போது ஜோக்கடித்துக் கொண்டிருக்கிறார்கள். இறுதியாக வந்த ஜோக், 'ஊழல் இல்லாதவர்களுக்கும் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாதவர்களுக்கும் மட்டுமே உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பெரமுன இடமளிக்கும்' என்று அது சொல்லியிருப்பதாகும்.

இது உண்மையென்றால், பொதுஜன பெரமுனவில் யாருமே இருக்க மாட்டார்கள். கட்சியே இருக்காதே!

இந்த நிலையில் பெரமுன எப்படி NPP யை எதிர் கொள்வது? மட்டுமல்ல, பொதுஜன பெரமுனவின் முன்னாள் இன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களையும் முன்னாள் அமைச்சர்களையும் இலக்கு வைத்து, அதைப் பலவீனப்படுத்துவதற்கு தேசியமக்கள் சக்தி (NPP) வியூகத்தை அமைத்துக் கொண்டிருக்கிறது. மக்களிலிருந்து இவர்களைத் தனிமைப்படுத்தும் விதமாகக் குற்றச்சாட்டுகள் அடுக்கப்படுகின்றன.

அநேகமாக அடுத்த சில மாதங்களில் பெரமுனவிலுள்ள சில தலைகள் சிறைக்குள் தள்ளப்படலாம்.

இதேவிதமாகப் பலவீனமாகவே உள்ளது சிறிலங்கா சுதந்திரக்கட்சியும். சுதந்திரக் கட்சிக்கு இப்பொழுது யார் தலைமை என்று கட்சிக்கும் தெரி




யாது. மக்களுக்கும் தெரியாது. 1977 இல் ஆட்சியைக் கைப்பற்றிய ஜே.ஆர். ஜெயவர்த்தன சிறிமாவோ பண்டார நாயக்கவின் குடியுரிமையைப் பறித்து, சுதந்திரக் கட்சியை முடக்கினார். இப்பொழுது தானாகவே சுதந்திரக் கட்சி முடங்கி விட்டது. அதை முன்னரங்குக் கொண்டு வருவதற்கான வீரர்களும் இல்லை. சூரர்களுமில்லை. அதிசயம், அற்புதம் என்று சிங்கள மக்களிடத்தில் ஏதாவது மாற்றங்கள் நடந்தால் மட்டுமே சுதந்திரக் கட்சி உயிர்ப்படையக்கூடிய நிலை.

இடதுசாரிகளைக் கண்ணுக் கெட்டிய தொலைவு வரையில் காணவேயில்லை. 2009க்குப் பின்னர் வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டி.யு. குணசேகர, தினேஸ் குணவர்த்தன போன்றோர் அமைச்சர்களாக இருந்துள்ளனர். தேசிய மக்கள் முன்னணியின் அலையில் இவர்கள் அடித்துச் செல்லப் பட்டு விட்டனர்.

இதற்கு முன் அவ்வப்போது இடதுசாரிகள் ஆட்சியதிகாரத்தில் பங்கேற்றிருந்தனர். இந்தத் தடவை பாராளுமன்றத்திலே ஒருவர் கூட இல்லை என்றாகி விட்டது.

சிங்களப் பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தும் கட்சிகளின் நிலை இப்படியென்றால், வடக்குக்கிழக்கு, மலையகம் உள்ளிட்ட தமிழ் பேசும் மக்களின் பிராந்தியத்திலும் ஏறக்குறைய இதே நிலைதான்.

முஸ்லிம் கட்சிகள் தங்களுக்கு முன்னே உள்ள அரசியல் நிலைமைகள் குறித்தோ, உருவாகிக் கொண்டிருக்கும் அபாயங்களைப் பற்றியோ சிந்திப்பதாகத் தெரியவில்லை. உள்ளூரக் கவலைகளிருந்தாலும் அதை எப்படிச் சரி செய்வது என்று அவற்றுக்குத் தெரியவில்லை. ஆனால் அவை இப்படியே தொடர்ந்தும் குண்டுச்சட்டிக்குள் குதிரையை ஓட்டிக்கொண்டிருக்க முடியாது. இதைப்புரிந்து கொண்டாலும் இதிலிருந்து வெளியே வருவதற்கு அவற்றுக்கு உளத் தடைகளுண்டு. தேவையற்ற அச்சமுண்டு.

அப்படித் தான் மலையகக் கட்சிகளும் ஆளுக்கொன்றாகத் திசைக் கொன்றாகச் சிதறிப் போயுள்ளன. இவற்றை ஒருங்கிணைக்கவே முடியாது. அப்படி ஒருங்கிணைப்பதாக இருந்தால், அதற்கு மேலும் மக்கள் தண்டனை அளிக்கவேண்டும். அதாவது நெருக்கடியைக் கொடுக்கவேண்டும். அல்லது மலையகத்தில் தேசிய மக்கள் சக்தி மேலும் பலமடைய வேண்டும்.

இங்கே ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். சிங்களக்கட்சிகள் (அப்படித்தான் நடைமுறையில் உள்ளன) தற்போது சோர்வையும் பின்னடைவையும் சந்தித்திருந்தாலும் அடுத்த சுற்றில் எப்படியோ தம்மைச்சுதாகரித்துக் கொள்ளும். அல்லது சிங்கள மக்கள் அடுத்த சுற்றில் இன்னொரு வகையான அரசியற் தேர்வுக்கு வழி செய்து, அதிகாரம் ஒரே இடத்தில் குவிவதைத் தடுத்துக் கொள்வார்கள். அவ்வாறான சந்தர்ப்பத்தில் மீண்டும் இந்தக்கட்சிகளில் ஒன்றோ இரண்டோ மேலெழுந்து கொள்ளும். அல்லது இவற்றின் புதிய கூட்டொன்று உருவாகும். அல்லது இன்னொரு புதிய கட்சியேனும் உதயமாகலாம்.

சிங்களச் சமூகம் தமிழ்ச் சமூகத்தினரைப் போலல்ல. அவர்கள் எந்த நிரந்தரங்களையும் ஏற்பதில்லை. எதிலும் திருப்தி அடைவதில்லை. ஒப்பீட்டளவில் தங்களுடைய அரசியலில் மாற்றங்களை எப்போதும் நிகழ்த்திப் பார்க்கும் ஆவலைக்கொண்டவர்கள் சிங்கள மக்கள். அதாவது ஜனநாயகத்தின் நரம்பைக் கெட்டுப் போக விடுவதில்லை அவர்கள்.

ஆனால் தமிழ்க்கட்சிகளின் தமிழ் அரசியலின் நிலை?

அது தான் மிக மோசமாகச்சிதைந்து போயுள்ளதே. தேசிய மக்கள் சக்தியிடம் தோல்வியைச் சந்தித்து, தமிழ் அரசியல் பின்னடைவுக்குள்ளாகிய பின்னும் தம்மை நிதானப்படுத்திக் கொள்வதில் தமிழ் அரசியற் தரப்புகள் தவறுகின்றன. இந்த நெருக்கடியை, தளர்வை, சீர்செய்வதற்கு இவை முயற்சிக்கவில்லை. பதிலாக ஒன்றையொன்று கண்டித்துக் கொண்டும், ஒன்றையொன்று குற்றம்சாட்டிக் கொண்டும் உள்ளன. இதில் இன்னும் உச்சமாகவும் சிரிப்பாகவும் இருப்பது இந்த நிலையிலும் இவை துரோகி தியாகி விளையாட்டில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பது தான்.

தென்னிலங்கைத் தீவிரவாதம் துரோகி தியாகி என்று பார்த்து தன்னுடைய அரசியலை மேற்கொள்ளவில்லை. அது ஒட்டு மொத்தமாகவே அனைத்துத் தமிழ்த் தரப்பின் அரசியலையும் காலியாக்குவதற்கு முயற்சிக்கிறது. இதில் அது (NPP) கணிசமான அளவுக்கு முதற்கட்ட வெற்றியையும் பெற்றுள்ளது. அடுத்த கட்ட வெற்றிக்குத் தயாராகிறது.

ஏற்கனவே தமிழ் அரசியற் தரப்பில் நிலவிய துரோகி தியாகி விளையாட்டைத் தமக்குச் சாதமாக்கிக் கொண்டு, விடுதலைப் புலிகளை முற்றாக அழித்தது ராஜபக்ஸ தரப்பு. அதன் மூலம் தனக்குச் சவாலாக இருந்த வலுச் சமனிலை அரசியலை அது உடைத்து நிர்மூலமாக்கியது. இதற்காக அது போரை ஒரு நிலையிலும்


கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -




தேர்தல் அரசியலை இன்னொரு வகையிலும் பயன்படுத்தியது. தனக்கு வாய்ப்பான முறையில் தமிழ்த் தரப்பில் ஒரு சாராரை வளைத்துப் பிடித்து வைத்துக் காரியமாற்றியது.

அதற்குப் பிறகும் மிஞ்சியிருந்த தமிழ் அரசியலையும் அதனுடைய அடையாளத்தையும் இப்போது துடைத்தழித்து விட முயற்சிக்கிறது தேசிய மக்கள் சக்தி (NPP). இதற்கு அது முற்று முழுதாகவே தேர்தல் அரசியலை அதாவது ஜனநாயக ரீதியில் மக்கள் வழங்கிய தீர்ப்பு என்று காட்டி இதைச் சாதிக்க முயற்சிக்கிறது.

தமிழ் பேசும் சமூகத்தின் உரிமைசார் அரசியலையும் அடையாள அரசியலையும் ஏற்றுக் கொள்ளத் தயங்கும் தேசிய மக்கள் சக்தி, தந்திரோபய ரீதியில் இந்த விடயத்தைக் கையாள முற்படுகிறது.

இதைப் புரிந்தும் புரியாத மாதிரி நடந்து கொள்கின்றன தமிழ் அரசியல் தரப்புகள். சிங்களக் கட்சிகளிடத்திலும் இதே வகையான குறைபாடுகளும் பலவீனங்களும் இருந்தாலும் சிங்களச் சமூகம் அதை ஏதோ ஒரு கட்டத்திலாவது Breack பண்ணும். சீர்திருத்திக் கொள்ளும்.

ஆனால், தமிழ்ச் சமூகத்திடம் இந்தக் குணமும் பண்புமில்லை. அது கேள்விக்கிடமில்லாமல் தன்னுடைய தலையை பலிபீடத்தில் வைக்கும். என்பதால் தான் அது தொடர்ந்தும் தோல்விகளையே வரலாறாகக் கொள்கிறது. ஆம், முள்ளி வாய்க்கால் தோல்வியையும் விடப் பெரிய தோல்வியாக இப்போதைய தோல்வி அமைகிறது. எதிர்காலத் தோல்வியும் அப்படித் தான் அமையும்.

வரலாற்றிலிருந்து எதையும் படித்துக் கொள்ள மறுக்கும் சமூகம் தமிழ் மக்களுடையதல்லவா! என்பதால் இலங்கை முழுவதிலும் தேசிய மக்கள் சக்திக்கே இப்போதைக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

இதைச் சற்றுத் திருத்திக் கொள்ள வேண்டும், பெரும்பாலும் என. ஏனெனில் அரசாங்கத்தின் மீது மெல்லிய எதிர்ப்புணர்வும் சலிப்பும் ஒரு சாராரிடம் உருவாகி வருகிறது. எத்தனை நாளைக்குத் தான் வண்ணம் கெடாமல் அலங்காரம் நீடித்திருக்கும்?


வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# நாடு அநுராவோடு! ஊர் எங்களோடு!

(17ம் பக்கத் தொடர்ச்சி) தன்னிச்சையாக பங்கேற்பதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை புரிந்து கொள்வதில் எவருக்கும் சிரமம் இருந்திருக்காது.

இத்தகையதொரு பின்புலத்தில் தமிழரசு கட்சியின் பதில் தலைவரான சிவஞானம் செயலிழந்து போன தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு புத்துயிர் அளிப்பதற்கான ஒரு முயற்சியில் அண்மையில் இறங்கினார். இந்த நோக்கத்துக்காக அவர் கூட்டமைப்பின் முன்னைய பங்காளிக் கட்சிகளான தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ( ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகியவற்றின் தலைவர்களை அணுகினார். அவர்களுக்கு கடிதங்களையும் அனுப்பினார்.

மீண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயற்படுவதில் நாட்டம் இருப்பது போன்று கருத்துக்களைக் கூறி சிவஞானத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்திய இந்த மூன்று கட்சிகளின் தலைவர்களும் மறுநாள் ஒன்றுகூடி தங்களது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் வேறு ஆறு தமிழ்க் குழுக்களையும் சேர்த்துக் கொண்டு உள்ளூராட்சி தேர்தலுக்கான ஒரு கூட்டை அமைத்துக் கொண்டனர். இதனால் அதிருப்தியுற்ற தமிழரசு கட்சியின் தலைவர் அதை ஆட்சேபித்து கடிதம் எழுதினார். அதற்கு புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஒரு பதிலையும் அனுப்பினார்.

மீண்டும் கூட்டமைப்பை அமைக்க வேண்டிய தேவையில்லை என்பதும் ஏற்கெனவே தாங்கள் அமைத்திருக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியுடன் இணைந்து செயற்பட தமிழரசு கட்சி முன்வருவதே பொருத்தமானது என்பதுமே அந்த கூட்டணியின் தலைவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது.

கடந்த வருட முற்பகுதியில் தமிழரசு கட்சியின் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற கையோடு சீறீதரனும் சகல தமிழ் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு முயற்சிகளை முன்னெடுக்கப் போவதாக அறிவித்தார். புதிதாக கூட்டமைப்பு எதுவும் தேவையில்லை என்று கூறிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒன்றிணைந்து செயற்படுவதில் அக்கறை இருந்தால் தமிழரசு கட்சி தங்களது கூட்டணியில் இணையலாம் என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்த கூட்டணியில் இணைவதற்கு தமிழரசு கட்சி ஒன்றும் சிறிய கட்சி அல்ல. அது இலங்கை தமிழ் மக்களின் பிரதான அரசியல் இயக்கம் என்று சிவஞானம் கடந்த வாரம் பதிலளித்திருந்தார். தமிழரசு கட்சி பெரும்பாலும் உள்ளூராட்சி தேர்தல்களை தனியாகவே சந்திக்கப் போகிறது. பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் தமிழ் தேசிய மக்கள் கூட்டணியும் கூட தனித்தனியாகவே போட்டியிடப் போகின்றன.

உள்ளூராட்சி சபைகளுக்கு தனித்தனியாக தமிழ்க்கட்சிகள் போட்டியிட்டு ஆசனங்களைக் கைப்பற்றிய பிறகு சபைகளின் நிருவாகத்தை அமைப்பதற்கு கூட்டுச் சேருவதே சிறந்த தந்திரோபாயம் என்ற தனது பழைய நிலைப்பாட்டையே சுமந்திரன் இந்த தடவையும் வலியுறுத்துகிறார். கடந்த வருட முற்பகுதியில் அந்த நிலைப்பாட்டை தமிழரசு கட்சி எடுத்ததையடுத்தே தமிழ் தேசிய கூட்டமைப்பில் எஞ்சியிருந்த புளொட்டும் ரெலோவும் வெளியேறி (ஏற்கெனவே தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த) ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை தங்களது தேர்தல் இயக்கமாக அறிவித்தன.

பாராளுமன்ற தேர்தலில் தமிழ்க்கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு பெரும் பின்டைவைச் சந்தித்ததைப் போன்ற சூழ்நிலையே உள்ளூராட்சி தேர்தல்களில் மீண்டும் உருவாகிறது. அது மீண்டும் தேசிய மக்கள் சக்திக்கு வாய்ப்பானதாக அமையக் கூடிய சாத்தியமே இருக்கிறது.

கடந்த ஐந்து மாதகால ஆட்சியில் தேசிய இனப்பிரச் சினை தொடர்பில் ஜனாதிபதி அநுரா குமாரதிசாநாயக்கவும் அவரது அரசாங்கமும் தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தின் பழைய சிந்தனையில் இருந்து விலகுவதற்கான எந்த அறிகுறியையும் காண்பிக்கவில்லை என்பதை வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் கவனத்தில் எடுத்து பாராளுமன்ற தேர்தலில் வழங்கியதைப் போன்ற ஆதரவை உள்ளூராட்சி தேர்தல்களில் வழங்காமல் விடுவார்களா? இந்த கேள்விக்கு உருப்படியான பதிலை அளிப்பதற்கு தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய மாற்றுவழி என்ன?

கடந்த வாரம் வடமராட்சியில் செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய சுமந்திரன் ' நாடு அநுராவோடு, ஊர் எங்களோடு ' என்ற ஒரு சுலோகத்தை முன் வைத்தார்.'' அடுத்த ஐந்து வருடங்களுக்கு மத்தியில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியதிகாரத்தில் இருக்கப் போகிறது. அதற்காக சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளூராட்சி விவகாரங்களை கையாளுவதையும் அவர்களிடமே விட்டுவிடக் கூடாது '' என்று அவர் கூறினார். அவரது சுலோகம் எந்தளவுக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் எடுபடும் என்பதை பார்ப்பதற்கு நாம் நீண்டகாலம் காத்திருக்கத் நேவையில்லை.

பாராளுமன்ற தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்த தமிழ்க்கட்சிகள் உள்ளூராட்சி தேர்தல்களில் ஒன்றிணைந்து போட்டியிட்டால் கூட தமிழ் மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெறக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்ப்பது கஷ்டமாகவே இருக்கிறது. கடந்த வருடம் வடக்கில் தமிழ் மக்கள் தங்களை நிராகரித்ததற்கான உண்மையான காரணங்கள் குறித்து தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்குள் சுயபரிசோதனையை நடத்தியிருப்பதற்கான எந்த வெளிப்படையான அறிகுறியையும் காண முடியவில்லை. ஒன்றிணைந்து போட்டியிடாத காரணத்தினால் மாத்திரம் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு மக்கள் தங்களை நிராகரித்ததாக தமிழ் கட்சிகளின் தலைவர்கள் நினைப்பார்களாக இருந்தால் அவர்கள் மீண்டும் தவறு செய்வதாகவே அமையும். (22ம் பக்கம் பார்க்க)


NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM

Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS
9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசிகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722
2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)



# இலங்கையில் பள்ளி செல்லும் வயதில் தாயாகும் சிறுமிகள்! காரணங்களும் தீர்வுகளும் என்ன?

இலங்கையில் பாடசாலை செல்லும் வயதிலுள்ள சிறுமிகள் மத்தியில் பதிவாகியுள்ள குழந்தை கர்ப்பிணிகளில், 10 வயதான சிறுமி ஒருவரும் அடங்குவதாக அதிகாரபூர்வ தகவல்களின் ஊடாக உறுதி செய்யபட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு 163 பாடசாலை மாணவிகள் கர்ப்பம் அடைந்துள்ளதுடன், 2024ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கையானது 213 வரை அதிகரித்துள்ளதாக போலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக விசாரணை பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி2024ஆம் ஆண்டு பதிவான குழந்தைத் தாய்மார்களுக்கு மத்தியில், 10 வயதான சிறுமி ஒருவரும் அடங்குவதாக போலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக பிரிவின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.



எனினும், அதிகாரபூர்வமாக பதிவாகியுள்ள குழுந்தைத் தாய்மார்களை விடவும், அதிக எண்ணிக்கையிலான குழந்தைத் தாய்மார்கள் இலங்கையில் இருக்கக்கூடும் என போலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக பிரிவிற்குப் பொறுப்பான பிரதி போலீஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர பிபிசிக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் தேதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம், 18 வயதுக்கு குறைவான அனைவரும் சிறுவர்கள் என அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தண்டனைச் சட்ட கோவையின் 363(இ) சரத்தின் பிரகாரம், 16 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவரின் ''ஒப்புதல்'' பொருந்தாது என்பதால், அவ்வாறானவர்களுடன் உடலுறவு கொள்வதானது ''பாலியல் வன்கொடுமை'' எனக் கருதப்படுகின்றது.

## சிறு வயது காதல் காரணமாக ஏற்படும் சம்பவங்கள்

தற்போது பதிவாகின்ற குழந்தைகள் கர்ப்பமடைவதானது, காதல் தொடர்புகளின் பெறுபேறுகளினால் ஏற்படுகின்ற சம்பவம் என பிரதி போலீஸ் மாஅதிபர் குறிப்பிடுகின்றார்.

இதில், 16 வயதுக்குக் குறைவான சிறுமிகளின் விருப்பத்துடன் இடம் பெறுகின்ற சம்பவங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையே எமக்குள்ள பிரச்னையாகும். அது துஷ்பிரயோகம் என சட்ட ரீதியாக உரித்தானாலும். அது பலவந்தமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல. காதல் ஏற்பட்டு விருப்பத்துடன் இடம் பெற்ற சம்பவங்களாலேயே அந்தச் சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளனர்.'' இவ்வாறான சந்தர்ப்பங்களில் பலவந்தமாக இடம் பெற்ற துஷ்பிரயோகங்களில் கர்ப்ப மடைவதைத் தடுப்பதற்கு வாய்ப்பில்லை. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கும் போது, அந்தச் சிறுமி கர்ப்பமடைந்து பல மாதங்கள் ஆகியிருக்கும் எனவும் அவர் கூறுகின்றார். பலவந்தமாக இடம் பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கட்டாயம் போலீஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கும். அதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படும். கர்ப்பமடைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும்.

சம்பவம் இடம் பெற்று முதல் 24 அல்லது 48 மணித்தியாலங்களுக்குள் வருகை தரும் பட்சத்தில், நீதிமன்றம், மருத்துவர்கள் அது தொடர்பான தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்வார்கள். ஆனால், அவர்களுடன் சம்பந்தப்பட்ட சிறுமிகள் தொடர்புகளைப் பேணுகின்றமையினால் பல சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இதனால், அவர்கள் அவற்றை மறைத்து காலம் செல்லும் போதே அறிந்து கொள்ள முடிகின்றது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் குழந்தைகள் கர்ப்பமடைந்தால், தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் தவிர்த்து, கர்ப்பத்தைக் கலைப்பதற்கு சட்டத்தின் இயலுமை இல்லை.

நாட்டில் தற்போது பதிவாகின்ற சில சம்பவங்களில், கர்ப்பத்திற்குப் பொறுப்பு கூற வேண்டிய ஆண்கள், 18 வயதுக்கு குறைவான சிறுவர்கள் எனவும் பிரதி போலீஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவிக்கின்றார். அண்மைக் கால தரவுகளின் அடிப்படையில், இவ்வாறான சம்பவங்களில் 14 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட பெண் குழந்தைகள் உட்படுத்தப்படுகின்றமை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

குழந்தைத் தாய்மார்களின் குழந்தைகள் ''பாதிக்கப்பட்டவர்களாகவே'' இந்த உலகத்தைக் காண்பதாகக் கூறும் பிரதி போலீஸ் மாஅதிபர், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சமூகத்தின் கவனம் திரும்ப வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாரும் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதை நான் காணவில்லை. இவர்களை நீதிமன்றம் வேறு யாருக்காவது ஒப்படைத்து விடும். பெரும்பாலும் அவர்களின் குடும்பத்திடமே ஒப்படைக்கப்படும். விருப்பம் என்றால் வளர்த்துக் கொள்ள முடியும்.


## தெளிவின்மையால் ஏற்படுகின்ற குழந்தை கர்ப்பமடைதல்

ஒரு குடும்பம் என்ற கற்பனை உலகிற்குள் விரைவாகப் பிரவேசிக்க முயல்வதாகக் கூறுகிறார் மாத்தளை மாவட்ட தாய் மற்றும் குழந்தை சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் நுவன் தோடவத்த பாலியல் தொடர்பான போதிய தெளிவின்மையே குழந்தைகள் இவ்வாறான பேராபத்திற்கு முகம் கொடுக்கக் காரணம் என பிரதி போலீஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர கூறுகின்றார்.

பாலியல் தொடர்பான கல்வி, அது

(26ம் பக்கம் பார்க்க)


சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை


சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! வழக்குகளில் சாதகமான சூழல் ஏற்படும். ஆக்கபூர்வமான யோசனைகளை செயல்படுத்தி எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மன நிலை இருக்கும். செயல்திறன் அதிகரிக்கும் நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப்படும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள்.





ரிஸபராசி அன்பர்களே! பக்குவமான அணுகு முறையினால் எல்லா காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள். செயல்திறமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் பணிசுமை குறைந்து காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! புத்தி சாதுாரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பேச்சாற்றல் மூலம் தொழில் லாபம் கூடும்.





கடகராசி அன்பர்களே! பணிச்சுமை அதிகரிக்கும். எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பது தாமதமாகும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பதும் நல்லது. பணவரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்சனைகள் தீரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக வேலைகளை செய்வது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! சுணக்க நிலையில் இருந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். மன சஞ்சலம் நீங்கும். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். வயிறு தொடர்பான நோய்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டு நீங்கும்.




கன்னிராசி அன்பர்களே! சொந்த பந்தங்களுக்குள் இணக்கம் ஏற்படும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பணவரத்து அதிகரிக்கும். மனதில் புதுதெம்பும் உற்சாகமும் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். குடும்பத்தில் அமைதி எற்படும்.





துலாம் ராசி அன்பர்களே! திடமான நம்பிக்கையுடன் எதையும் செய்வீர்கள். எதிலும் சாதகமான நிலை காணப்படும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலைதூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். லாபம் கூடும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள்





விருச்சிகராசி அன்பர்களே! சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறிவீர்கள். எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்னைகள் குறையும்.








தனுசுராசி அன்பர்களே! கடின உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காணப்படும். இஷ்டத்திற்கு விரோதமாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம்.




மகரராசி அன்பர்களே! நிதான போக்கைக் கடைபிடித்து வெற்றி பெறுவீர்கள். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. சுலபமாக முடிந்து விடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த இழுபறி அகலும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம்.




கும்பராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி சார்ந்த உறவினர்கள் தங்களுக்கு தேவையான உதவிகளை உங்களிடம் கேட்டு பெறுவார்கள். குடும்பத்தினர் மகிழ்ச்சிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும்.




மீனராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பாரத இட மாற்றம் ஏற்படலாம். உறவினர்களுடன் பேசும் போது கவனமாக பேசுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## யாழ்ப்பாணமே உனது பசி எது? தாகம் எது?

(15ம் பக்கத் தொடர்ச்சி) அரசியல் தரிசனங்களும் இருக்க வேண்டும். துறைசார் அறிஞர்கள் இது தொடர்பான கற்கைகளை காஸ்ரோ நஷனலிஸம் (Gastro nationalism) என்று அழைக்கிறார்கள்.

ஈழத்தமிழர்கள் புலப்பெயர்ச்சி காரணமாக ஏற்கனவே உலக மயப்பட்டு விட்டார்கள். தாங்கள் உலகமயப்பட்டு விட்ட தாகக் காட்டிக் கொள்வதை ஒரு பகுதியினர் பெருமையாகவும் கருதுகிறார்கள்.

தமிழ்மக்கள் பண்பாட்டுச் செழிப்புமிக்க ஒரு நடுத்தர வர்க்கத்தை கொண்டவர்கள். பண்பாட்டுச் செழிப்புமிக்க ஒரு சமூகம் தன் வசமிழந்து தனது தனித்துவங்களை 'லோக்கல்' ஆனவை என்று இகழ்ந்து எதிர்ப்பின்றி உலகப் பொதுப் பண்பாட்டுக்குள் கரைந்து விடாது. ஆனால் ஒரு சமூகத்தை தோற்கடிக்க விரும்பும் சக்திகள் அந்தச் சமூகத்தின் பண்பாட்டுத் தனித்துவத்தையும் செழிப்பையும் அதைவிட பலமான ஒரு பண்பாட்டிற்குள் கரைத்து விட முயற்சிக்கும்.

எனவே அதை எதிர் கொள்வதற்கான சமூக அரசியல், பொருளாதார பண்பாட்டு விழிப்பு என்பது கலெக்டிவ் ஆனது. அரசியல் தலைமைகளால் முன்னெடுக்கப்பட வேண்டியது. கோப்பரேட் சுவையைப் பரப்பும் உயர்தர உணவகங்களுக்கு நிகராக உள்ளூர்ச் சுவையை, உள்ளூரில் தனித்துவமான உணவுப் பண்டங்களை உலகத் தரத்துக்கு உற்பத்தி செய்வதற்கு தமிழ் மக்களிடம் வளம் இல்லையா?

உள்ளூர் நண்டுக் கறி, உள்ளூர் றால் கறி, உள்ளூர் பிரட்டல், உள்ளூர் பொரியல், உள்ளூர் சுண்டல், உள்ளூர் கீரை, உள்ளூர் ஒடியல் கூழ், உள்ளூர் பலகாரம்... என்று தமிழ் மக்களின் தேசிய தனித்துவங்களை வெளிப்படுத்தும் உணவுச் சாலைகளை கட்டியெழுப்ப உள்ளூரிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் உள்ள முதலீட்டாளர்கள் முன் வரவேண்டும்.

சூழலியலாளர்கள் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டுவார்கள். உள்ளூர் மரங்களில் தான் பறவைகள் கூடுகட்டும். பூச்சி புழுக்களும் அந்த மரங்களைத் தான் மொய்க்கும். அவற்றுக்குத் தெரிகிறது உள்ளூர் மரம் எது? ஹைபிரிட் மரம் எது? என்று. பண்பாட்டுச் செழிப்பு மிக்க தமிழ் மக்களுக்கும் அது தெரியும். தமது சுவை எது? கோப்பரேட் சுவை எது என்பது. பண்பாட்டு விழிப்பில்லாமல் தேசிய விழிப்பு இல்லை.

## நாடு அநுராவோடு! ஊர் எங்களோடு!

(20ம் பக்கத் தொடர்ச்சி) தற்போதைய நிலைவரங்கள் வேண்டிநிற்பதற்கு இசைவான முறையில் தங்களது அரசியல் அணுகுமுறைகளை மாற்றிக்கொள்ளாமல் தேசியவாத அரசியலை சுலோகங்களை தேவாரம் போன்று பாடிக் கொண்டிருந்தால் தமிழ் மக்களிடமிருந்து தமிழ்க்கட்சிகள் மேலும் தனிமைப் பட வேண்டியிருக்கும்.

தமிழ் அரசியல்வாதிகள் காலங்காலமாக நீண்டகால அரசியல் அபிலாசைகளை பற்றி ஓயாது பேசுவதில் நாட்டம் காட்டி வந்திருக்கிறார்கள். மக்களின் உடனடிப் பிரச்சினைகளில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. நீண்டகால அபிலாசையைப் பற்றி எப்போதும் பேசிக் கொண்டேயிருக்கலாம். ஆனால், உடனடிப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தினால் விரைவாகவே பயனுறுதியுடைய விளைவுகளை காண்பிக்க வேண்டியிருக்கும். இது தமிழ் அரசியல் கட்சிகளிடமும் தலைவர்களிடமும் காணப்படும் பெரியதொரு குறைபாடு. அர்ச்சுனாவின் குறும்புகளுக்கு ஒரு கூட்டம் ஆரவாரம் செய்யும் துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கும் இந்த குறைபாடும் ஒரு முக்கிய காரணம்.

## அல்ஜசீராவுடன் மோதி சிதறிப் போன பெராரி...

(5ம் பக்கத் தொடர்ச்சி) அண்மையில் கோர விபத்து ஒன்று இடபெற்ற தாக கூறினார். அதில், ஃபெராரி சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பதாக கூறியவர், அல் ஜசீராவுடன் மோதி விபத்துக்குள்ளாகி சிதறிப் போயுள்ளதாக பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

அதனால் அவரின் மூளைக்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், எதனை பேச வேண்டும் என்று தெரியாமல் தேவையில்லாதவற்றை பேசி கொண்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்த நிலையில், நாடாளு மன்றில் போக்குவரத்து விவகாரங்கள் தொடர்பான விவாதத்தின் போது அதற்கான வருத்தங்களை தெரிவித்துக் கொள்வதாக சபைத் தலைவரான பிமல்ரத் நாயக்க கூறினார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் மீண்டும் நாடாளுமன்றம் வருவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, ஃபெராரி உரிமம் உள்ள ஒருவர் எல்-போர்டு ஓட்டுநர்களுடன் நேரத்தை செலவிடுவதில்லை என பதில் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதிய தமிழரசு:- அப்புக்காத்து அரசியலுக்கு....

(25ம் பக்கத் தொடர்ச்சி) இம்முறையும் இவர்கள் இருவரும் இணைந்தே அந்த 'சிறி மச்சானுக்கு வேட்பாளர் நியமனத்தை பெற்றுக் கொடுத்தனர். இந்த இரு சிறிகளையும் சுமந்திரன் - சாணக்கியன் அணி விரும்பாத போதும் தவிர்த்து ஓட முடியவில்லை. இப்போது துரைராசசிங்கம் எந்த தமிழரசு என்ற கேள்வி எழுகிறது.? ஆப்பிழுத்த குரங்கின் கதையை தவிர்க்க வேண்டுமானால் புதிய தமிழரசு தான் பதில். இல்லையேல் புலிவாலைப் பிடித்த கதை தான்.

இந்த நகர்வுகள் மோப்பம் பிடிக்கப்பட்டதன் காரணமாகவே சி.வி.கே.சிவஞானமும், எம்.ஏ.சுமந்திரனும் முன்னுக்கு பின் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். புலம்பெயர்ந்த நாட்டு தமிழ்த்தேசிய ஊடகங்கள் வைத்து... வாங்கு...வாங்கு... என்று வாங்குகின்றன. சாணக்கியன், சத்தியலிங்கத்திற்கும் உதறுகிறதாம் இதுதானோ ஆனை அடிக்கும் முன் தானே அடித்துச் சாவது?.

## மறுக்கப்படும் பொறுப்புக்கூறல்

(16ம் பக்கத் தொடர்ச்சி) அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த அதிகாரத்தை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான தற்துணிவு அதனிடம் இருக்கிறதா என்பது தான் சந்தேகம்.

ஜெனிவாவில் அரசாங்கம் முன் வைத்திருக்கின்ற அறிக்கையும் சரி, அது நிராகரித்துள்ள விடயங்களும் சரி, பொறுப்புக்கூறலை நியாயமான முறையில் அனுகக் கட்டமைப்பு அதனிடம் இருக்கிறதா என்ற கேள்விகளையும் எழுப்ப வைத்திருக்கிறது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய ஒரு விடயமாக இல்லை. இதனால் தான் சர்வதேச நீதி கோரப்படுகிறது. வெளியகப் பொறிமுறை ஒன்றை கோர வேண்டிய நிலை ஏற்படுத்தப்படுகிறது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# பயங்கரவாத அச்சுறுத்தல் மிகக் குறைந்த நாடாக இலங்கை அறிவிப்பு!




உலகில் மிகக் குறைந்த பயங்கரவாத அச்சுறுத்தல்கள் உள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் உலகளாவிய பயங்கரவாதத்தின் தாக்கம் குறித்து நடத்தப்பட்ட பகுப்பாய்வுகளின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பயங்கரவாத குறியீட்டால் பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான சர்வதேச நிறுவனத்தினால் பயங்கரவாதத்தின் தாக்கத்தின் அடிப்படையில் நாடுகளை தரவரிசைப் படுத்துதல் இந்த உலகளாவிய பயங்கரவாத குறியீட்டால் மேற்கொள்ளப்படுகிறது.

உலக மக்கள் தொகையில் 99.7 சதவீத மக்களை உள்ளடக்கிய, 163 நாடுகளுக்கு பயங்கரவாதத்தின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்து உலகளாவிய பயங்கரவாத குறியீடு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி உலகில் அதிக பயங்கரவாத ஆபத்து உள்ள நாடாக புர்கினா பாசோ முதலிடத்தில் உள்ளது. அதே நேரத்தில் பாகிஸ்தான் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகம் உள்ள நாடுகளில் சிரியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

இந்தக் குறியீட்டின்படி, பயங்கரவாத ஆபத்து மிகக் குறைந்த நாடாக, உலகளாவிய பயங்கரவாதக் குறியீட்டில் இலங்கை 100வது இடத்தில் உள்ளது. 2023ஆம் ஆண்டில் இந்தக் குறியீட்டில் 36வது இடத்தில் இருந்த இலங்கை, 64 இடங்கள் பின்தங்கி, பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் குறைப்பதில் தெற்காசிய பிராந்தியத்தில் மிகவும் முன்னேறிய நாடாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் கடந்த 5 ஆண்டுகளில் எந்தவொரு பயங்கரவாதத் தாக்குதல்களும் பதிவாகாத நாடுகளாக இலங்கை மற்றும் பூட்டான் பெயரிடப்பட்டுள்ள நிலையில், 2019 முதல் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் தொடர்ந்து குறைந்து வருவதாக குறித்த அறிக்கை ஊடாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# அனுராதபுரத்தில் பெண் வைத்தியரை பாலியல் வன்கொடுமை செய்த முன்னாள் இராணுவச் சிப்பாய் கைது

அனுராதபுரம் போதனா வைத்திய சாலையின் வைத்தியர் விடுதியில் 32 வயதான பெண் வைத்தியர் ஒருவர் கத்தி முனையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சம்வம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் அடையாளம் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கிரிபண்டலாகே நிலந்த மதுரங்க ரத்நாயக்க என்ற கல்னேவ, நவநகரப் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். மேலும், குறித்த சந்தேக நபர் நேற்று முன்தினம் பிறிதொரு வழக்கு தொடர்பில் விளக்கமறியலில் இருந்து விடுதலைப் பெற்று வந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

34 வயதுடைய குறித்த சந்தேகநபர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் என்பதோடு அவர் கல்னேவ விசேட பொலிஸ் குழுவினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

சந்தேக நபர் வைத்தியரை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய பின்னர் அவரது இரண்டு கையடக்க தொலைபேசிகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார், மேலும் காணா மல் போன தொலைபேசியின் இருப் பிடம் குறித்து கிடைத்த சமிக்ஞை களின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டிருந்தனர்.

இதன்போது அவுகன ரயில் நிலையம் அருகே கையடக்க தொலைபேசி சமிக்ஞைகள் இல்லாததால், அப்பகுதியில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கல்னேவ பொலிஸ் விசேட குழுவினர் கல்னேவ, எலபதுகம பகுதியில் மறைந் திருந்து சந்தேக நபரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

அனுராதபுரம் போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணராகப் பயிற்சி பெற்று வரும் 32 வயதுடைய பெண் வைத்தியர் ஒருவர், 10 மார்ச் 2025 இரவு வழக்கம் போல் பணிக்காக வைத்தியசாலைக்கு வந்திருந்தார்.

குறித்த வைத்தியர், தனது கடமையை முடித்து விட்டு இரவு 7.00 மணியளவில் வைத்தியசாலையில் இருந்து விசேட வைத்திய நிபுணர்கள் மட்டுமே வசிக்கும் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு சென்றுள்ளார்.

வைத்தியர் அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் நுழைந்த போது பின்னால் இருந்து வந்த ஒரு நபர் திடீரென அவரது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதாக தெரிவிக்கப் படுகிறது பின்னர் வைத்தியரின் வாயை இறுக்கமாகக் கட்டி அவர் கத்த முடியாதபடி கட்டிய சந்தேக நபர், உத்தியோகபூர்வ இல்லத்தின் கதவைத் திறக்கச் சொல்லி, வைத்தியரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று, சத்தம் யாருக்கும் கேட்காதபடி கதவை மூடியுள்ளார்.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில், சந்தேக நபர் குறித்த பெண்




வைத்தியரின் கைகளைக் கட்டி, கண்களைக் கட்டி, கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்திருப்பது தெரிய வந்துள்ளது. பின்னர் சந்தேக நபர் தப்பி ஓடிய நிலையில், வைத்தியரின் கையடக்க தொலைபேசியையும் திருடிச் சென்றுள்ளார்.

சம்பவம் நடந்த சிறிது நேரத்தில், வைத்தியசாலை வார்டுக்கு வந்த வைத்தியர், தான் முகங் கொடுத்த சம்பவத்தைப் பற்றி அவரது தந்தைக்கு தொலைபேசியில் அழைத்துத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

அனுராதபுரம் மருத்துவமனையில் பெண் மருத்துவரை துஷ்பிரயோகம் செய்த சந்தேக நபரை உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அனுராதபுரம் பிரதான நீதவான் நாலக சஞ்சீவ ஜெயசூரிய அனுராதபுரம் தலைமை பொலிஸ் ஆய்வாளர் ஆர்.என்.கே. ஜெயவீரவுக்கு 12 மார்ச் 2025புதன் கிழமை மாலை உத்தரவிட்டார்.

மருத்துவரிடமிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் அலைபேசியில் இருந்து எடுக்கப்பட்டட மற்றும் பெறப்பட்ட அழைப்புகளின் பதிவை வழங்குமாறு டயலொக் நிறுவனத்துக்கு நீதவான் உத்தரவிட்டார். பொலிஸார் ''பி'' அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் உண்மைகளை சமர்ப்பித்ததை அடுத்து, நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

# இந்தியப் பிரதமர் ஏப்ரலில் இலங்கை செல்கிறார்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் முதல் இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஏப்ரல் 5ஆம் பிரதமர் மோடி இரண்டு நாள் பயணமாக இலங்கை செல்வார் என்றும் இந்தப் பயணம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை மேலும் பலப்படுத்தும் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மோடியின் இந்தப் பயணத்தில் இரு நாடுகளுக்கு இடையிலான நில இணைப்பு மற்றும் பொருளாதார உறவுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்பட உள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கடந்த ஆண்டு டிசம்பர் நடுப்பகுதியில் புதுடில்லிக்கு இரண்டு நாள் பயணமாக மேற்கொண்ட போது பிரதமர் மோடியை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அதன் பிரகாரமே மோடியின் இந்தப் பயணம் இடம்பெற உள்ளது.

இந்திய பிரதமர் நாட்டிற்கு வருகை தருவார் என்று இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயமும் கடந்த ஜனவரி மாதம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# புதிய தமிழரசு:-
## அப்புக்காத்து அரசியலுக்கு முடிவு கட்டுமா?

- அழகு குணசீலன் -

சிகரெட் ஒன்றை புகைப்பதன் மூலம் ஒருவர் தனது ஆயுளை ஐந்து நிமிடங்களால் குறைத்துக் கொள்கிறார். அதேபோல் ஆயுளை ஐந்து நிமிடங்கள் கூட்டுவதற்கு ஒருவர் நாற்பத்தி ஐந்து நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டியிருக்கும். இலங்கை தமிழரசுக்கட்சியின் ஆயுள் அரசியலும் பிராயச்சித்தமும் இப்படித் தான் இருக்கிறது.

மிகப் பிந்திய ஆயுள் இழப்புக் காலம் தமிழரசில் சம்பந்தர் காலம் என்றால், ஆயுளை நீட்டுவதற்கான முயற்சிகள் மாவை அன் கோ காலம் என்று சொல்ல முடியும். ஒரு வகையில் தமிழரசு கோடேறி இருப்பதும் ஆயுளை நீடிப்பதற்கான முயற்சி தான். ஆனால் தமிழ்த்தேசிய தீவிரபக்தர்கள் தமிழரசின் சமகால தலைமைகளால் தமிழரசு தப்பிப்பிழைக்க வாய்ப்பில்லை என்று உறுதியாக நம்புவதாகத் தெரிகிறது.

இந்த நிலையில் கிடைத்துள்ள நம்பிக்கையான தகவல்களின் படி புதிய தமிழரசு ஒன்றை தோற்றுவிப்பது பற்றி இலங்கை, இந்திய, புலம்பெயர்ந்த நாடுகளின் தீவிர தமிழ்த்தேசிய பக்தர்கள் இரவு பகலாக ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் எம்.ஏ. சுமந்திரன் தோற்கடிக்கப்பட்டது ஒரு தற்செயல் நிகழ்வல்ல. முதற் கட்டமாக 2019 தேர்தலில் சுமந்திரனின் விருப்பு வாக்குகள் அவரின் எதிர்பார்ப்புக்கு மாறாக அரைவாசியாக குறைக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக மேற்குறிப்பிட்ட தீவிர தமிழ்த்தேசிய பக்தர்களும், மூத்த போராளிகள் சிலரும் கடந்த ஐந்து ஆண்டுகளாக திரைமறைவில் மேற் கொண்ட அரசியல் நகர்வுகளின் விளைவாக 2024 பாராளுமன்ற தேர்தலில் சுமந்திரன் மக்களால் நிராகரிக்கப்பட்டார்.

எம்.ஏ. சுமந்திரனின் தோல்வி தமிழரசுக் கட்சியை சரியான (?) பாதையில் நெறிப்படுத்தும் என்று இந்த தீவிர தமிழ்த்தேசியவாதிகள் எண்ணியிருந்த நிலையில் கடந்த நான்கு மாதங்களாக அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஏமாற்றங்களையே சந்திக்க வேண்டியிருந்தது. எம்.பி.பதவி இல்லாத நிலையிலும் சுமந்திரன் தன்னை தமிழரசின் ஒரு முக்கிய புள்ளியாக, தீர்மானம் எடுக்கும் சக்தியாக நிலை நிறுத்தி வருகின்றார். மறுபக்கத்தில் மத்திய செயற்குழு என்ற பெயரில் தனக்கான ஒரு அரசியல் ரசிகர்கள் மன்றத்தையும் அவர் ஏற்படுத்தி விட்டார்.



இந்த ரசிகர்கள் மன்றத்தின் மூலம் தனக்கு வேண்டியதை, தனது விருப்பிற்கேற்ப செய்யும் நிலையில் சுமந்திரன் இருக்கிறார். வைத்தியர் சத்தியலிங்கத்தின் தேசிய பட்டியல் நியமனம், சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் சுதந்திரக்கட்சியின் ஆதரவாளராக இருந்து விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் துரோகி என்று சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் யாழ்.மேயர் அல்பிரட் துரையப்பாவின் வலது கரமாகவும், முதுகு எலும்பாகவும் செயற்பட்ட சி.வி.கே சிவஞானம் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டமை, பதில் செயலாளர் வைத்தியலிங்கத்திற்கு சுகவீனம் என்று கூறி பதில் செயலாளர் பதவியை சுமந்திரன் சுருட்டி இருப்பது போன்ற காரணங்களால் இனியும் தமிழரசை திருத்த முடியாது என்ற நிலைக்கு தமிழ்த்தேசிய தீவிரசக்திகள் வந்துள்ளன. இதுதான் புதிய தமிரசு கட்சி ஒன்றின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமையப் போகிறது. இது விடயமாக 'சிறில்'லங்காவின் முதல் இரு எழுத்துக்களை தம் பெயரில் கொண்டுள்ள தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பு கொண்டு மந்திராலோசனை நடாத்தியிருப்பது குறித்து நம்பிக்கையான, மூத்த தமிழ்த்தேசிய வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவது என்ற சுமந்திரனின் முனைப்பு அந்த தமிழ்த்தேசிய தரப்பை மேலும் ஆத்திர மூட்டியிருப்பதாக தெரியவருகிறது.

எம்.ஏ.சுமந்திரனை கொழும்புக்காரர் என்றும் ஏக்கயராட்சியத்தின் தென்னிலங்கை முகவர் என்றும் விமர்சனம் செய்யும் தமிழ்த்தேசிய தீவிர சக்திகள் கொழும்பு நோக்கிய சுமந்திரனின் அரசியல் குறித்து அதிகம் அதிருப்தி அடைந்துள்ளனர். அவர் தமிழர் தாயகத்திற்கு அப்பால் கொழும்பில் ஒதுங்கிக் கொள்வதற்கான முயற்சிகளை திட்டமிட்டு செய்து வருகிறார் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

சாடியும், மூடியுமாக சி.வி.கே .சிவஞானமும், எம்.ஏ . சுமந்திரனும் அடுக்கடுக்காக வெளியிடும் ஊடக அறிக்கைகள் எதிர்த்தரப்பின் பெரும் கவன ஈர்ப்பை பெற்றுள்ளது. விமர்சனங்களையும் கொண்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் தமிழரசுக்கட்சி என்.பி.பி.க்கு எதிராக மட்டுமன்றி தமிழ்த்தேசிய மாற்று அணி, மற்றும் பிராந்திய சிறிய கட்சிகள், ஏனைய தேசியக்கட்சிகள் என்பனவற்றிற்கு எதிராகவும் களமிறங்க வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் தான் தனித்து போட்டியிட்டு, ஆட்சியில் கூட்டு என்ற மந்திரத்தை சுமந்திரன் போகின்ற இடமெல்லாம் ஜெபிக்கிறார். கொழும்பில் போட்டியிடலின் பின்னணியும் இது தான். சஜித் கூட்டணியை விடவும், என்.பி.பி.யுடன் தொற்றிக் கொள்ளலாம் என்று நம்புவதாகத் தெரிகிறது.

மறுபக்கத்தில் மலையக கட்சிகளின் வாக்கு வங்கியை யாழ்ப்பாண வாக்காளர்களை கொண்டு சிதறடித்து தேசிய கட்சிகளுக்கு வாய்ப்பளிக்கும் முயற்சியாகவும் சுமந்திரனின் இத்திட்டத்தை அடையாளம் காண வேண்டியுள்ளது.

அதேவேளை ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா பாராளுமன்ற தேர்தலில் கொழும்பில் போட்டியிடுவதை தவிர்த்து வந்த சுமந்திரன், தவராசா கட்சியில் இல்லாத நிலையில் கொழும்பில் தனக்கான ஒரு அரசியல் அடிப்படை இருப்பை ஏற்படுத்த படிப்படியாக காய்நகர்வுகளை செய்கிறாரா? என்ற கேள்வியும் இல்லாமல் இல்லை.

தமிழரசுக்கட்சியின் இரு 'சிறிகள்' ஆயுதப் போராட்ட 'மச்சான்' அரசியல் அலையிலும், ஆதரவிலும் எம்.பி.யானவர்கள். கடந்த தேர்தலில் கூட மட்டக்களப்பில் கிறிஸ்தவ பாதிரியாரின் பதவிப் பெயரைக் கொண்ட அந்த மூத்த போராளி மச்சானுக்கு ஆதரவாகச் செயற்பட்டுள்ளார். மட்டக்களப்பில் ஆரம்பகால புலிப் பொறுப்பாளராக இருந்த தந்திரமான அந்த பறவையின் பெயரைக் கொண்ட மூத்தவர் இம்முறை மட்டக்களப்பு வந்து தேர்தல் களத்தில் நின்றிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் சுமந்திரனை தோற்கடிப்பதில் இவர் ஓயாமல் உழைத்தவர். இவர்கள் 2019இல் இரா.சாணக்கியனுக்கு ஆதரவாக முன்னாள் போராளிகளை களமிறக்கியவர்கள். இம்முறை சுமந்திரன் சாணக்கியன் போக்கில் முரண்பட்டு 'மச்சான்' அரசியலை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த தேர்தலில் மட்டக்களப்பில் சுமந்திரனாக செயற்படும் சாணக்கியனை தோற்கடிப்பது இந்த மூத்த போராளிகளின் திட்டமாக இருந்துள்ளது. ஆனால்அந்த நகர்வுகள் பிள்ளையானுக்கும், ஜனாவுக்கும் காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதையாக மாறி விடக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்துள்ளனர். இதனால் யாழில் சுமந்திரனுக்கு எதிராக வெளிப்படையாகச் செயற்பட்டது போன்று செயற்பட முடியவில்லை. வரையறுக்கப்பட்ட உள்ளக வெளிப்படைத் தன்மையோடு மட்டுமே செயற்பட்டுள்ளனர்.

தமிழரசுக்கட்சியின் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களில் கிழக்கில் நால்வரும், வடக்கில் இருவரும் 'புதிய தமிழரசு' அமைவதில் உடன்பாடுடையவர்களாக இருக்கின்றனர் என தமிழ்நாட்டில் உள்ள மூத்த தமிழ்த்தேசியவாதியின் வட்டாரங்களில் இருந்து அறிய வருகிறது.

சுமந்திரன் அணியைச் சேர்ந்த சாணக்கியன், சத்தியலிங்கத்தை தள்ளி வைத்து இந்த திரைமறைவு முயற்சிகள் இடம் பெறுகின்றன. கிழக்கின் தெற்கு எல்லையைச் சேர்ந்த P2P செயற்பாட்டாளரும், தமிழரசுக்கட்சி தந்தையின் பேரனும் இந்த திரைமறைவு முயற்சிகளில் முக்கியமானவர். இவ்வாறு புதிய தமிழரசுக்கு பின்னால் மூத்த புலிகளும், தாயக, தமிழக, புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மூத்த தமிழ்த்தேசியவாதிகளும், பக்தர்களும் இருக்கிறார்கள். தமிழரசு தந்தையின் பெயரை கட்சிப்பெயரில் சேர்த்துக் கொள்ளலாமா? என்றும் ஆலோசிக்கப் படுவதாக தகவல்.

இந்த மூத்தவர்கள் சாணக்கியனின் சுமந்திரன் ஆதரவுப் போக்கை எதிர்ப் பிரச்சாரத்திற்கு எடுத்துக் கொண்டதால் ஆரம்பத்தில் சாணக்கியனுக்கு சங்கடங்கள் இருந்தன. இறுதியில் சாணக்கியன் வாக்காளர் மத்தியில் இரண்டாவது முறையாக பாவ மன்னிப்பு கேட்க வேண்டி இருந்துள்ளது. 2019இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக இருந்ததற்கு பாவமன்னிப்புக் கோரியது முதல்முறை.

இந்த முறை சுமந்திரனோடு சேர்ந்து செயற்பட்டதற்கு இரண்டாவது முறையாக பாவமன்னிப்பு கோரியுள்ளார். நான் 2019 இல் வெற்றி பெற்ற பின் மட்டக்களப்பின் சகபாராளுமன்ற உறுப்பினரும், தோல்வியடைந்தவர்களும் என்னோடு உறவில் இருக்கவில்லை. இந்த தனிமையில் இருந்து விடுபடவே சுமந்திரனின் உதவியை நாடினேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறாராம். தேர்தல் காலத்தில் சாணக்கியன் சுமந்திரனை தவிர்த்து பிரச்சாரம் செய்ததன் வெளிச்சம் இது தான்.

மட்டக்களப்பின் மற்றொரு சிறி யுடன் தமிழ்நாட்டில் உள்ள மூத்த தமிழ்த் தேசியவாதி, மற்றொரு மட்டக்களப்பின் மூத்த தமிழ்த்தேசியவாதியூடாக தொடர்பை ஏற்படுத்தியிருப்பது உறுதியாகியுள்ளது. தமிழ்த்தேசிய தீவிர போக்காளர்களும், மூத்த போராளிகளும் இந்த நகர்வுகள் புதிய தமிழரசை உருவாக்குவதில் சுமந்திரனுக்கும், அவரது ரசிகர் மன்றத்தினருக்கும் எதிராக எவ்வாறான தமிழ்த் தேசிய அரசியல் சூழலை ஏற்படுத்தும் என்பதற்கு காலமே பதில்.

மட்டக்களப்பின் மூத்த தமிழ்த்தேசியவாதியும், தமிழரசுக்கட்சியின் முன்னாள் செயலாளருமான கி. துரைராசசிங்கம் இந்த வலையில் சிக்கியுள்ளார். ஏற்கனவே குறிப்பிட்ட கிறிஸ்தவபாதிரியாரின் பதவிப் பெயரைக் கொண்ட அந்த மூத்த போராளியுடன் இணைந்து 2019இல் சாணக்கியனுக்கு வேட்பாளர் நியமனம் கிடைக்க வழி வகுத்தவர் துரைராசசிங்கம்.(22ம்பக்கம்)

# இலங்கையில் பள்ளி செல்லும் வயதில் தாயாகும் சிறுமிகள்! காரணங்களும் தீர்வுகளும் என்ன?

(21ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பில் காணப்படும் அறிவு மற்றும் தேவையற்ற விதத்தில் கர்ப்ப மடைவதைப் பாதுகாத்துக் கொள்வது ஆகியவை குறித்த தெளிவின்மை இதற்கு ஒரு காரணம். பாலியல் உறவைப் பேணும் ஒருவராயின் அவர் கட்டாயமாக கருத் தடை சாதனங்கள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு வயது எல்லை எதுவும் கிடையாது.

நாங்கள் இந்தச் சம்பங்கள் குறித்துப் பார்க்கும்போது அந்தச் சிறுமிகள் அது தொடர்பில் அறிந்திருப்பதில்லை என்பதைஉணர்ந்து கொள்ள முடிகின்றது`` என்பதை விசாரணை அனுபவங்களின் ஊடாக அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் இந்தப் பிரச்சனைகள் குறித்து ஆராயும் போது. குடும்பங்களில் காணப்படும் பிரச்னைகள் குறித்து அதிகளவில் அவதானிக்கின்றோம். பெரும்பாலான சிறார்கள் பாதுகாப்பற்ற முறையில் இருக்கின்றார்கள். தாயும். தந்தையும் பிரிந்துள்ளமை அதற்கான காரணம். இவ்வாறான நிலைமையிலேயே காதலுக்கு மிகவும் விரைவாக அடிமையாகின்றனர்.`` எவ்வாறாயினும். சரியாக இந்த நிலைமைக்கான காரணம் தொடர்பில் கூற முடியாது என போலீஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக விசாரணைப் பிரிவின் பிரதானி பிரதி போலீஸ் மாஅதிபர் ரேணுகா ஜயசுந்தர குறிப்பிடுகின்றார்.

### முறையற்ற வகையில் குழந்தைகள் அறிவைப் பெறுகின்றனர்

குழந்தைகளுக்கு பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடைமுறை இல்லாமையால். பாலியல் தொடர்பில் முறைசாரா விதத்தில் அவர்கள் அறிவைப் பெற்றுக் கொண்டுள்ளதாக மாத்தளை மாவட்ட தாய் மற்றும் குழந்தை சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் நுவன் தோடவத்த. பிபிசி சிங்கள சேவையிடம் தெரிவித்துள்ளார்.



பாடசாலை கல்வியில் முறையான விதத்தில் இவற்றைக் கற்பிப்பதில்லை. அதனால் முறைசாரா விதத்தில் அவர்கள் இது தொடர்பான அறிவைப் பெற்றுக் கொண்டுள்ளனர். பெரியோரிடம். நண்பர்களிடம். பாலியல் திரைப்படங்களைப் பார்த்து இவ்வாறான அறிவைப் பெற்றுக் கொண்டுள்ளனர். தெளிவின்மை காரணமாகவே குழந்தைகள் கர்ப்பமடைகின்றனர். அவ்வாறானவர்களை நாங்கள் சந்திக்கின்றோம்.``

இலங்கையில் 12 முதல் 14 வயது குழந்தைகளுக்குக் கூட இது தொடர்பில் தெரியாது. துஷ்பிரயோகம் செய்பவர்கள் பெரியவர்களாக இல்லாத போதிலும் கூட அவர்கள் அது குறித்து அறிந்திருக்க மாட்டார்கள்` என அவர் கூறுகின்றார்.

குழந்தைகள் ஆபத்தில் விழும் சந்தர்ப்பங்கள் தொடர்பான தெளிவு வழங்கப்படுவதில்லை எனக் கூறும் மருத்துவ அதிகாரி தோடவத்த. எதிர் காலத்தைத் திட்டமிடும் வகையிலான கல்வி இல்லாமையானது. பாரிய பிரச்னை எனத் தெரிவிக்கின்றார்.

துஷ்பிரயோகத்தை ஒரு புறத்தில் வைப்போம். எமது இளைய சமூகத்தில் குறிப்பிடத்தக்க அளவிலான குழந்தைகள் 18 வயதில் திருமணம் செய்து கொண்டு. 19 வயதில் குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் தங்களுக்கென ஒரு குடும்பம் என்ற கற்பனை உலகத்திற்குள் விரைவாகப் பிரவேசிக்க முயல்கின்றனர்.`` இந்தக் குழந்தைகள் ஆபத்தில் விழக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பில் தெளிவு வழங்கப்படுவதில்லை. உதாரணமாக சமூக ஊடகப் பயன்பாட்டைக் கூற முடிகின்றது. அவ்வாறான இடத்தில் அதிக ஆபத்து எந்த இடத்தில் இருக்கின்றது. அதை புத்திசாதுரியமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பவை எந்தவோர் இடத்திலும் கல்வி முறையில் கற்பிக்கப்படவில்லை`` என அவர் குறிப்பிடுகின்றார்.

குழந்தைகளுக்கு பாலியல் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொடுக்கும் வயது தொடர்பில் டாக்டர் நுவன் தோடவத்தவிடம் வினவப்பட்டது.

சிறு வயது முதலே. தமது உடலிலுள்ள உறுப்புகள் குறித்த தெளிவு கிடைக்கும் சந்தர்ப்பத்திலேயே. சிறிது சிறிதாக இந்த அறிவை வழங்க ஆரம்பிக்க வேண்டும். மூன்று வயது குழந்தைக்கு மாதவிடாய் சுழற்சி புரிவதில்லை. எனினும். வயிற்றைப் பிடிப்பது. முகத்தைப் பிடிப்பது. மார்பைப் பிடிப்பது புரியும்.``

குழந்தைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக இது தொடர்பான கல்வியை ஆரம்பிக்க வேண்டும் என அவர் குறிப்பிடுகின்றார். குறிப்பிட்ட வேலைத் திட்டத்தின் ஊடாக கல்வி முறையில் இவ்வாறான சம்பவங்களைக் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். நன்றி:- பிபிசி

# யார் இந்த டொட்ரிகோ டுட்டெர்டே?

போதைப்பொருட்களை ஒழிப்பதற்காக டுடேர்டே நடத்திய போராட்டத்தின் போது 30.000 பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் நீதிமன்றமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி) இது குறித்து விசாரணை நடத்தியது.

இந்நிலையிலேயே அவருக்கு பிடியாணையும். இன்டர்போல் சிவப்பு அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கைது செய்யப்பட்ட டுடேர்டே தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளர்.

கைது சட்டவிரோதமானது எனவும். விமான நிலையத்தில் வழக்கறிஞர்களில் ஒருவரை டுடேர்டேவைச் சந்திக்க பொலிஸார் அனுமதிக்கவில்லை எனவும் டுடெர்ட்டேவின் முன்னாள் சட்ட ஆலோசகர் சால்வடார் பனெலோ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியான இவர் தன்னை பற்றி பெருமிதமாக பேசிக் கொள்வதில் விருப்பம் உள்ளவர்.

தனது இளம் வயதில் மோட்டார் சைக்கிளில் துப்பாக்கியுடன் குற்றவாளிகளை தேடியலைந்ததையும். 16 வயதில் ஒருவரை கத்தியால் குத்திக் கொன்றதையும் அவர் பெருமையுடன் கூறியவர்.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த பெண்ணொருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்பை தவறவிட்டமை குறித்து 2016 இல் அவர் தெரிவித்திருந்தார். அந்த பெண் 1989 இல் சிறையில் கொல்லப்பட்டார்.



2016இல் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் தனது ஈவிரக்கமற்ற போதைப் பொருளிற்கு எதிரான போரை ஹிட்லரின் யூத அழிப்பு நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டிருந்தார்.

ஹிட்லர் 3 மில்லியன் யூதர்களை கொலை செய்தார் பிலிப்பைன்சில் போதைப் பொருளிற்கு அடிமையான மூன்று மில்லியன் பேர் உள்ளனர் அவர்களை படுகொலை செய்வது குறித்து நான் மகிழ்ச்சியடைவேன் என்றார்.

பெண்களை இழிவு செய்தல் தன்னை பற்றிய மிகைப்படுத்தி கதைத்தல் பத்திரிகைகளை தாக்குதல் ஆகியவற்றை விரும்பும்பவரான ஒரு ஜனரஞ்சகவாதியான பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடெர்டே ஆயிரக்கணக்கானவர்களை கொலை செய்த போதைப்பொருளிற்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்தமைக்காக கைதுசெய்யப்பட்டுள்ளார். மனிலா விமான நிலையத்திற்கு அவர் வந்த வேளை சர்வதேச பொலிஸாரின் பிடியாணை அவருக்கு வழங்கப்பட்டது.

அவருடைய பதவிக்காலத்தில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இடம் பெற்றது குறித்து விசாரணைகளை மேற் கொண்டுள்ளதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மின்டானாவோவில் உள்ள டாவோ நகரத்தின் முன்னாள் வழக்குதொடுநரும் மேயருமான டுட்டெர்டே போதைப்பொருள் குற்றங்களை ஒழிப்பதாக வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் 2016இல் பிலிப்பைன்ஸ் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அவர் ஈடுபட்டதால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதுடன் அவர்களின் உடல்கள் மனிலா குடாவில் உள்ள மீன்களிற்கு உணவாக வழங்கப்பட்டன.

இவர் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் போதைப் பொருள் ஒழிப்புநடவடிக்கைகளின் போது 30.000 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் வறிய மக்கள்நகரப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் பொலிஸாரினால் இனந்தெரியாத குழுக்களினால் சுடப்பட்டார்கள்.

தண்டனை வழங்குபவர் என அழைக்கப்பட்ட 79 வயது டுட்டெர்டே 15 வயதில் துப்பாக்கி வைத்திருந்தமைக்காக பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டவர் .

அவர் சில பாடசாலைகளில் இருந்து நீக்கப்பட்டார். தனது சக மாணவன் ஒருவன் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தார். ஆனால் எதற்காகவும் தண்டிக்கப்படவில்லை தப்பினார் இவரை கடுமையாக விமர்சித்தவரான பிலிப்பைன்சின் செனெட்டர் அந்தோனியோ டிரிலேன்ஸ் ஒரு முறை கார்டியனிற்கு தெரிவித்தார்.

இதுவே தண்டனையிலிருந்து விடுபடும் மனோநிலையை அவரிடம் உருவாக்கியிருக்கலாம் அவர் ஒரு போதும் தண்டிக்கப்படாததால் அவர் கொலைகளில் ஈடுபட்டார். தனது விருப்பம் போல செயற்பட்டார் என செனெட்டர் தெரிவித்திருந்தார்.

சர்வதேச குற்றவியல் நீதின்றத்தின் பிடியாணையின் கீழ் கைது செய்யப்பட்ட முதல் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி இவராவார்.

# அதிகாரப் பகிர்வு யோசனை முன் வைக்கப்படாத பட்சத்தில் புதிய அரசியல் அமைப்பிற்குச் செல்வது ஆபத்தானது! ஒற்றுமை இல்லா விட்டால் பேரம் பேசும் சக்தியை இழப்போம்!

அதிகார பகிர்வு குறித்த யோசனை முன்வைக்கபடாத பட்சத்தில் தமிழ் மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் புதிய அரசியல் அமைப்பிற்கு செல்வது ஆபத்தானது என தெரிவித்துள்ள பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் நாங்கள் ஒற்றுமைபட வேண்டும் ஒற்றுமை இல்லாவிட்டால் வடக்கில் தென்னிலங்கை கட்சிகள் பலம் பெறும் நிலை ஏற்படும், தமிழ்தேசிய கட்சிகள் செல்வாக்கு இழக்கும் நிலை உருவாகும் நாங்கள் பேரம்பேசும் சக்தியை இழக்கவேண்டிய நிலையேற்படும்என எச்சரித்துள்ளார்

டிபிஎஸ் ஜெயராஜ் எழுதிய அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம் நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய வேளை இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது. அரசமைப்பு மாற்றம் வேண்டுமா என்றால் புதிய அரசமைப்பு வேண்டுமா என்றால் வேண்டாம் என்றே சொல்வேன். என்னுடைய நிலைப்பாடு இது தான்.

இந்த நூலின் இறுதியில் தேர்தல்களின் பின்னர் வடக்குகிழக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்தின் யாழ்ப்பாணத்தின் அரசியல் கோட்டையாகயிருந்த பல தொகுதிகளை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

தமிழ்மக்கள் இவ்வளவு வெற்றியை தருவார்கள் என தேசிய மக்கள் சக்தி கூட எதிர்பார்க்கவில்லை.

தென்னிலங்கை அரசியலின் பலவீனங்களே இதற்கு காரணம்.

ரணில் சஜித் இருவரும் இணைந்து போட்டியிட்டிருந்தால் அனுரகுமார இவ்வளவு பெரிய வெற்றியை பெற்றிருப்பாரா என்பது சந்தேகமே.

கோட்டாபய ராஜபக்ச பெரு வெற்றிக்கு பின்னர் அடைந்த பெரும் தோல்வியும் ஊழல்கள் குறித்த பெரும் விரக்தியும் தென்னிலங்கை அரசியல் பலவீனங்களிற்கு காரணம்.

தேசிய மக்கள் சக்தியினர் தங்களை இடதுசாரிகள் என அடையாளப்படுத்த விரும்பவில்லை.

கிழக்கு மாகாணத்தில் வீட்டிற்கு வெற்றிகள் கிடைத்தது அம்பாறையில் ஒருவர் வெல்வது சாத்தியமா என்ற கேள்வி காணப்பட்ட நிலையில்




பேராசிரியர் சர்வேஸ்வரன்

அம்பாறையிலும் திருகோணமலையிலும் ஒவ்வொரு ஆசனங்களை கைப்பற்ற முடிந்தது.

வடமாகணத்தில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி குறித்து இப்படி கூறலாம்.

வடமாகாணத்தில் வீடுகளில் பெண்கள் காதல் வயப்படுவார்கள், அவ்வாறு நடந்தால் அந்த வீடு பிரச்சினைக்குரிய வீடு அங்கு பிரச்சினை உள்ளது என தெரிவிப்பார்கள்.

பெற்றோர்கள் மத்தியில் பிரச்சினை இருந்தால் வேறு ஒருவர் வரும் போது அந்த பெண் காதல் வயப்படுவார். அந்த நிலை தான் வட மாகாணத்திற்கு ஏற்பட்டது.

வடமாகாணத்தில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறவில்லை தமிழ்தேசிய கட்சிகள் தேசியமக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்தன.

கட்சிகளுக்குள் பிரச்சினை, கட்சிகளிடையே பிரச்சினை காலவதியாகிவிட்ட அரசியல்வாதிகள் அரசியல் செய்ததும் ஒரு காரணம்,

சுயேட்ச்சை குழுக்கள் மிக அதிகளவில் வாக்குகளை சிதறடித்தன. தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்தது பெரும் வெற்றி என்பதை விட அவர்கள் வெல்லவைக்கப்பட்டார்கள். தமிழ்த் தேசியம் தோற்கடிக்கப்படவில்லை அது தோற்கவில்லை.

தமிழர் பகுதிகளில் சமஸ்டி வேண்டுமா என சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினால் முடிவு வேறு விதமானதாக காணப்படும். ஆம் என்று தான் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள்.

கோட்டாபய அரசாங்கம் அமைத்த குழுவில் நான் இருந்தேன். ஆனால் நான் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அந்த குழுவினரின் பல பரிந்துரைகளை நான் ஏற்கவில்லை.

கோட்டாபய காலத்தில் முன்மொழியப்பட்ட புதிய அரசியல் அமைப்பில் சமஸ்டி குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுப்பதை நான் எதிர்த்தேன் - மதம் வேறு அரசியல் வேறு.

13வது திருத்தம் என்ற பெயர் பலகையை வைத்துக் கொண்டு எந்த அதிகாரம் இல்லாத ஒன்றை கொண்டு வர முயன்றார்கள். நான் உடன்படவில்லை.

சந்திரிகா குமாரதுங்க கொண்டுவந்த அரசமைப்பு யோசனை முன்னேற்றகரமானது என நான் குறிப்பிடுவேன். ஆனால் அதனை எதிர்த்த வரலாறு ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கியதேசிய கட்சிக்கும் உள்ளது.

புதிய அரசியல் அமைப்பிற்கு தமிழ் மக்கள் தமிழ் கட்சிகள் செல்ல வேண்டுமா என்றால் வேண்டாம் என்றே தெரிவிப்பேன்.

தேசிய மக்கள் சக்தியினர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்து தெரிவித்துவந்தார்கள். அதனை பேச்சுவதை விட்டு விட்டார்கள்.

எங்கள் இனப்பிரச்சினைக்கு நாங்கள் எதிர்பார்க்கும் தீர்வு வரும்வரை புதிய அரசமைப்பு முயற்சிகளை நாங்கள் ஏற்ககூடாது.

எங்கள் இனப்பிரச்சினைக்கு முன் வைக்கப்படுகின்ற எந்த தீர்வும் 13வது திருத்தத்திற்கு மேலானதாகயிருக்க வேண்டும்

இந்த அரசாங்கத்திடம் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான பலம் உள்ளது மூன்றில் இரண்டு உள்ளது சர்வஜன வாக்கெடுப்பிற்கு கூட இவர்கள் செல்லலாம். ஆனால் அவர்கள் அதனை செய்யமாட்டார்கள் தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்க முடியாது, செத்த வீட்டில் அடிபட்டுக் கொண்டிருக்க முடியாது.

தென்னிலங்கை மக்களிற்கு 13வது திருத்தம் குறித்து இன்னமும் அச்சம் உள்ளது அது குறித்து தமிழ் கட்சிகள் தெளிவுபடுத்த வேண்டும். குடாநாட்டு அரசியலை மாத்திரம் செய்து கொண்டிருக்க முடியாது.

இருக்கின்ற மாகாணசபை முறைமையை முழுமையாக பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் முயல வேண்டும், இந்த அரசாங்கத்தில் இது சாத்தியமானதா என தெரியவில்லை.

அதிகார பகிர்வு குறித்த யோசனை முன் வைக்கபடாத பட்சத்தில் புரிய அரசியல் அமைப்பிற்கு செல்வது ஆபத்தானது,

இந்த அரசாங்கம் புதிய அரமைப்பில் அதிகார பகிர்வை முன் வைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

தமிழ் அரசியல் கட்சிகள் இந்த பாதையில் சென்று கொண்டிருந்தால் அது தமிழ்தேசிய அரசியல் தமிழ் அரசியல் செல்வாக்கு இழக்கும் நிலையை ஏற்படுத்தும்.

நாங்கள் ஒற்றுமைபட வேண்டும் வேண்டும், ஒற்றுமை இல்லாவிட்டால் வடக்கில் தென்னிலங்கை கட்சிகள் பலம் பெறும் நிலை ஏற்படும், தமிழ் தேசிய கட்சிகள் செல்வாக்கு இழக்கும் நிலை உருவாகும்.நாங்கள் பேரம் பேசும் சக்தியை இழக்கவேண்டிய நிலையேற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# காஸா குறித்து ட்ரம்ப் பேச்சுக்கு கோல்ப் மைதானத்தில் பதிலடி கொடுத்த பாஸ்தீனக் குழுவினர்

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு இடையேயான போர், பல தசாப்தங்களாக நடைபெற்று வருகிறது. இதில் காஸாவில் கடந்த 16 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த போரை முடிவுக்குக் கொண்டு வர இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு இடையே ஒப்பந்தம் ஏற்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கிடையே இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முதல் கட்டம் தற்போது அமலில் உள்ள நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் காஸாவில் பாலஸ்தீனிய மக்கள் அனைவரையும் வெளியேற்றிவிட்டு அதனை ஒரு கடற்கரை சுற்றுலாத்தலமாக மாற்றலாம் என்ற திட்டத்தை முன்வைத்தார். இது தொடர்பாக ஏஐ மூலம் சித்தரிக்கப்பட்ட வீடியோ ஒன்று கூட கடந்த வாரம் இணையத்தில் வைரலானது. அதேநேரத்தில், ட்ரம்பின் திட்டத்துக்கு மாற்றாக எகிப்து ஒரு திட்டத்தை முன் வைத்தது. இந்தத் திட்டம் காஸாவில் உள்ள 20 லட்சம் பாலஸ்தீனியர்களை அகற்றாமல் 2030 ஆம் ஆண்டுக்குள் காஸாவை மறுகட்டமைப்பு செய்வதற்கானது.

அதாவது பாலஸ்தீனிய மக்களை அகற்றாமல் அவர்களுக்கு புதிய வீடுகளைக் கட்டித் தருதல், வேளாண் நிலங்களை மறுசீரமைத்தல், புதிய தொழிற்சாலைகளை தொடங்குதல் உள்ளிட்டவையே எகிப்தின் திட்டமாக உள்ளது. இதற்கு அரேபிய நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன. இதற்கிடையே, காஸா குறித்த ட்ரம்ப்பின் பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தென்மேற்கு ஸ்காட்லாந்தில் உள்ள அவருடைய டர்ன்பெர்ரி கோல்ஃப் மைதானத்திற்குள் பாலஸ்தீன குழுவினர் சிலர் புகுந்து, அங்குள்ள புல்வெளி பகுதியில் ‘காஸா விற்பனைக்கு இல்லை’ எனப் பிரமாண்டமாக எழுதி வைத்துள்ளனர்.

மேலும், கோல்ஃப் மைதானம் முழுவதும் குழிகள் தோண்டப்பட்டு, ’ட்ரம்ப் காஸாவை தனது சொத்தாகக் கருத முயற்சித்தால், அவரது சொந்த சொத்து தங்களால் சூறையாடப்படும்’ என பாலஸ்தீன குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக ஸ்காட்லாந்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஆண்கள்




கோல்ஃப் விளையாட்டின் நான்கு முக்கிய சாம்பியன்ஷிப்களில், மிகப் பழமையான பிரிட்டிஷ் ஓபனை நடத்த சுழற்சி முறையில் நடத்தப்படும் 10 மைதானங்களில் டர்ன்பெர்ரியும் ஒன்றாகும். இருப்பினும், 2014ஆம் ஆண்டு ட்ரம்ப் இதை வாங்கி புதுப்பித்த பிறகு, பிரிட்டிஷ் ஓபன் எதையும் இங்கு நடத்தவில்லை.







# பிரான்ஸின் மருத்துவத்துறையில் புதிய கருவியொன்றினை உருவாக்கி கவனத்தைப் பெற்றுள்ள ஈழத்தமிழன் தேர்வு வாக்குக்கு அழைப்பு

புலம்பெயர் ஈழத்தமிழர்கள் மூன்றாவது தலைமுறையினை எட்டிவிட்ட நிலையில் இளைய ஈழத் தலை முறை பல்வேறு துறைகளிலும் சாதனை புரிந்து வருகின்றது. அந்த வகையில் பிரான்சின் மருத்துவத்துறையில் புதிய கருவியொன்றினை உருவாக்கி கவனத்தை பெற்றுள்ள சுஜீவன் முருகானந்தம் எனும் உயர்நிலை மாணவர் உலகத் தமிழர்களின் தேர்வு வாக்குக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மன இறுக்க உளப் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ள 4-12 வயதுக்குட்பட்ட இளம் சிறார்களின் அக-மன நிலையினை உணர்ந்தறியும் வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கை வளையல் கருவியொன்றினை உருவாக்கியுள்ளார்.

இக் கருவியூடாக அச்சிறார்களுக்கு ஏற்படுகின்ற மன இறுக்க உளப் பாதிப்புக்களை உடனடியாகவே கைபேசி வழியாக எச்சரிக்கும் திறன் கொண்டதோடு ஏற்படுகின்ற பாதிப்புக்களை முறையாக ஆவணப்படுத்தும் திறன் கொண்டதாகவும் இக் கருவி உருவாக்கம் பெற்றுள்ளது.

நாடளாவிய ரீதியில் இத்துறை சார்ந்து 81 பேர் இதனை உருவாக்கியிருந்த நிலையில், இவர்களில் 6 பேர் தேசிய அளவிலான இறுதித் தேர்வுக்கு சென்றுள்ளனர்.

ஒவ்வொருவரது உருவாக்க கருவியின் பயன்பாடு, அதன் அவசியம் குறித்தான ஆய்வுகளின் அடிப்படையில் மூன்று கட்டங்களாக இறுதிச்சுற்றில் கருவி தேர்வு செய்யப்படவுள்ளது. இதில் மூன்றாம் நிலையாக பொதுமக்களும் தங்களுக்கு தேவையான கருவியினை தேர்வு செய்ய முடியும்.



அந்தவகையில் இவர்களில் ஒருவராக சுஜீவன் முருகானந்தம் அவர்கள் “cœur léger” எனும் பெயரில் தனது கருவியை உருவாக்கியுள்ளார்.

இன்று மார்ச் 14ம் திகதி வெள்ளிக்கிழமை ஐரோப்பிய நேரம் மதியம் 12 மணிக்கு முன்னராக குறித்த https://gpseo.fr/prix-entrepreneur/coeur-leger-le-bracelet-qui-aide-les-enfants-gerer-leurs-emotions இந்த இணையத்தளத்துக்கு தேர்வுக்கான வாக்களிப்பினை மேற்கொள்ள வேண்டும்.

மின்னஞ்சல் பதிவுடன் சுஜீவன் முருகானந்தம், உருவாக்கியுள்ள “cœur léger” எனும் கருவியினை தேர்வு செய்யும் பட்சத்தில் ஈழத் தமிழர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வெற்றியாளராக தேர்வு செய்யப்படுவார்.

1995 யாழ்ப்பாண இடப் பெயர்வுக்கு பின்னராக கிளிநொச்சியில் தற்காலிகமாக வாழ்ந்து அங்கிருந்து 2000 ஆம் ஆண்டுகளில் 7 வயதில் பிரான்சில் கால் பதித்த இந்த மாணவரே சுஜீவன்முருகானந்தம் ஆவார்.

# அமெரிக்கா - ஆஸி தூதுவர்களுடன் தனித் தனியாக சுமந்திரன் சந்திப்பு!

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரனுக்கும், அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் வெஸ்லி ஸ்டீபன்ஸ் ஆகியோருக்கும் இடையில் இரு வேறு சந்திப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரகத்தில் 13 மார்ச் 2025 வியாழக்கிழமை நண்பகல் நடை பெற்ற சந்திப்பின் போது சமகால நிலைமைகள் சம்பந்தமாக உரையாடப்பட்டதாக சுமந்திரன் குறிப்பிட்டார்.

குறிப்பாக அரசியல் ரீதியாக தமிழ் மக்களின் நிலைப்பாடுகள், மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாக உயர்ஸ்தானிகர் மற்றும் அதிகாரிகள் கேட்டறிந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து மாலை, அமெரிக்கத் தூதரகத்தில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடன் சுமந்திரன் சந்திப்பை நடத்தியுள்ளார். இச் சந்திப்பு தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்க வெளியேறியுள்ள நிலையில் தமிழ் தரப்பினர் பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமை தொடர்பில் கருத்துக்கள் பரிமாற்றப்பட்டதாக கூறினார்.

அத்துடன் நடைபெறும் உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழரரசுக்கட்சி தனித்து போட்டியிடுவதற்கு தீர்மானித்தமைக்கான தொழில் நுட்பக் காரணத்தினையும் அமெரிக்கத் தூதுவரிடத்தில் தெளிவு படுத்தியதோடு அடுத்த கட்டச் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் கருத்துப்பகிர்வு நடைபெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# இதை வாசிப்பதற்கு முன் மனதைத் திடப்படுத்துங்கள் படலந்தை வதை முகாம் பற்றிய செய்தி!

1987 தொடக்கம் 1989 வரை ஆயிரக்கணக்கான JVP இளைஞர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சித்திர வதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட 'படலந்தை' வதை முகாமில் ஆயுதக் களஞ்சியப் பொறுப்பதிகாரியாக இருந்த ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர் ஏ. பீ. கருணாரத்ரன அவர்கள் ஒரு நேர் காணலில் வழங்கிய திரள் வாக்கு மூலத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இது.

◆ஊடகவியலாளர்: இந்த வாக்கு மூலத்தை நீங்கள் வழங்குவதால் உங்களுக்கு ஏதாவது உயிராபத்து ஏற்படும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

◆ ஏ. பீ கருணாரத்ரன: 'இந்த நேர்காணலிற்கு போக வேண்டாம்! என்று பலர் என்னை அச்சுறுத்தினார்கள். நான் யாருக்கும் கடனுமில்லை. பயமும் இல்லை. எனக்கு இப்போது 88 வயது என்னை இன்று கொலை செய்தாலும் பராவாயில்லை. நாளை கொலை செய்தாலும் பராவாயில்லை. நாங்கள் வாழ்ந்த காலம் முடிந்து விட்டது.

◆ ஊடகவியலாளர்: நீங்கள் யார் ? உங்கள் பதவி என்ன?

◆ ஏ. பீ.கருணாரத்ரன, ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர். இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன அவர்களின் ஆலோசனைக்கு அமைய 'படலந்தவில்' ஆயுதக் களஞ்சியப் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றேன்.




◆ ஊடகவியலாளர்: படலந்த என்றால் என்ன?

◆ ஏ. பீ கருணாரத்ரன: 'படலந்த' என்பது காடு அல்ல. கொழும்பிலிருந்து கிரிபத்கொடவிற்கு செல்லும் போது, கிரிபத்கொடயில் இருந்து மாத்தறை வீதிக்கு செல்லும் போது கொஞ்சம் தூரம் சென்ற பின் வலது பக்கம் சுமார் 20 ஏக்கர் அளவிலான தென்னந்தோப்பு ஒன்று இருக்கும். அதில் வேலை செய்யும் வேலையாட்களுக்கான களஞ்சிய அறைகள் உட்பட பல வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அதே 20 ஏக்கரில் பெரும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த கட்டிடங்களில் தான் வதை முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டன.

◆ ஊடகவியலாளர்: 'படலந்தவில்' என்ன நடந்தது?

◆ ஏ. பீ கருணாரத்ரன : படலந்தவிற்கு (JVP உறுப்பினர் - ஆதரவாளர் என சந்தேகிக்கப்படும்) ஒருவரை கொண்டு வந்தால் முதலில் அவர்களைத் தலை கீழாகத் தொங்க விடுவார்கள். அதன் பிறகு அவர்களின் இரு காதுகளிற்கு பெரிய இரும்பு ஆணி அடிக்கப்படும். கண்களிற்கு தையல் ஊசியால் குத்துவார்கள். கண்ணாடித்துண்டுகளை சாப்பிடக் கொடுப்பார்கள். சாப்பிடா விட்டால் பலமாக அடித்து சாப்பிட வைப்பார்கள். சாப்பிடும் போதே அந்த கண்ணாடி துண்டுகள் உடல் பாகங்களை





கிழித்துக் கொண்டு வெளியே வரும். சூடாக்கப்பட்ட இரும்புக் கோலினால் முதுகில் சூடு வைப்பார்கள்.

இவற்றை செய்யும் போதே அந்த மனிதர் அரைவாசி இறந்த விடுவார். பின்னர் கீழே இறக்கி பொலித்தீன் உறைகளில் போடுவார்கள். பின்னர் விசாலமாக வெட்டப்பட்டுள்ள குழிகளில் அவர்களை போட்டு அவர்களுக்கு மேல் டயர்களை போட்டு கொளுத்துவார்கள். இங்கே இடம் போதாத சந்தர்ப்பங்களில் சிலரை 'மட்டக்குளியில்' உள்ள குப்பை சேகரிக்கும் இடத்திற்கு கொண்டு சென்று அங்கே ரொட்டி போடும் தட்டு போல் ஒரு பெரிய தட்டு இருந்தது. அதில் போட்டு கொளுத்து வார்கள்.

◆ ஊடகவியலாளர்: அவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களுள் யாராவது விஷேடமானவர்கள் இருந் தனரா?

◆ ஏ. பீ கருணாரத்ரன : விஜயதாஸ லியனாரச்சி இவர் அக் காலத்தில் திறமைமிக்க ஒரு சட்டத்தரணி. பெரும்பாலான காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைப் பற்றியே இவர் நீதிமன்றங்களில் வாதிட்டார்.

◆ ஊடகவியலாளர்: அவருக்கு என்ன நடந்தது?

◆ ஏ. பீ. கருணாரத்ரன: இவர் ஒரு நாள் ஒரு வழக்கிற்காக வாதிட்டு விட்டு வெளியே வரும் போது சிவில் ஆடை அணிந்த 4 பொலிஸ் அதிகாரிகள் வந்து வழக்கொன்றிற்காக வாதாட வேண்டி உள்ளதாக கூறி வெள்ளை வேன் ஒன்றில் ஏற்றி 'தங்காலை' பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே கரவிட்ட என்ற ஏ. எஸ். பீ.(Additional Superintendent of Police) ஒருவர் இருந்தார். அவர் பல கேள்விகளை இவரிடம் கேட்டார். இவர் எதற்கும் பதில் கொடுக்காமல் மௌனமாக இருந்தார். பின் அவரை பல முறை அடித்து கேள்விகளை கேட்டார். எதற்கும் இவர் பதில் அளிக்காததால் 'படலந்தவிற்கு' அழைத்து வரப்பட்டார்.

அங்கு கொண்டு வரும் போதே அவர் அரைவாசி இறந்த நிலையிலேயே இருந்தார். அங்கு கொண்டு வரப்பட்ட உடன் டக்ளஸ் பீரிஸ் என்ற அதிகாரி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவிற்கு செய்தி அனுப்பினார்.

உடனே ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும், ரணில் விக்கிரமசிங்கவும் ஒரே வாகனத்தில் அங்கு வந்தனர். அவர்களும் முடியுமான அளவு கேள்விகளை கேட்டனர். ஆனால் அந்த சட்டத்தரணி எதற்கும் பதில் கொடுக்காமல் மௌனமாகவே இருந்தார். அவருக்கு பதில் கொடுக்கும் அளவிற்கு கூட உயிர் இருக்கவில்லை. அதன் பின்னர் இருவரும் டக்ளஸ் பீரிஸிடம் இந்த சட்டத்தரணியை முடியுமான அளவு சித்திரவதை செய்து கொலை செய்யுமாறு பணித்தனர்.

அதன் பின்னர் அந்த சட்டத்தரணியின் இரு கண்களும் பிடுங்கப்பட்டு மிளகாய்த் தூளை முகத்தில் போட்டனர். நான் ஆயுத களஞ்சியசாலையில் இருந்து மிகவும் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னர் முடியுமான அளவு சித்திரவதை செய்தனர். மாலை 5 அல்லது 6 மணியளவில் அவர் உயிர் அவரது உடலை விட்டு சென்றது.

அன்று இரவே பெரிய வைத்திய சாலைக்கு அருகில் அவரின் உடலை போட்டுவிட்டு வந்தனர். காலையில் சடலத்தை கண்ட மக்கள் வைத்தியசாலையின் பிணவறையில் கொண்டு சென்று வைத்தனர். பிணவறையில் அவர் உடல் வெட்டப்பட்டு மரண பரிசோதனை செய்யப்பட்டு 46 உட்காயங்கள் காரணமாக இரத்தம் அதிகமாக வெளியேறி உயிரிழந்ததாகக் கூறினர். பின்னர் அவரின் அண்ணாவை அழைத்து அவரது சடலம் கையளிக்கப்பட்டது. அவரது கண்கள் இருந்த இடத்தில் ஏதோ ஒன்றை நிரப்பியிருந்தனர்.

◆ ஊடகவியலாளர்: கண்களால் கண்ட உங்களால் மறக்க முடியாத சம்பவங்கள் ஏதாவது உள்ளதா?

◆ ஏ. பீ கருணாரத்ரன: ஆம். களுத்துறை பிரதேசத்தில் நடந்த சம்பவம். தென் மாகாணத்திற்கு பொறுப்பாக 'விஜயசூரிய' என்ற ஒரு இராணுவ கேப்டன் இருந்தார். அவரின் அம்மாவின் வீடு 'வேயங்கொட' பாடசாலைக்கு அடுத்த காணியில் இருந்தது. JVP யினர் சிலர் வந்து அவரின் அம்மாவின் தேசிய அடையாள அட்டையையும், பணத்தையும் எடுத்துச் சென்றனர். அவரது மகனை உடனடியாக இராணுவத்தில் இருந்து வெளியேறுமாறும் கூறி விட்டு சென்றனர்.

மகன் வந்தவுடன் அம்மா நடந்ததை கூறியதும் கோபமடைந்த கேப்டன் விஜயசூரிய லொறி ஒன்றை எடுத்துச் சென்று களுத்துறை பிரதேசத்தில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுக் கொண்டிருந்த உயர்தர வகுப்பிற்கு டியூஷன் சென்று அங்கு கற்றுக் கொண்டிருந்த மாணவிகள் உட்பட 20 பேரை படலந்தவிற்கு அழைத்துக் கொண்டு வந்து மாணவிகள் அனைவரையும் துஷ்பிரயோகம் செய்து ஆண் மாணவர்களை படுக்க வைத்து இரும்பு சுத்தியலால் தலையில் பலமுறை அடி




த்து பின்னர் பொலித்தீன் உறைகளில் அவர்களது உடல்களை போட்டுக் கொண்டு அந்த கேப்டனின் அம்மாவின் வீட்டுக்கு அருகில் பாடசாலைக்கு முன்பாக அவர்கள் உடல்கள் மீது டயர்களை இட்டு கொளுத்தினர். அவர்களை முதலில் டியூசன் வகுப்பில் இருந்து கொண்டு வரும் போது அனைவரும் பயத்தினால் கதறி அழுதனர். சிலர் 'எங்கள் அம்மாவை ஒரு முறை எங்களுக்குக் காண்பித்து விட்டு எங்களைக் கொலை செய்யுங்கள்! என்று கெஞ்சினர்.

◆ ஊடகவியலாளர்: இது போன்ற சித்திரவதைகள் 'படலந்தவில்' மாத்திரமா மேற்கொள்ளப்பட்டன?

◆ ஏ. பீ கருணாரத்ரன : படலந்தவிற்கு பெரும்பாலும் கொண்டு வரப்பட்டவர்கள் பிற இடங்களில் வசித்தவர்கள் ஹபராதுவை வரை ,அம்பலங்கொட பலப்பிட்டிய (32ம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக்கட்சியை பிளவுபடுத்த உள்ளும் புறமும் முயற்சி!

சிங்கள தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக செயற்படுபவர்களே இலங்கைத் தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்த உள்ளும் புறமும் முயற்சிக்கிறார்கள். கட்சியின் யாப்பின் அடிப்படையில் தான் நான் பதில் தலைவராக செயற்படுகிறேன். சுமந்திரன் பதில் செயலாளராக செயற்படுகிறார். தமிழர்களின் பாரம்பரியமான தமிழரசுக் கட்சியை ஒருபோதும் பிளவுப் படுத்த முடியாது. கட்சியின் 8 பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் கொள்கைக்கு முரணாக செயற்பட மாட்டார்கள் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவருடைய காரியாலயத்தில் 13 மார்ச் 2025 வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைத் தமிழரசுக் கட்சி புதிய அரசியல் கட்சியாக உருவாக்கப்படுவதாகவும், கல்விமான்கள், இந்தியாவில் உள்ள தமிழ் தேசியவாதிகள், புலம்பெயர் தமிழர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து புதிய தமிழரசுக் கட்சியை உருவாக்குவதாகவும், தமிழரசுக் கட்சியின் 8 பாராளுமன்ற உறுப்பினர்களில் 6 பேர் இதற்கு ஆதரவளித்துள்ளதாகவும், கட்சியை பிளவுப்படுத்தும் வகையில் ஒருசில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இவ்விடயம் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் 6 உறுப்பினர்களிடமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன். புதிய கட்சியை தோற்றுவிக்கும் சிந்தனை எவருக்கும் கிடையாது. பாரம்பரியமான இலங்கை தமிழரசுக் கட்சியை பிளவுப்படுத்துவதற்கு ஒரு தரப்பினர்கள் போலியான செய்திகளை வெளியிட்டுக்கொண்டுள்ளார்கள்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் கட்சிக்கு விசுவாசமாகவே உள்ளார்கள். தமிழரசுக் கட்சியை பிளவுப்படுத்த முயற்சிப்பவர்கள் அனைவருக்கும் 'தமிழரசு' என்ற சொல் தேவைப்படுகிறது.தமிழ் மக்களுக்கு உள்ள பாரம்பரியமாக பலமிக்க அரசியல் கட்சியை பிளவுப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றிப் பெறாது.

சிங்கள தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக செயற்படுபவர்களே இலங்கைத் தமிழரசுக் கட்சியை பிளவுப்படுத்த முயற்சிக்கிறார்கள். கட்சியின் யாப்பின் அடிப்படையில் தான் நான் பதில் தலைவராக செயற்படுகிறேன். சுமந்திரன் பதில் செயலாளராக செயற்படுகிறார். கட்சியின் யாப்புக்கு முரணாக நாமிருவரும் பதவிக்கு வரவில்லை.

மக்கள் மத்தியில் தவறான சித்தரிப்பை தோற்றுவிக்கவே ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். ஆகவே மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். தவறுகளை திருத்திக் கொண்டே செயற்படுகிறோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சிறந்த முறையில் நிர்வகிக்கும் தலைமைத்துவம் எம்மிடம் உள்ளதால் கட்சியை இலக்குப்படுத்தி போலியான பிரச்சாரங்களை ஒருதரப்பினர் முன்னெடுக்கிறார்கள். நடைமுறைக்கு சாதமான, பொறுப்பான சிந்தனைகளுடன் செயற்படுகிறோம்.

இடம் பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சிறந்த முறையில் வெற்றிப் பெறுவோம். தற்போதைய தேர்தல் முறைமையின் பிரகாரம் எந்த அரசியல் கட்சியும் அருதிப் பெரும்பான்மை பலத்தை பெறாது.தமிழ் தேசிய கொள்கையுடன் உள்ள தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம். அதில் பிரச்சினையொன்றுமில்லை.

மாகாணசபை முறைமை அமுல்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து மாவட்ட இணைப்பு குழுவின் இணைத்தலைவராக மாகாண ஆளுநர் பதவி வகித்துள்ளார். ஆனால் தற்போது இணைத்தலைவர் பதவி மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே எந்தளவுக்கு அரசாங்கம் மாகாண சபை முறைமையை விரும்புகிறது என்பதை இதனூடாக விளங்கிக் கொள்ள முடிகிறது. இலங்கைக்கு வருகைத் தரவுள்ள இந்திய பிரதமரிடம் மாகாண சபை முறைமை மற்றும் இதர விடயங்கள் குறித்து கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.




உள்ளூர் அதிகார சபை தேர்தலுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான அங்கிகரிக்கப்பட்ட முகவர்களை நியமிக்கும் நடவடிக்கைகளுக்காக 13 மார்ச் 2025 புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்திற்கு வருகைத ந்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை தங்களுடைய தனித்துவத்தை இல்லாமலாக்கும் முயற்சியில் பிறகட்சிகள் செயற்பட்டமையினாலேயே இம் முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தங்களது கட்சி தனித்துப் போட்டியிடுவதற்குத் தமிழ் மக்கள் கூட்டணி தீர்மானித்துள்ளதாக அதன் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் எந்தக் கட்சியுடன் இணைவது என்பது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் 12 மார்ச் 2025 புதன்கிழமை செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


ESTD - 1996

நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்

NAINATIVU CANADIAN DEVELOPMENT SOCIETY

Ontario not for profit corporation No: 1284680

Date of Issue of Letters, Patent: March 1996

80 Nashdene Road, C-70, Toronto Ontario. M1V 5E4

நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம் விடுக்கும்

2025ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்ட அறிவித்தல்!!!

காலம்: 22-March-2025 மாலை: 6:30 இடம்: தீபம் கலைக்கூடம்

2024ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கை சமர்ப்பித்தல், 2025, 2026 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும், சங்கத்தின் எதிர்கால நலன் கருதிய சிறப்பு சிந்தனைகளோடு கூடிய நல் ஆலோசனை ஆண்டு பொதுக்கூட்டம்.

பின்குறிப்பு:
சங்கத்தின் 2024 ஆண்டுக்கான அங்கத்துவ பொது சந்தா ($100) பணத்தினை பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக செலுத்தி தங்களது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்தி (2025)ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டத்திற்கு சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

"ஊருக்கு பலமாய் உறவுகளாய் இணைவோம்.....வாரீர்....."

இங்கனம்:
நிர்வாகசபை
நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்.

தொடர்புகளுக்கு:

| தலைவர் | செயலாளர் | பெருளாளர் | பத்திராதிபர் |
|---|---|---|---|
| ப. சுதாகரராசா | க. ந. ஜெயசிவதாசன் | மு. ரவீந்திரன் | சௌ. திருமாறன் |
| 416.823.0983 | 416.825.8083 | 416.579.4502 | 416.317.7544 |


VIBRANT HOSPITALIT GROUP
தமிலோசை வழங்கும்
Canada Tamil Music Festival
இசைக் குயில் 2025
25 YEARS
APRIL
SATURDAY
12
2025
3 PM ONWARDS
TICKET $20
VIP TICKETS
DURHAM CONVENTION CENTER
630 BRCK CRESCENT AJAX, ON L1Z 1C9 | 416 556 3219
Announcers
MUSICAL BAND
NATCHATHRAA MUSIC GROUP

# பனாமா கால்வாயை முழுமையாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது எப்படி? இராணுவத்தினடம் ஆலோசனை கேட்கும் டிரம்ப்



பனாமா கால்வாயை அமெரிக்கா தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான வழிவகைகள் குறித்து அமெரிக்க இராணுவத்திடம் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஆலோசனை கோரியுள்ளார் என இரண்டு அதிகாரிகள் ரொய்ட்டரிடம் தெரிவித்துள்ளனர்.

வட அமெரிக்காவிற்கும் தென் அமெரிக்காவிற்கும் இடையிலான சமவெளியின் மிக குறுகிய பகுதியில் அமைந்துள்ள உலகின் மூலோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நீர்வழிகளில் ஒன்றான பனாமா கால்வாயை அமெரிக்கா மீண்டும் தனது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வரவிரும்புவதாக ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பல முறை தெரிவித்துள்ளார்.

எனினும் அதனை இராணுவ வழிமுறை ஊடாக செய்யப் போகின்றாரா அல்லது வேறு வழிமுறையிலா என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

டொனால்ட் டிரம்பின் புதிய நிர்வாகத்தின் தேசிய பாதுகாப்பு வழிகாட்டுதல் என்ற இரகசிய ஆவணம் பனாமா கால்வாயை தடையின்றி அமெரிக்கா பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை இராணுவத்திடமிருந்து கோரியுள்ளது என பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பனாமா இராணுவத்துடன் இணைந்து செயற்படுவது உட்பட அமெரிக்க இராணுவத்திடம் பலவகையான சாத்தியப்பாடுகள் உள்ளன என மற்றுமொரு இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது குறித்த கேள்விக்கு பென்டகன் உடனடியாக பதிலளிக்கவில்லை என கார்டியன் தெரிவித்துள்ளது. இந்த இடைக்கால ஆவணம் குறித்த தகவலை முதன்முதலில் சிஎன்என் வெளியிட்டுள்ளது. பனாமா கால்வாயிற்கான சாத்தியப்பாடுகளை உருவாக்குமாறு அமெரிக்க இராணுவத்தை டிரம்ப்நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது என என்பிசி தெரிவித்துள்ளது. பனாமா கால்வாயை சீனா தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து அமெரிக்காவிற்கு எதிராக செயற்படக்கூடும் என ஆதாரமில்லாமல் தெரிவித்து வரும் டிரம்ப் அமெரிக்கா பனாமா கால்வாயை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என வாதிட்டு வருகின்றார்.

இது இவ்றிருக்க இரண்டாவது முறையாக டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டபின், நாடாளுமன்றத்தில் தனது முதல் மற்றும் முக்கியமான உரையை ஆற்றியிருக்கிறார். 'அமெரிக்க கனவைப் புதுப்பித்தல்' எனும் கருப்பொருளில் ட்ரம்ப் உரையாற்ற இருக்கிறார் என்று வெள்ளை மாளிகை ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ட்ரம்ப் தனது உரையைத் தொடங்கும் போதே, 'உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை' என ஜனநாயகக் கட்சியின் அல் க்ரீன் முழக்க மெழுப்பினார். உடனே குடியரசுக் கட்சியினர் 'USA! USA!' எனக் கோஷமிட்டனர். ட்ரம்பின் உரையைத் தொந்தரவு செய்ததற்காக சபாநாயகர் மைக் ஜான்சன், அல் க்ரீனை வெளியேற்றுமாறு உத்தரவிட்டார். க்ரீன் வெளியேறும் போது குடியரசுக் கட்சியினர் எழுந்து நின்று 'Get out!' என்றும் 'Goodbye!' என்றும் கோஷமிட்டனர்.

கடும் கூச்சல்களுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியில் ட்ரம்ப் உரையாற்றினார். அவரது உரையிலிருந்து சில முக்கியப் பகுதிகளை இங்கு காணலாம்.. பெரும்பாலான நிர்வாகங்கள் நான்கு அல்லது எட்டு ஆண்டுகளில் சாதித்ததை விட நாங்கள் 43 நாட்களில் அதிகமாகச் சாதித்துள்ளோம். மேலும், நாங்கள் இப்போது தான் தொடங்கியுள்ளோம்.

கடந்த நிர்வாகத்திடமிருந்து நாம் பொருளாதாரப் பேரழிவைப் பெற்றோம் என்பது உங்களுக்குத் தெரியும். 48 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மோசமான பணவீக்கத்தை நாம் சந்தித்தோம். அவர்களது கொள்கைகள் எரிசக்திகளின் விலைகளை உயர்த்தின, மளிகைப் பொருட்களின் விலைகளை அதிகரித்தன, அத்தியாவசிய தேவைகளையே மில்லியன் கணக்கான அமெரிக்கர்களுக்கு எட்டாதவாறு செய்தது.மற்ற நாடுகள் பல தசாப்தங்களாக நமக்கு எதிராக அதிக வரிகளை விதித்து வருகின்றன. இப்போது அந்த நாடுகளுக்கு எதிராக அவ்விதி முறைகளைப் பயன்படுத்தத் தொடங்குவது நமது முறை.

ஜப்பான், தென் கொரியா மற்றும் பிற நாடுகள் அலாஸ்காவில், பிரம்மாண்ட இயற்கை எரிவாயு குழாய் திட்டத்தில் அமெரிக்காவுடன் கூட்டு சேர விரும்புகின்றன. இந்த குழாய்திட்டம் உலகின் மிகப்பெரிய குழாய்திட்டங்களில் ஒன்றாக இருக்கும். குழந்தைகள் மீதான பாலியல் மாற்றங்களை நிரந்தரமாகத் தடை செய்யும் மசோதாவை காங்கிரஸ் நிறைவேற்ற வேண்டுமென விரும்புகிறேன் என்றார்.

# இதை வாசிப்பதற்கு முன் மனதைத் திடப்படுத்துங்கள் படலந்தை வதை முகாம் பற்றிய செய்தி!

(29ம் பக்கத் தொடர்ச்சி) வேயங்கொட , மீரிகம , திஹாரிய மற்றும் அத்தனகல்ல பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் தான் படலந்தையில் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

படலந்த போன்ற வதைக் கூடங்கள் சுமார் 46 நாடு முழுவதும் காணப்பட்டன. அவைகள் அனைத்தும் ரணில் விக்கிரமசிங்கவினால் அமைக்கப்பட்ட தொழிற் கிராமங்கள் ஆகும். சூரியகந்த வவுல்பெலே, மினுவங்கொட பலங்கொட உடவலை மற்றும் மல்மீகன்த என்பன சில உதாரணங்களாகும்.

◆ ஊடகவியலாளர் : படலந்தவிற்கு அடிக்கடி வந்து சென்றவர்கள் யார்

◆ ஏ. பீ கருணாரத்ரன: தினமும் ரணில் விக்கிரமசிங்க வந்து செல்வார். அதே போன்று கோணவில சுனில். கோணவில சுனில் வைத்தியர் ஒருவரின் மகளை கற்பழித்து கொலை செய்து சிறைவாசம் அனுபவித்துக் கொண்டு இருக்கும் போது ரணில் விக்கிரமசிங்கவினால் விடுதலை செய்யப்பட்டு சமாதான நீதிவானாக மற்றும் இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சில் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

◆ ஊடகவியலாளர்: பிரபல்யமான தேசிய அடையாள அட்டையை பறித்துக் கொண்டு செல்லுதல் தொடர்பான உங்கள் கருத்து என்ன?

◆ ஏ. பீ கருணாரத்ரன : உண்மை. 'கோணிபில்லா' என்ற ஒரு குழு தான் இதனைச் செய்தது. அதில் பெரும்பாலானோர் JVP இல் இருந்தவர்கள் தான் தேசிய அடையாள அட்டைகளை எடுத்து சென்றனர். கட்சிக்கு உதவுவதாக கூறி பணத்தை கொள்ளை அடித்தனர். JVP இனர் 3 கோணிப் பைகளில் (உரப்பை) தேசிய அடையாள அட்டைகளை எடுத்து வைத்திருந்தனர்.

நாங்கள் விசாரணைக்காக எல்லா வதைக் கூடங்களிற்கும் சென்றோம். அனைத்தினதும் தகவல்களை சேகரித்து இருந்தோம். ஆனால் 'படலந்தவிற்கு' மாத்திரமே வழக்கு தொடுக்கப்பட்டது. மற்றைய வதைக்கூடங்களிற்கு வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

அதே போன்று JVP யினர் வாக்களிக்க சென்ற 5 பேரை கொலை செய்து வாக்களிக்கும் இடத்திலேயே போட்டனர். இதுபோன்று சுமார் 225 பேர் கொலை செய்யப்பட்டனர்.

◆ ஊடகவியலாளர்: இவ்வளவு நடந்த பின்பும் ஏன் இவர்களுக்கு எதிராக சட்டம் எதையும் செய்யவில்லை?

◆ ஏ. பீ கருணாரத்ரன : நான் நீதிமன்றத்திற்கு சாட்சியளிக்க செல்ல இருந்தேன். ஆனால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க 'போக வேண்டாம்! என பயமுறுத்தினார். இருந்தாலும் நான் போனேன். போகும் போதே டக்ளஸ் பீரிஸ் பெயரை மாற்றி வெளிநாட்டிற்கு தப்பிச் சென்று விட்டார்.

இரண்டாவது பிரதிவாதியான நிஷங்க என்பவர் வீட்டிலேயே துப்பாக்கியினால் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு இறந்து போனார்.

◆ ஊடகவியலாளர்: ரணில் விக்கிரமசிங்க தற்போது அவ்வாறு எதுவும் நடைபெறவில்லைஎன்பது போன்று கூறி வருகிறாரே?

◆ ஏ. பீ கருணாரத்ரன : இன்று ரணில் விக்கிரமசிங்க அதைத் தருகிறேன். இதை செய்வேன் என்று கதை சொல்லித்திரிகிறார். ஆனால் அவரின் பழைய வரலாறு கொலையையும், வதையையும் ஊக்குவித்த ஒருவராகவே காணப்படுகிறார். புதிதாக அவர் ஒரு கூட்டத்தில் இதைக் கூறினார். அப்போது எனக்குப் பழைய (1980களின் இறுதி) 'சித்திரவதைக்கூடங்கள்' ஞாபகத்திற்கு வந்தது.

◆ ஊடகவியலாளர்: பழைய வரலாற்றை தெரியாத ஒருவருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

◆ ஏ. பீ கருணாரத்ரன: நீங்கள் ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களிக்க முன்னர் 88-89களில் என்ன நடைபெற்றது என்பதைத் தேடிப் படியுங்கள். பின்னர் புத்திசாலித்தனமாக வாக்களியுங்கள்.

பிற்குறிப்பு:

இவர் இந்த நேர்காணலில் கூறியது போல் JVP இனரால் தேசிய அடையாள அட்டைகள் திருடப்பட்டது உண்மை தான். தற்பாதுகாப்பிற்காக சில கொலைகள் செய்யப்பட்டன.

நானும் 2000 ஆவது ஆண்டுக்கு பிற்பாடு பிறந்தவன். நானும் இவர் சொன்னது போல் வாக்களிக்க முன் பழைய அரசியலில் 88-89 உண்மைத்தன்மைகளை ஓரளவு தேடிப் படித்தேன். எனக்குத் தெரிந்த மட்டில் JVPஇன் பெயரை வைத்து அவர்களின் கொள்கைக்கும் அரசியல் கோட்பாடுகளிற்கும் அப்பால் ஒரு அரச அங்கீகாரம் பெற்ற ஒரு குழு JVP பெயரை வைத்து பல அப்பாவிகளை கொலை செய்ததையும், இந்த குழுவில் இந்திய 'ரோ' அமைப்பினர் சிலரும் அரசினால் மறைமுகமாக கொண்டு வரப்பட்டு அராஜகம் செய்தாக பல நடுநிலை வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியாளர்களின் அறிக்கைகளில் எழுதப்பட்டிருத்ததை வாசிததேன்.

அன்றைய ஊடகங்களும் அரசாங்கம் எதைச் சொன்னதோ அதையே மக்களுக்குக் காட்டின ரூ கூறின. அடாவடித்தனத்திற்கும், ஊழலுக்கும் எதிராகக் குரல் கொடுத்ததால் 'கொடிய தீவிரவாதிகள்' என JVP யினரை முத்திரை குத்த அரசாங்கம் செய்த செயலாகவே பெரும்பாலான ஊடகவியலாளர் எழுதியிருந்தனர். இது தொடர்பாக இன்னும் ஆராய்ந்து எழுதவுள்ளேன்.

எது எப்படியோ இந்த வதை முகாம்களில் கொல்லப்பட்ட அப்பாவி இளைஞர்களுக்கு நீதியை நிலை நாட்டுவது தற்கால அரசாங்கத்தின் பொறுப்பாகும் சிலர் நினைக்கலாம் நான் JVP யை சுத்தப்படுத்த (வெள்ளையடிக்க) முனைவதாக. எழுதுவது என் விருப்பம். வாக்களிப்பதும் எனது உரிமை. விமர்சிப்பதற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது. சிங்களத்தில் இருந்து தமிழுக்கு AI தொழிநுட்ப மூலம் மொழி பெயர்ப்பு: Usaidh Muaaz கடும் தமிழில் இருந்து நடைமுறைத் தமிழுக்கு மொழி பெயர்ப்பு மற்றும் பதிவு ஆக்கம்: இரா.சொ. லிங்கதாசன், டென்மார்க்